விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஐப்பசி 06 திங்கட்கிழமை (23.10.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 308

# யாழ்ப்பாணத்தில் பதற்றம்



# துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் பலி

(யாழ்ப்பாணம்)

அரியாலை கிழக்கு, மணியந்தோட்டம் உதயபுரம் பகுதியில் இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப் பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலை அதி தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சுமார் ஏழு மணிநேரம் தொடர்ச்சியான தீவிர சிகிச்சையின் பின்னர் சிகிச்சை பலனின்றி நேற்றிரவு 9.15 மணியள வில் உயிரிழந்துள்ளார். (24ஆம் பக்கம் பார்க்க)





## அரசியல் கைதிகளுக்காக கையெழுத்து வேட்டை

(யாழ்ப்பாணம்)

பல வருடங்களாக எந்த வித விசாரணையும் இன்றி பயங்கரவாத தடைச்சட்டத் தின் கீழ் தடுத்துவைக்கப்பட் டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை எந்தவித நிபந் தனையும் இன்றி உடனடி யாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்று கோரி வடக்கு, கிழக்கு பல் 23☛

## ஆபத்தான நிலையில் கைதிகள்

(அநுராதபுரம்)

அநுராதபுர சிறைச்சாலை யில் உண்ணாவிரதமிருந்து வந்த, மூன்று தமிழ் அரசியல் கைதிகளும், சிறைச்சாலை வைத்தியசாலையில் 24☛

## மோ.சைக்கிளை எரியூட்டி சுதுமலையில் அடாவடி



(சுதுமலை)

சுதுமலை முருகன் ஆலய முன்றலில் நிறுத்தி வைக் கப்பட்டிருந்த 5 ற்கும் மேற் பட்ட மோட்டார் சைக் 23☛

## சடலத்தை பார்வையிட்ட நீதவான்



23☛

## தீய சக்திகளை தாண்டி புதிய அரசியலமைப்பு வரும்
## அமைச்சர் கிரியல்ல



(கொழும்பு)

தீய சக்திகளினால் தடை கள் ஏற்பட்டாலும் புதிய அர சியல் அமைப்பினை உரு வாக்கியே தீருவோம். நல்லி ணக்கத்திற்கு புதிய அரசியல் அமைப்பே ஒரே தீர்வு 23☛

ஐயனார் கோவில் வீதி
Van West
Whole Sale Distributors of SPC
+ NorthStar
PHRMERCEUTICAL DISTRIBUTORS (PVT) LTD
28, IYANAR KOVIL ROAD, VAN-WEST, JAFFNA.
நிகழும் மங்களகரமான ஏவிளம்பி வருடம் 23.10.2017 இன்று திங்கட்கிழமை நண்பகல் 12.05-12.30ற்கும் இடையில் உள்ள சுப வேளையில் திறந்து வைக்கப்படவுள்ளது.
Subsidary of MALBA GROUPS OF COMPANYS
T.P : 021 222 53000
(1098)

# அதிகார பகிர்வின் மூலம் தீர்வு காண முடியாது!
## கோத்தா விதண்டாவாதம்

(கொழும்பு)

யுத்தகாலத்தில் பிரிவினை வாதிகளுக்காக வெளிநாடு களில் நிதி சேகரித்தவர்களும் ஆயுதம் அனுப்பியவர்களுக் குமே புதிய அரசியலமைப்பு தேவைப்படுகிறது. அதிகார பகிர்வின் மூலம் பிரச்சி னைக்குத்தீர்வு கண்ட நாடு உலகில் எங்குமில்லை யென முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார். (மற்றுமொரு செய்தி உள்ளே)

## சுன்னாகத்தில் விபத்து இருவர் படுகாயம்

(சுன்னாகம்)

சுன்னாகம் சேச்சடி (கே.கே.எஸ்) வீதியில் நேற் றுக்காலை தனியார் பேருந் தும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானது.

யாழ்ப்பாணம் - அள வெட்டி தனியார் 23☛

## உள்ளூராட்சி சபை தேர்தல் ஏப்ரல் வரை ஒத்திவைக்கப்படலாம்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைகளுக் கான தேர்தல் எதிர்வரும் ஏப் ரல் மாதம் வரையில் ஒத்தி வைக்கப்படலாம் என தெரி விக்கப்படுகின்றது.

அடிப்படை விடயங்கள் சிலவற்றை பிரதானமாகக் கொண்டு தேர்தலை ஒத்தி வைக்கும் நிலைமை காணப் படுவதாக அரசாங்க தகவல் கள் தெரிவிக்கின்றன.

உள்ளூராட்சி சபைகளுக் கான உறுப்பினர்களின் எண்ணிக்கையை வர்த்த மானியில் அறிவிப் 23☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழ் அரசியல் கைதிகளுக்காக புலம்பெயர் தமிழர்கள் ஆர்ப்பாட்டம்

அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக தாயகத்தில் நடைபெற்று வருகின்ற போராட்டங்களுக்கு வலுச்சேர்க்கும் வகையில் புலம்பெயர் தமிழர்கள் லண்டனில் ஒன்று கூடி கவனயீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்துள்ளனர்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்போராட்டமானது நேற்று பிற்பகல் ஒரு மணி தொடக்கம் ஐந்து மணி வரை பிரித்தானிய பிரதமரின் அலுவலகத்திற்கு முன்பாக நடைபெற்றது

அரசியல் கைதிகளை உடன் விடுவிக்க வேண்டும், இராணுவம் அபகரித்து வைத்திருக்கும் மக்களின் காணிகளை மீள கையளிக்க வேண்டும், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான உண்மைகளை வெளியிட வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை முன் வைத்து இப்போராட்டம் நடைபெற்றதுடன், இது தொடர்பான மகஜர் ஒன்றும் பிரித்தானிய பிரதமருக்கு வழங்கப்பட்டது.

உண்ணாவிரதம் இருக்கும் அரசியல் கைதிகளின் உயிரோடு விளையாடாமல் விரைவான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியது கட்டாயம் என வலியுறுத்தி இப்போராட்டமானது முன்னெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (மு)

WESTERN UNION WU
moving money for better
அமெரிக்க லொத்தர் விசாக்களுக்கான பதிவுகளை முன்கூட்டியே எம்மிடம் பதிவு செய்து கொள்ளலாம்.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(சி-136)

விசேட கட்டணச்சலுகையில் புதிய பிரிவுகள் ஆரம்பம்

- Dip.in Information Technology
- Diploma in Office Automation
- Dip. in Pre-Press Desktop Publicating
- Diploma in Pc Applications
- Adv. Dip. in Hardware & Networking
- Dip. in Video Production & Multimedia
- Dip.in Web Designing & Development
- Dip. in Computerized Accounting
- Dip.in Auto CAD
- JAVA, C#, C++, php



Diploma in English
ஆங்கிலப் பேச்சுக்கு உத்தரவாதம்
SPOKEN ENGLISH
ஆங்கிலக் கல்வி
CERTIFICATE IN SPOKEN SINHALA

புதிய பிரிவு ஆரம்பம்
26/09/2017 (Thu) 9:30 a.m. OR 3:30 p.m.
06/10/2017 (Mon) 9:30 a.m. OR 3:30 p.m.

DMI COMPUTER EDUCATION

☑ அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
☑ Microsoft Online பரீட்சைகளுடாக Microsoft - அமெரிக்காவில் இருந்து தலைமை செயலதிகாரியின் கையொப்பத்துடனான Microsoft Specialist சான்றிதழ்கள்.
☑ இலகு தவணைக்கட்டண வசதிகள் ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.
(சி-144)

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கல்விக்கு
DMI COMPUTER EDUCATION

| No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | M.M.V.வீதி நெல்லியடி Tel.: 021-226 2470 | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775 | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970 | No.19,A9 வீதி, ஆனந்தபுரம் கிளிநொச்சி Tel.: 021-228 5655 |
|---|---|---|---|---|

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



விக்கினேஸ்வரன் மதுஷா (161 புள்ளிகள்)

2017-ம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த எமது பாடசாலை மாணவிகளான விக்கினேஸ்வரன் மதுஷா (161 புள்ளிகள்), சுபாகரன் பிரவீனா (156 புள்ளிகள்)



சுபாகரன் பிரவீனா (156 புள்ளிகள்)

ஆகியோர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்ட மாணவர்களையும் இவர்களை வழிப்படுத்திய ஆசிரியை திருமதி D.M.வித்தியானந்தநேசன் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை

(1078)

## பெருமையுடன் வாழ்த்துகின்றோம்

யா/இமையாணன் அ.த.க வித்தியாலய அதிபர்

### திரு. கு.ரவீந்திரன்



அவர்கள் BMICH கொழும்பில் இன்று (23.10.2017) திங்கட்கிழமை கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் சிறந்த அதிபருக்கான பிரதீபா பிரபா விருதைப் பெறுகின்றார். இன்னும் பல சாதனைகள் பெற்று வாழ்வில் வளம் பெற வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துக்களோடு:
விவேகானந்தா சனசமூக நிலையம்,
விவேகானந்தா முன்பள்ளி,
விவேகானந்தா விளையாட்டுக்கழகம்.
தொண்டைமானாறு கெருடாவில், தெற்கு

(சி-142)

ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான பண்பாட்டுக் கழகம் (UNESCO) வருடாந்தோறும் நடத்தும் உலகத்தாய் மொழிகள் தினத்தையொட்டி அமெரிக்க இலங்கைத் தமிழ்ச்சங்கம் பரலைஸ் நேசிங்கோமுடன் இணைந்து நடத்திய

# தமிழ்க்கட்டுரை, ஓவியப்போட்டி முடிவுகள் - 2017

## கட்டுரைப் போட்டி முடிவுகள் - 2017

### கட்டுரைப் போட்டி மேற்பிரிவு

| இல | மாணவர் முழுப்பெயர் | கல்வி கற்கும் பாடசாலை | நிலை |
|---|---|---|---|
| 01. | வர்சனா வரதராசா | யாழ்/இராமநாதன் கல்லூரி | 1-ம் இடம் |
| 02. | பி.மேரி கனிஸ்ரா லியோன் | மன்/புனித சேவியர் பெண்கள் கல்லூரி | 2-ம் இடம் |
| 03. | வி.ஜான்சிகா நந்தகுமார் | யாழ்/வேம்படி மகளிர் கல்லூரி | 3-ம் இடம் |
| 04. | நகுலகுமார் அபிராமி | கிளி/கிளிநொச்சி ம.வி | ஆறுதல் பரிசு |
| 05. | உதயநேசன் வானுஜா | யாழ்/நயினாதீவு ம.வி | ஆறுதல் பரிசு |
| 06. | மனோகரன் தேனிலா | கிளி/கறுக்காய்தீவு ம.வி | ஆறுதல் பரிசு |
| 07. | மேரிஜா குறூஸ் | மன்/புனித சேவியர் பெண்கள் கல்லூரி | ஆறுதல் பரிசு |
| 08. | அ.பிளின்டன் | யாழ்/புங்குடுதீவு ம.வி | ஆறுதல் பரிசு |
| 09. | துசிதா சச்சிதானந்த சிவகுமார் | வ/சைவப்பிரகாச ம.கல்லூரி | ஆறுதல் பரிசு |
| 10. | ஜெக்குமார் வைஸ்ணவி | மட்/புனித சிசிரியா பெண்கள் கல்லூரி | ஆறுதல் பரிசு |
| 11. | திவாகரன் அபிலக்சன் | வ/கோவிற்குளம் இந்துக் கல்லூரி | ஆறுதல் பரிசு |
| 12. | ஆரோக்கிய ஜெயபாலன் செல்சியா | மன்/புனித சேவியர் பெண்கள் கல்லூரி | ஆறுதல் பரிசு |
| 13. | சகாயம் சஜீபன் | வ/வவுனியா ம.ம.வி | ஆறுதல் பரிசு |

### கட்டுரைப் போட்டி கீழ்பிரிவு

| இல | மாணவர் முழுப்பெயர் | கல்வி கற்கும் பாடசாலை | நிலை |
|---|---|---|---|
| 01. | சிவநாதன் அபிசாயினி | மு/செம்மலை ம.வி | 1-ம் இடம் |
| 02. | கண்ணழகன் தாயகன் | கிளி/பரந்தன் அ.த.க பாடசாலை | 2-ம் இடம் |
| 03. | சி.இசைப்பிரியா | கிளி/முருகானந்தா கல்லூரி | 3-ம் இடம் |
| 04. | சுப்பிரமணியம் பௌசிகா | கிளி/பன்னாங்கண்டி இந்து தமி.க. பாடசாலை | ஆறுதல் பரிசு |
| 05. | பினோஜன் யோன் மேரி | யாழ்/நாரந்தனை றோ.க பாடசாலை | ஆறுதல் பரிசு |
| 06. | கந்தையா நிலானி | கிளி/பன்னாங்கண்டி இந்து தமி.க. பாடசாலை | ஆறுதல் பரிசு |
| 07. | தர்மதேவன் தராங்கினி | யாழ்/மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை | ஆறுதல் பரிசு |
| 08. | ஜெயக்குமார் தர்சா | யாழ்/மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை | ஆறுதல் பரிசு |
| 09. | பாலகெங்காதரன் கனிவிழி | கிளி/கறுக்காய்த்தீவு ம.வி | ஆறுதல் பரிசு |
| 10. | சிங்கராசா சசிவர்ணன் | வ/தமிழ் மத்திய ம.வி | ஆறுதல் பரிசு |
| 11. | கில்லரிவாஸ் சதுரிக்காவாஸ் | மன்/புனித சவேரியார் பெண்கள் தேசிய பா.சா | ஆறுதல் பரிசு |
| 12. | ஆனந்தராசா சஜிராம் | கிளி/பூநகரி நல்லூர் ம.வி | ஆறுதல் பரிசு |
| 13. | சிவானந்தன் வைஸ்னுகா | யாழ்/சாவகச்சேரி இந்துக் கல்லூரி | ஆறுதல் பரிசு |

## ஓவியப் போட்டி முடிவுகள் - 2017

### ஓவியப் போட்டி மேற்பிரிவு

| இல | மாணவர் முழுப்பெயர் | கல்வி கற்கும் பாடசாலை | நிலை |
|---|---|---|---|
| 01. | லாவண்யா சுரேஸ்குமார் | யாழ்/கொக்குவில் இந்துக்கல்லூரி | 1-ம் இடம் |
| 02. | கணேசலிங்கம் கனிஸ்டன் | கிளி/கறுக்காய்த்தீவு ம.வி | 2-ம் இடம் |
| 03. | பாலச்சந்திரன் நிதப்சன் | யாழ்/மத்திய கல்லூரி | 3-ம் இடம் |
| 04. | இராசன் ராகுலன் | யாழ்/மயிலணி ம.வி | ஆறுதல் பரிசு |
| 05. | துரைராசா டஜீவன் | யாழ்/ஏழாலை ம.வி | ஆறுதல் பரிசு |
| 06. | கோபாலராசா ஜெருக்சன் | மு/சிலாவத்தை தமிழ் வித்தியாலயம் | ஆறுதல் பரிசு |
| 07. | மரியதாஸ் புனிதமலர் | யாழ்/இராமநாதன் கல்லூரி | ஆறுதல் பரிசு |
| 08. | அமரேசன் டனாசினி | யாழ்/இராமநாதன் கல்லூரி | ஆறுதல் பரிசு |
| 09. | கருணைதாஸ் நயுத்திரன் | யாழ்/ஏழாலை ம.வி | ஆறுதல் பரிசு |
| 10. | பழனியாண்டி விஸ்ணுவர்த்தன் | கிளி/அக்கராயன் ம.வி | ஆறுதல் பரிசு |
| 11. | அ.அசோக் | யா/சிதம்பராக் கல்லூரி | ஆறுதல் பரிசு |
| 12. | உதயகுமார் ஜெருசன் | மன்/புனித சவேரியர் ஆண்கள் கல்லூரி | ஆறுதல் பரிசு |
| 13. | அந்தோனி கிசோர் | மன்/புனித சவேரியர் ஆண்கள் கல்லூரி | ஆறுதல் பரிசு |

### ஓவியப் போட்டி கீழ்பிரிவு

| இல | மாணவர் முழுப்பெயர் | கல்வி கற்கும் பாடசாலை | நிலை |
|---|---|---|---|
| 01. | ஜெயசலோமியா ஜெயமோகன் | யாழ்/வேம்படி பெண்கள் கல்லூரி | 1-ம் இடம் |
| 02. | மனோகரன் மயூரன் | வ/சீ்.வலுவூட்டல்வளாகம் விசேட பாடசாலை | 2-ம் இடம் |
| 03. | தங்கராசா சாருஜன் | யாழ்/மயிலணி சைவ மகா வித்தியாலயம் | 3-ம் இடம் |
| 04. | பிரபாகரன் மணிகண்டன் | கிளி/கறுக்காய்தீவு ம.வி பூநகரி | ஆறுதல் பரிசு |
| 05. | விமலதாஸ் டொறக்சன் | கிளி/வலைப்பாடு றோ.க.த பாடசாலை | ஆறுதல் பரிசு |
| 06. | விமலராஜ் விதுசன் | யாழ்/உடுப்பிட்டி அ.மி கல்லூரி | ஆறுதல் பரிசு |
| 07. | கொலம்பஸ் கொலன்டீனா | வ/சீ்.வலுவூட்டல்வளாகம் விசேட பாடசாலை | ஆறுதல் பரிசு |
| 08. | ஶ்ரீரஞ்சன் சிமோஜன் | மட்/புனித மிக்கல் கல்லூரி | ஆறுதல் பரிசு |
| 09. | சரணா விஜயகுலம் | யாழ்/இராமநாதன் கல்லூரி | ஆறுதல் பரிசு |
| 10. | தங்கத்துரை யதுசன் | யாழ்/உடுப்பிட்டி அ.மி கல்லூரி | ஆறுதல் பரிசு |
| 11. | ஜெயதரன் காருண்ஜா | கிளி/கிளிநொச்சி ம.வி | ஆறுதல் பரிசு |
| 12. | கிருபாரட்ணம் துவாரகன் | யாழ்/மயிலணி சைவ மகா வித்தியாலயம் | ஆறுதல் பரிசு |
| 13. | எழில்மேகவர்ணன் கார்சன் | கிளி/கறுக்காய்தீவு ம.வி பூநகரி | ஆறுதல் பரிசு |

போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் யாவும் 2018 ஆம் ஆண்டு மாசி மாதம் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள உலக தாய்மொழிகள் தின நிகழ்வில் வழங்கி கௌரவிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

நிர்வாகம்,
அமெரிக்க இலங்கைத் தமிழ்ச் சங்கம் (பரலைஸ் நேசிங் கொம்)

(சி-139)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரப் பகிர்வின் மூலம் தீர்வு கண்ட நாடு எங்குமில்லை

## கோத்தபாய ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

யுத்த காலத்தில் பயங்கரவாதிகளுக்காக வெளிநாடுகளில் நிதி சேகரித்தவர்களும் ஆயுதங்கள் சேகரித்து அனுப்பியவர்களுமே இன்று புதிய அரசியலமைப்புக்காக முன்னின்று செயற்படுகின்றனர் எனவும் அதிகாரப் பகிர்வின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு கண்ட நாடு உலகில் எங்கும் இல்லை எனவும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார். கம்பஹா பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# நல்லாட்சி என்ற சொல்லுக்கே அரசாங்கத்தால் அவப்பெயர்

## கலாநிதி நிர்மால் ரஞ்ஜித் விசனம்



(கொழும்பு)

நல்லாட்சி என்ற சொல்லுக்கே இந்த அரசாங்கம் பாரிய அவப்பெயரை ஏற்படுத்தியுள்ளதாக கொழும்பு பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நிர்மால் ரஞ்ஜித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு முன்னின்று உழைத்தவர்களுள்ஒருவரான இவர், கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இதனைக்கூறியுள்ளார்.

2015 ஜனவரி 8 ஆம் திகதி இந்த அரசாங்கத்தை மக்கள் ஆட்சியில் அமர்த்துவதற்கு காரணம் இந்த ஆட்சியாளர்கள் மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை அல்ல. மாறாக, ராஜபக்ஷர்களின் ஆட்சியில் சில அம்சங்கள் மீது மக்கள் கொண்டிருந்த வெறுப்பே ஆகும்.

ஐக்கிய தேசியக் கட்சி தனியாகப் போட்டியிட்டிருந்தால், அக்கட்சி படுதோல்வியை அடைந்திருக்கும். இந்த அரசாங்கத்துக்கு கிடைத்துள்ள மக்கள் ஆணை ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைத்த வெற்றியல்ல என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

நல்லாட்சி அரசாங்கம் பற்றிய மக்களின் நம்பிக்கை அமைச்சரவை அமைத்தவுடன் இழக்கப்பட்டது. மத்திய வங்கி முறி மோசடியின் போது இந்த அரசாங்கத்தின் மீது மக்கள் வைத்திருந்த கொஞ்ச நம்பிக்கையையும் இழந்து விட்டதாகவும் அவர் விளக்கமளித்துள்ளார்.(இ-7)

# மகிந்தவின் ஆட்சி கவிழ வீரவன்சதான் காரணம்

## பிரதியமைச்சர் சுதர்ஷினி தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தை கவிழ்க்க முதல்கல்லை எறிந்த விமல் வீரவன்சவே தற்போதும் மகிந்தவை கஷ்டத்தில் தள்ளி வருவதாக பிரதியமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.தெவிநுவர பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மகளிர் முன்னணியின் கூட்டம்ஒன்றில்உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார். முன்னாள் ஜனாதிபதியின் அரசாங்கத்தில்பொருளாதார கொலையாளிகள் இருப்பதாகவும், தமக்கு வேலை செய்ய முடியவில்லை எனவும், சிலருக்கு மட்டுமே நிதி ஒதுக்கப்படுவதாகவும் விமல் வீரவன்சவே ஊடகங்கள் முன்னால் குற்றச்சாட்டுக்களை சுமத்தினார். தற்போது மகிந்த ராஜபக்ஷவை சுற்றி இருந்து கொண்டு அவருக்காக வெறுமனே முதலை கண்ணீர் வடிக்கும் உதய கம்மன்பில என்ன செய்தார்.

அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றாது போனால் மகிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களிக்க போவதில்லை. அவருக்கு உதவவும் போவதில்லை எனக் கூறினார்.

விமல் வீரவன்சவும், உதய கம்மன்பிலவுமே மகிந்த ராஜபக்ஷவை சுற்றி இருந்து கொண்டு அவரது தோல்விக்கான முதல் துப்பாக்கி வேட்டை தீர்த்தனர்.

இதுதான் எங்களுக்கு இருக்கும் கவலை. தற்போது இவர்கள் மகிந்த ராஜபக்ஷவை காட்டி தமது வாக்கு வங்கியை நிரப்பிக் கொள்ள முயற்சித்து வருகின்றனர்.

இதனால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் மிகவும் புத்திசாலித்தனமாக செயற்பட வேண்டும் எனவும் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார். (இ-7)


வாங்கிவிட்டீர்களா?...

புகழ்

புகழ் வெளியீட்டகத்தின்

வெளிச்சம்

2018ஆம் ஆண்டு மாதிரி வினாத்தாள் பொதி

புலமைப்பரிசில் பரீட்சை எழுதவுள்ள

தரம் - 04 மாணவர்களுக்கானது.

- 08 அறிமுக மாதிரி வினாத்தாள்கள்
- முழுமையான புள்ளித்திட்டத்துடனான விடைகள்
- முழுமையான புள்ளிப் பகுப்பாய்வுப் படிவம்

விசேட அம்சம்

21 நாட்களில் பிள்ளைகளின் கிரகிக்கும் ஆற்றல் மற்றும் வீட்டில் படிக்கும் நேரத்தை அதிகரிப்பதற்கான விசேட செயற்திட்டம் இணைக்கப்பட்டுள்ளது.

இலவச இணைப்பு

"புலமைப்பரிசில் வெற்றியின் இரகசியங்கள்" பெற்றோர், மாணவர்கள் அறிந்திருக்க வேண்டிய புலமைப்பரிசில் பரீட்சை பற்றிய விடயங்கள் அடங்கிய 42 பக்க நூல்.

- சவால் மிக்க உங்கள் புலமைப்பரிசில் பரீட்சை நோக்கிய உங்கள் பயணத்தை வெளிச்சத்துடன் ஆரம்பித்து வெற்றி காணுங்கள்.

ஆக்கம் : புகழ் வெளியீட்டாசிரியர் லோ.விஜேந்திரன்

தொடர்புகளுக்கு :-
Lanka Book Depot, Colombo.
T.P : 0112341942

புகழ் பப்ளிகேசன்,
கொக்குவில்.
T.P: 0774118950

புகழ் வெளியீடுகளை நாடெங்கிலுமுள்ள பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.


# அரசை விமர்சித்த அமைச்சரை பிரதமர் விசாரிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை பகிரங்கமாக விமர்சனம் செய்த பிரபல அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவரை அடுத்த வாரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விசாரணைக்காக அழைக்கத் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வேறு கட்சியொன்றின் தலைவராகவுள்ள இந்த அமைச்சர் கடந்த தேர்தல் காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்டவர்.

இவரை தனிப்பட்ட முறையில் அழைத்து ஊடகங்களிடம் அரசாங்கத்துக்கு எதிராக தெரிவித்த கருத்துக்கள் குறித்து பிரதமர் விசாரணை நடத்தவுள்ளார்.

இவர் அரசாங்கத்தில் இருந்து கொண்டு அரசாங்கத்தின் வேலைத் திட்டங்களை விமர்சனம் செய்ததாக அரசாங்கத்திலுள்ள மற்ற அமைச்சர்கள் குழுவொன்றினால் பிரதமரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதையடுத்தே விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# நல்லிணக்க அமைச்சின் முன் அனுமதியின்றி வைபவங்களை ஒழுங்கு செய்ய வேண்டாம்

## செயலாளர் சிவஞானசோதி அறிவிப்பு

(கொழும்பு)

தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி வேலைகளை ஆரம்பித்தல் மற்றும் கையளித்தல் ஆகிய வைபவங்களை இந்த அமைச்சின் முன் அனுமதி இன்றி ஒழுங்கு செய்ய வேண்டாம் என்று மேற்படி அமைச்சின் செயலாளர் வே. சிவஞான சோதி அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டச் செயலாளர் என். வேதநாயகன், கிளிநொச்சி செயலாளர் எஸ். அருமைநாயகம், முல்லைத்தீவு செயலாளர் திருமதி. ஆர். கேதீஸ்வரன், மன்னார் செயலாளர் எம்.வை.எஸ். தேசப்பிரிய, வவுனியா செயலாளர் எம்.பி. ஆர். புஸ்பகுமார, அம்பாறை செயலாளர் ரி.பி.வணிகசிங்க, திருகோணமலை செயலாளர் ஆர்.ஏ.ஏ புஷ்பகுமார மற்றும் மட்டக்களப்பு மாவட்ட செயலாளர்களுக்கு இவ்வறிவித்தல் சம்பந்தமான கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, உயர் கல்வி நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் டி.சி. திஸாநாயக்க, வீடமைப்பு நிர்மாண அமைச்சின் செயலாளர் டபிள்யூ.கே.கே. அத்துக்கோரள, வடமாகாண சபையின் பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன், கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் டி.எம்.சரத் அபய குணவர்தன, வீதி அபிவிருத்தி அதிகார சபைத் தலைவர் என்.ஆர். சூரியாராய்ச்சி, தேசிய வீடமைப்பு அதிகார சபைத் தலைவர் எப்.எஸ். பாலன்சூரிய ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, 50 ஆயிரம் வீடமைப்புத்திட்டம் நல்லிணக்கத்துக்கான வீதிகளை புனரமைக்கும் முன்னுரிமைத்திட்டம், பொருளாதார மேம்படுத்தல் திட்டம் முதலிய பல அபிவிருத்தித் திட்டங்களை தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சு ஆரம்பித்துள்ளமை தெரிந்ததே. இந்த அமைச்சு ஜனாதிபதியின் அதிகாரத்தின் கீழ் வருவதால் இந்தத் திட்டங்களை ஆரம்பித்தல் மற்றும் கையளித்தல் சம்பந்தமாக ஜனாதிபதியுடன் நெருக்கமாக ஆலோசிக்க வேண்டியுள்ளது.

எனவே இந்த அமைச்சின் முன்னனுமதியின்றி இத்தகைய நிகழ்வுகளை ஒழுங்கு செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது. இந்த செய்தியை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் அனுப்புவதற்கு கவனம் செலுத்தவும் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சினால் 140 கோடி ரூபா செலவில் மண்டூர் குறுமண்வெளி துறைக்கு பாலம் கட்டப்படவுள்ளது. இதற்கான அனுமதி அமைச்சரவையினால் வழங்கப்பட்ட நிலையில் ஏனைய பூர்வாங்க நடவடிக்கைகளை அமைச்சு மேற்கொண்டுள்ளது. இன்னமும் கேள்வி விளம்பரம் கூடசெய்யப்படவில்லை. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவும் இல்லை என்று தெரிய வருகிறது.

இந்த நிலையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அடிக்கல் நாட்டு வைபவம்ஏற்பாடு செய்யப்பட்டு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இந்த வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டதை கவனத்தில் கொண்டே மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது என்று நம்பப்படுகிறது. (இ-7)

# ராணுவ முகாமிலிருந்து ஆட்லெறித் தாக்குதல் நடத்தும் ராஜபக்ஷர்கள்

(கொழும்பு)

பனாகொட ராணுவ முகாமில் பாரிய சத்தத்துடன் ஆட்லெறி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. இராணுவ முகாமிற்கு அருகிலுள்ள வீடுகளில் வசிக்கும் மக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தும் வகையில் சுமார் 30 குண்டுகள் வெடிக்க செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

போர் காலத்தில் இல்லாத வகையில் பயிற்சி என கூறி நள்ளிரவுகளில் 122 மில்லி மீற்றர் ஆட்லெறி யாருடைய உத்தரவிற்கமைய செயற்படுத்தப்படுகிறது என தனக்கு தெரியாதென பனாகொட இராணுவ முகாம் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

ராணுவ பொலிஸார் தலையிட்டு அந்த பிரதேசத்திற்கு செல்வதனை தடுத்துள்ளதாகவும், இதற்கு முன்னர் ஒருபோதும் இவ்வாறான ஒரு பயிற்சி தொடர்பில் தகவல் வெளியாகவில்லை எனவும் குறிப்பிடப்படுகின்றது.

பயிற்சிகளின் போது உண்மையான தோட்டாக்கள் பயன்படுத்தப்படாதெனவும், 122 மில்லி மீற்றர் ஆட்லெறி இயக்கப்படுவது என்பது சாதாரண விடயம் அல்ல எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாதுகாப்பு அமைச்சராக இருக்கின்ற போதிலும் இராணுவத்திற்குள் இன்னமும் ராஜபக்ஷ தரப்பினர்கள் உள்ளதாக கூறப்படுகின்றது.

ரத்துபஸ்வெல கொலை, பிரகீத் எக்னெலிகொட காணாமல் போக செய்தமை தொடர்பிலான விசாரணை தொடர்பான தகவல்களும் அவர்களாலே மறைக்கப்படுகின்றது.

இந்த ஆட்லெறி இயக்கப்பட்டமை தொடர்பில் ராணுவ தளபதி அறிந்திருக்கவில்லை என்றாலும் ராஜபக்ஷர்கள் அறிந்திருப்பார்கள் என அந்த ராணுவ அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெற்றிக் களிப்பில் மிதந்த விராட்டின் இந்தியாவுக்கு
# மும்பையில் மரண அடி அடித்தது நியூசிலாந்து




சதம் விளாசிய ரொம் லெதம்

தனது 200ஆவது போட்டியில் சதம் விளாசி கொக்கரித்த விராட் ஹோலியின் இந்தியாவை லெதம், ரோஸ் ரெய்லர் இணை மும்பை வான்கடேயில் வைத்து திணற திணற அடித்து நொருக்கியது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி, அங்கு 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது.

இத்தொடரின் முதல் போட்டி நேற்று மும்பை, வான்கடே மைதானத்தில் நடந்தது. நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் ஹோலி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

### போல்ட் மிரட்டல்

இந்திய அணிக்கு தனது வேகத்தால் ஆரம்பத்திலேயே தொல்லை கொடுத்தார். போல்ட். இவரது 'வேகத்தில்' தவான் (9), ரோகித் சர்மா (20) வீழ்ந்தனர். சான்ட்னர் 'சுழலில்' கேதர் ஜாதவ் (12) சிக்க, இந்திய அணி 15.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்கு 71 ஓட்டங்கள் எடுத்து தடுமாறியது.

### தல தோனி மந்தம்

பின் ஹோலி, தினேஷ் கார்த்திக் சேர்ந்து விவேகமாக ஆடினர். இவர்கள் 4ஆவது விக்கெட்டுக்கு 73 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் கார்த்திக் (37) வீணாக ஆட்டமிழந்தார். அடுத்து வந்த தோனி ஒன்று, இரண்டு ஓட்டங்களாக சேர்க்க, ஓட்டஎண்ணிக்கை வேகம் குறைந்தது. 5ஆவது விக்கெட்டுக்கு ஹோலி - தோனி 57 ஓட்டங்கள் சேர்த்தனர். போல்ட் பந்தில் தோனி (25) நடையை கட்டினார்.

### அசத்தல் சதம்

அசத்தல் ஆட்டத்தை தொடர்ந்த ஹோலி, சௌதி ஓவரில் இரண்டு பவுண்டரிகள் அடித்தார். சான்ட்னர் பந்தில் ஹர்திக் பாண்ட்யா ஒரு சிக்ஸர் அடிக்க, ஓட்டஎண்ணிக்கை உயரத் தொடங்கியது. சௌதி பந்தை ஒரு ஓட்டத்துக்கு தட்டிவிட்ட ஹோலி, தனது 200 ஆவது ஒருநாள் போட்டியில் சதம் அடித்து சாதித்தார். அச்சமயம் போல்ட் பந்தில் பாண்ட்யா (16) ஆட்டமிழக்க, அரங்கம் அமைதியானது. மறுபக்கம் சௌதி பந்தை சிக்ஸருக்கு பறக்கவிட்ட கோஹ்லி (121 ஓட்., 9 பவுண்டரிகள், 2 சிக்ஸர்) அடுத்த பந்தில் வெளியேறினார்.

### புவனேஷ்வர் விளாசல்

கடைசி கட்டத்தில் அசத்திய புவனேஷ்வர் 15 பந்துகளில் 26 ஓட்டங்கள் (2 பவுண்டரி, 2 சிக்ஸர்) எடுத்தார்.

இறுதியில் இந்திய அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 280 ஓட்டங்கள் எடுத்தது.

பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பில் அசத்திய போல்ட் 34 ஓட்டங்களுக்கு 4, சௌதி 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

### அமர்க்கள ஆரம்பம்

பின் சவாலான இலக்கை விரட்டிய நியூசிலாந்து அணிக்கு கப்டில், முன்ரோ நல்ல ஆரம்பம் கொடுத்தனர். முதல் விக்கெட்டுக்கு 48 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், பும்ரா பந்தில் முன்ரோ (28) வீழ்ந்தார். 'சைனாமன்' குல்தீப் யாதவ் 'சுழல்' வலையில் அணித் தலைவர் வில்லியம்ஸன் (6) சிக்கினார். பாண்ட்யா பந்தை கப்டில் (32) தூக்கி அடிக்க, அதை எல்லையில் இருந்து ஓடி வந்து கலக்கலாக பிடித்தார் கார்த்திக்.

### லதாம் சதம்

பின் ரோஸ் ரெய்லர், லதாம் சேர்ந்து துணிச்சலாக போராடினர். குல்தீப், சகால் பந்துகளில் அழகாக 'சுவீப் ஷொட்' அடித்த இவர்கள், 'வேகங்களையும்' விட்டு வைக்கவில்லை. இந்தியாவுக்கு எதிராக எப்போதும் சிறப்பாக விளையாடும் ரெய்லருக்கு ஐ.பி.எல்., அனுபவமும் கைகொடுத்தது. லெதம் சதம் கடந்தார். ரெய்லர் 95 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின் புவனேஷ்வர் பந்தை நிக்கோலஸ் பவுண்டரிக்கு அனுப்ப,

நியூசிலாந்து அணி 49 ஓவர்களில் 4 விக்கெட்டுக்கு 284 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்று, தொடரில் 1-0 என முன்னிலை பெற்றது. லெதம் (103), நிக்கோலஸ் (4) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக நியூசிலாந்து அணியின் லெதம் தெரிவானார்.

இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ஒரு நாள் போட்டி வரும் 25ஆம் திகதி புனேயில் நடக்கிறது.



ரோஸ் ரெய்லர்




தனது 200ஆவது போட்டியில் 31ஆவது சதத்தை பூர்த்தி செய்த இந்திய அணித் தலைவர் விராட் ஹோலி.

# இலங்கை அணியின் தலைவராகிறார் திசார பெரேரா




பாகிஸ்தானுக்கு எதிரான 'ரி20' தொடருக்கான இலங்கை அணியின் தலைவராக திசரா பெரேரா அறிவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2009இல் பாகிஸ்தான் சென்ற இலங்கை அணி 'பஸ்' மீது லாகூரில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதன்பின், சர்வதேச அணிகள் பாகிஸ்தான் செல்ல தயக்கம் காட்டின. சமீபத்தில், பாகிஸ்தானில் விளையாட இலங்கை அணி சம்மதம் தெரிவித்தது. முதலிரண்டு போட்டிகள் (ஒக். 26, 27) அபுதாபியில் நடக்கவுள்ளன. கடைசி போட்டி மட்டும் பாகிஸ்தானில் லாகூரில் (ஒக். 29) நடக்கிறது.

இததொடருக்கான இலங்கை அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. வழக்கமான அணித் தலைவராக உபுல் தரங்க, வேகப் பந்து வீச்சாளர் மலிங்க, சுரங்க லக்மல், டிக்வெல, கபுகெதர பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக இடம்பெறவில்லை. இதனால், முதல் முறையாக இலங்கை அணியை சகலதுறை வீரர் திசார பெரேரா வழிநடத்த உள்ளார். இவர், சமீபத்தில் பாகிஸ்தானில் நடந்த 'ரி20' தொடரில் உலக 'லெவின்' அணியில் இடம் பிடித்திருந்தார்.

அணி விவரம்: திசார பெரேரா (அணித் தலைவர்), முனவீர, குணதிலக, சமரவிக்ரம, பிரியஞ்சன், உடவாட்டே, சனாக, சமித் பதிரன, சஞ்சய, லகிரு கமகே, பிரசன்னா, விஷ்வ பெர்ணான்டோ, உதான, ஜெப்ரி, சதுரங்க டி சில்வா.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்





**பரமசிவம் புருசோத்தமன்**
யா/நவாலி சென்.பீற்றர்ஸ்
றோ.க.த.க.பாடசாலை
புள்ளி 190, மாவட்ட நிலை 5

*Best Wishes*

**பிரபாகரன் காண்டீபன்**
யா/கச்சாய் அரசினர் தமிழ்
கலவன் பாடசாலை
புள்ளி 155

நடைபெற்று முடிந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த எமது செல்வங்களை மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாராட்டி வாழ்த்துவோர்:
[illegible]சாமி, சித்தி அம்மம்மா புஸ்பமலர், பிரமிளா அன்ரா (லண்டன்),
ராஜ்குமார் மாமா (தனங்கிளப்பு), சோபிகா அன்ரா (நவாலி)
(1102)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாரதி தூக்கம்; இருவர் பலி!

(கொழும்பு)

கொழும்பு- கட்டுநாயக்க அதிவேக வீதியின் பழுணுகம பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். அப்பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த கார் ஒன்றின் சாரதிக்கு ஏற்பட்ட தூக்கக் கலக்கத்தால் அவரது கட்டுப்பாட்டை மீறிய வாகனம் வீதியை விட்டு விலகி அங்கிருந்த இருவர் மீது மோதியுள்ளது.

இதனால் படுகாயமடைந்த இருவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வேளை பலியாகியுள்ளனர். இச் சம்பவத்தில் 41 மற்றும் 55 வயதான இருவரே உயிரிழந்துள்ளதாக தெரிய வந்துள்ளது. அத்துடன் சம்பத்துடன் தொடர்புடைய கார் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். இது குறித்த மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-7)

## கண்ணீர் அஞ்சலி



அமரர்

### தம்பியப்பா சக்திவேல்

எமது கல்லூரியின் தமிழ்ப்பாட ஆசிரியை செல்வி. ஜெயந்தி சக்திவேல் அவர்களின் பாசமிகு தந்தையார் **தம்பியப்பா சக்திவேல்** அவர்கள் 22.10.2017 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தமையையிட்டு துயரடைவதோடு அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(சி-138)

கல்லூரிச் சமூகம், யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி.

## இ.தொ.காங்கிரஸ் விளம்பரத்திற்காக அபிவிருத்தி வேலைகளை செய்யாது

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஒருபோதும் விளம்பரத்திற்காக அபிவிருத்தி வேலைகளை செய்யாது. நாங்கள் முன்னெடுக்கின்ற அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் தூய்மையாகவும் உறுதியாக நீண்ட காலத்துக்கு நிலைத்திருக்க கூடியவை. கடந்த 2013 ஆம் ஆண்டு இப்பகுதி வெள்ளத்தால் மூழ்கியிருந்தது. அப்போது என்னிடம் கேட்டதற்கிணங்க அன்று ஆற்றில்இருந்த கல்லை உடைத்து அகற்றினேன். அன்று இருந்த நிலைக்கும் இன்றும் எப்படி இப்பிரதேசம் இருக்கின்றது என்பது உங்களுக்கு தெரியும். மக்களின் தேவையை அறிந்து ஒரு பாலத்திற்கு இரண்டு பாலங்களை கட்டிக்கொடுத்துள்ளேன். இவை யாவும் நீங்கள் ஒற்றுமையாய் இருந்ததனால் தான் செய்ய முடிந்தது. இன்று அரசியல் நிலை மாறியுள்ளது. நீங்கள் வீட்டில் இருந்து கூப்பிட்டால் வந்து சேவை செய்யும் அளவுக்கு இன்று அரசியல் யாப்பு மாறிவருகிறது. இந்த மாற்றங்களுக்கேற்ப உங்கள் பிரதேசங்களுக்கு தேவையான பிரதிநிதிகளை உங்கள் பிரதேசங்களில் இருந்து நீங்களே தெரிவு செய்து கொள்ள வேண்டும். வெளியிலிருந்து வருபவர்களை ஒரு போதும் தெரிவு செய்யக்கூடாது என பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

இலங்கையில் இன்று புதிய யாப்பு சீர்திருத்தம் ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது. அதில் வட்டாரமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது இந்தியாவுக்கு புதுசு அல்ல. ஆனால் இலங்கை மக்கள் இது தொடர்பாக அறிந்திருக்க வேண்டும். இதற்கு நாங்கள் எதிர்காலத்தில் தெளிவுபடுத்தும் செயலமர்வு ஒன்றினை செய்யவுள்ளோம்.

உங்களுக்கு நன்கு தெரியும். தேர்தல் காலங்களில் கொழும்பிலிருந்தும் வெளியிடங்களிலிருந்தும் வருவார்கள். அவர்களை நீங்கள் தெரிவு செய்தால் என்ன நடக்கும் என்றால் போகும் வழியில் இறங்கி விட்டு செல்வார்களே தவிர பெரிதாக அபிவிருத்தி செய்ய முடியாது.


ஆனால்இன்று உருவாக்கப்பட்டுள்ள அரசியல் யாப்பு அந்த பிரதேசத்தில் உள்ள அபிவிருத்தி பணிகளை அந்த பிரதேசத்தில் உள்ள வரை தெரிவு செய்து கொள்வதன் மூலம் தான் நிறைவேற்ற முடியும் ஆகவே இதில் கட்சிக்கு முக்கியத்துவம் இல்லை. எனவே உங்கள் பிரதிநிதிகளை நீங்களே சரியானவர்களை தெரிவு செய்துகொள்ள வேண்டும் என அவர் தெரி வித்தார்.

வட்டவளை பிரதேசத்தில் சுமார் இரண்டு கோடி ரூபா செலவில் நிர்மாணிக் கப்பட்ட பாலம் நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. இதில்கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

## மரண அறிவித்தல்

பிறப்பு: 1952.07.13 இறப்பு: 2017.10.20

### அமரர் கணபதி நடராசா



*(கட்டைவேலி ப.நோ.கூ.சங்க ஓய்வுநிலை ஊழியர்)*

*மத்தொனி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் மாசேரி, வரணியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி நடராசா அவர்கள் (20.10.2017) வெள்ளிக்கிழமை இறைபதமெய்தினார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி-இலட்சுமி தம்பதியரின் இளைய புதல்வனும் இரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வீரகத்தி மற்றும் சரஸ்வதி தம்பதியரின் பாசமிகு மருமகனும் சுதர்னா, சுரேக்கா, சுதா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான பார்வதி, குமார் மற்றும் சிவகாமி, சின்னம்மா, முருகேசு, வேதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமதி.இ.திரவியம், சிவபாதசுந்தரம், தெய்வேந்திரம், அமரர். இராசேந்திரம், மகேந்திரம், திருமதி.கு.இந்திராதேவி, குலேந்திரராசா ஆகியோரின் மைத்துனரும் சுதாகரன், யகுந்தன், ஸ்ரீகாந்தராசா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பாலிகா, ஆத்மிகா, கபிநயன், சஸ்மிகா, சானுகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.10.2017) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணிக்கு மாசேரி கப்பத்தை இந்து மயாணத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத் தருகிறோம். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

*(1099)*

தொடர்புகளுக்கு:
077 726 1287

மாசேரி, வரணி.

தகவல்:
குடும்பத்தினர்

## இராசி பலன்

23.10.2017
ஐப்பசி 06, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
சதுர்த்தி முழுவதும்
அனுசம் பிற்பகல் 3.02 மணிவரை
சுபநேரம் 12.02-1.32 மணிவரை
இராகுகாலம் 7.32-9.02 மணிவரை
சதுர்த்தி விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் அச்சுவினி, பரணி | | ராகு |
| கேது | | | |
| | சனி சந் | குரு.சூரி புத. | செவ் சுக் |

**மீனம்:** எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், திறமை மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், கடுமையான எதிர்ப்புகள் கூட திடீரென சாதகமாகிவிடும்.

**மேடம்:** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், விரயங்கள் கூடும், உடல் நலனில் கவனம் தேவை, கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**இடபம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மிதுனம்:** உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும், வியாபார வளர்ச்சியுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கும்பம்:** திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறலாம், அன்பு நண்பர்கள் ஆதரவு தர முன் வருவர், ஆரோக்கியமான நாள்.

**கடகம்:** மற்றவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், நீண்ட நாளைய விருப்பமொன்று கைகூடும் வாய்ப்புண்டு.

**மகரம்:** வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், இலாபமான நாள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**சிம்மம்:** சுப செய்திகள் வந்து சேரலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், வாகன சுகமுண்டு.

**தனுசு:** சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, அலைச்சல்கள் சற்று கூடும்.

**விருச்சிகம்:** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**துலாம்:** புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், ஆசைகள் பூர்த்தியாகும் நாள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள்.

**கன்னி:** உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், தொழில் போட்டிகளை முடிப்பீர்கள், செல்வ நிலை உயரும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணக்குகளை மத்தியஸ்த சபையிடம் அறிவித்து தீர்வுகளைப் பெற முடியும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள காணிப் பிணக்குகள் தொடர்பான முறைப்பாடுகளை இனி வரும் காலத்தில் விசேட மத்தியஸ்த சபை (காணி) யிடம் அறிவித்து தீர்வுகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள முடியும் என காணி மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கடந்த மாதம் யாழ். மாவட்டத்தில் சேவைகளை ஆரம்பித்த விசேட மத்தியஸ்த சபை ஊடாக இதுவரை 10 இற்கும் மேற்பட்ட காணிப் பிணக்குகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

நீதி அமைச்சின் மத்தியஸ்த சபைகள் ஆணைக் குழுவினால்காணிப்பிணக்குகளைத் தீர்ப்பதற்கென அமைக்கப்பட்ட "விசேட மத்தியஸ்த சபை (காணி) ஆரம்பிக்கப்பட்டு அதன் செயற்பாடுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் புதிதாக அமைக்கப்பட்ட விசேட மத்தியஸ்த சபைகளில்(காணி) 27 மத்தியஸ்தர்களுக்கும். கிளிநொச்சி மாவட்ட மத்தியஸ்த சபையில் (காணி) 17 மத்தியஸ்தர்களுக்கும் நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டன. பல்வேறு காரணங்களின் அடிப்படையில் குறித்த சேவையின் செயற்பாடுகள் ஒன்றரை வருடங்களாக ஆரம்பிக்கப் படாமலிருந்தது. அதில் யாழ். மாவட்டத்திற்குரிய செயற்பாடுகள் கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யாழ்.கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம் மற்றும் வடமராட்சி அல்வாய் சின்னத்தம்பி மகா வித்தியாலயத்திலும் கடந்த மாதம் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் அமர்வுகள் நடைபெற்றன.

அடுத்த அமர்வு எதிர்வரும் 28 ஆம் திகதி யாழ். கொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்தில் காலை 9 மணி தொடக்கம் ஒரு மணிவரை நடைபெறவுள்ளது. காணி, பாதை, மலசலகூடம், கிணறு, கட்டட அமைப்பு தொடர்பான சகல பிணக்குகளும் இந்தச் சபை ஊடாக தீர்த்துக்கொள்ள முடியும், இது தொடர்பான மேலதிக விபரங்களை அந்தந்த கிராம சேவகர் ஊடாக அறிந்து கொள்ள முடியும். அத்துடன் நேரடியாக மத்தியஸ்த சபைக்கு வந்து முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும். அதன் பின்னர் ஆலோசனைகளும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என ஆணைக்குழு அறிவித்துள்ளது. (இ-9)



அகில இலங்கை தமிழ் மொழி தின விருது வழங்கல் விழா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கடந்த 14 ஆம் திகதி யாழ்.இந்துக் கல்லூரி சபாலிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கல்வித்துறை வளர்சிக்கு உதவிகளை வழங்கும் கல்வி சேவைச் சான்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வில் கல்விக் காருணயன்,தொழிலதிபர் ஈ.எஸ்.பி. நாகரெத்தினம் ஜனாதிபதியால் கௌரவிக்கப்பட்டார். (இ-9)

# யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்க ஏற்பாட்டில் சுவாமி விபுலானந்தர் நினைவரங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் முன்னெடுக்கும் சுவாமி விபுலானந்தர் நினைவரங்கம் எதிர்வரும் 27.10. 2017 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நல்லை ஆதீனக் கலாமண்டபத்தில் தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் இரா.செல்வ வடிவேலும் வாழ்த்துரையை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் நிகழ்த்துவர்.

தமிழியல் வளர்ச்சியில் ஈழத்து அறிஞர்களின் வகிபாகம் என்ற கருப்பொருளில் நடைபெறவுள்ள இவ்வரங்கத்தில் சுவாமி விபுலானந்தர் என்ற பொருளில் தென்கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி க.இரகுபரனும் சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை என்ற பொருளில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் கலாநிதி சி.பத்மராஜாவும் வண.தனிநாயகம் அடிகள் என்ற பொருளில் தென்னிந்தியத் திருச்சபையின் ஓய்வுநிலை பேராயர் அதிவண. கலாநிதி சு.ஜெபநேசன் அடிகளாரும் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை என்ற பொருளில் யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி திருமதி ஜெயலஷ்மி இராசநாயகமும் கருத்துரை வழங்குவர். (இ-7)

# ஆயிரம் தென்னங்கன்றுகளை நடும் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு மயிலிட்டியில்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கடற்கரையோர பகுதிகளில் ஆயிரம் தென்னங்கன்றுகளை நாட்டும் செயற்றிட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் மயிலிட்டி கடற்கரையோர பிரதேசத்தில் இடம் பெற்றது.

யாழ்ப்பாண பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சியின் வேண்டுகோளுக்கு இணங்க யாழ். மாவட்ட செயலகம், கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம், 306 பி2 லயன்ஸ் கழகம், ஆகியன இணைந்து மேற்படி செயற்றிட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மயிலிட்டி கடற்கரை யோரத்தில் இருந்து தொண்டைமானாறு கடற்கரையோரம் வரை நடைபெறவுள்ள இச் செயற்பாடானது, காங்கேசன் துறையிலிருந்து வெற்றிலைக்கேணி கரையோரம் வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) எஸ்.முரளிதரன், தெல்லிப்பிழை பிரதேச செயலாளர் சிவஸ்ரீ, 306 பி2 மாவட்ட லயன்ஸ் கழக அதிகாரி லயன் இமா சில்வா மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் அபிவிருத்தி அதிகாரி விஸ்ணுவர்தனன் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-9)

# "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" சமயதீட்சை வழங்கும் திட்டம்

## வடக்கு- கிழக்கில் ஆரம்பம்





(யாழ்ப்பாணம்)

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" எனும் சைவ இளைஞர் மாநாட்டுதீர்மானத் துக்கு அமைவாக சைவ சமயத்தவர்களுக்கு சமய தீட்சை வழங்கும் செயற்றிட்டம் கடந்த ஐப்பசி வெள்ளி அன்று வடக்கிலும் கிழக்கிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை சைவ மகாசபையின் ஏற்பாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த செயற்றிட்டத்தில் இந்த மாதம் ஆயிரம் பேருக்கு தீட்சை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எவ்வித பாகுபாடுகளோ கட்டுப்பாடுகளோ இன்றி சிவபூமி முழுவதும் உள்ள சைவர்கள் அனைவரும் எடுத்திருக்க வேண்டிய சமய கடமை இதுவாகும்.

தமிழர்களின்மரபுரிமையை உயரிய தொன்மைமிகு பாரம்பரிய அடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையில் இது வழங்கப்படுகின்றது.

இந்த மாதம் முழுவதும் திருகோணமலை தென்கை யிலை ஆதீனத்திலும் கீ[illegible]லையில் அமைந்துள்ள ஈழத்து சித்தர் பீடத்திலும் செந்தமிழ் சிவாச்சாரியர்களால் தீட்சை வழங்கப்படும்.

இதில் அனைத்து சைவர்களும் கலந்து கொண்டு சமய தீட்சை பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-9)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாநிதி கனகரட்ணம் தவலிங்கம் கலந்து கொள்வார். (இ-7)








இமையாணன் கலைமகள் சனசமூக நிலைய வருடாந்த கலை விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் அண்மையில் நடைபெற்றது. (படங்கள்: மகாலிங்கம்)




நாவற்குழி எல்பெத்தேல் சிறுவர் பாடசாலையின் சிறுவர் தின நிகழ்வில் நுழைவாயில் லயன்ஸ் கழகத் தலைவர் கலாநிதி நா. தனேந்திரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு மேற்படி பாடசாலையின் சிறுவர்களுக்கான ஒரு தொகுதி பாடசாலை உபகரணங் களை வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோவை வி.எல்.பி. ஜானகியம்மாள் கலை அறிவியல் கல்லூரியின் "தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்: சங்ககாலமுதல் சமகாலம் வரை" வெள்ளிவிழா பன்னாட்டு ஆய்வு மாநாட்டின் முதன்மை விருந்தினராய் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் மாநாட்டைத் தொடக்கி வைப்பதையும் கல்லூரி அறங்காவலர் சூர்யகுமார் கௌரவிப்பதனையும் உடன் சிறப்புவிருந்தினர் புதுவைமொழியியல்.பண்பாட்டு நிறுவன இயக்குநர் முனைவர் பக்தவத்சல பாரதி, முதல்வர். முனைவர் இராஜகுமார், தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் சுரேஷ் மற்றும் நிறைவு விழாவில் மாநாட்டு அமைப்பு குழுவினர்களையும் படங்களில் காணலாம்.

# டெங்கு நோய் பற்றி உங்களுக்கு தெரியுமா?

**டெங்கு நோய் என்றால் என்ன?**

டெங்கு என்பது ஈடிஸ் நுளம்பு வகையால் பரவும் ஒரு வைரஸ் தொற்றுநோய் ஆகும். வைரஸ் தொற்றுக்கு உள்ளான பலர் எவ்வித நோய் அறிகுறிகளையும் வெளிப்படுத்தமாட்டார்கள். ஒரு சிலருக்கு காய்ச்சல் ஏற்படுவதுடன் அவை பின்வரும் நிலைகளாக காணப்படும்.

❖ வேறுபடுத்தப்படாத காய்ச்சல்

❖ டெங்கு காய்ச்சல் (Dengue Fever-DF)

❖ டெங்கு குருதிப்போக்கு காய்ச்சல் (Dengue Hemorrhagic Fever-DHF)

❖ அசாதாரண டெங்கு காய்ச்சல் –மிக அரிது

**டெங்கு நோய் எவ்வாறு பரவுகின்றது?**

ஈடிஸ் பெண் நுளம்பு மூலம் டெங்கு பரவுகின்றது. ஈடிஸ் நுளம்பானது தொற்று ஏற்பட்ட மனிதர்களிடமிருந்து குருதி உட்கொள்வதன் மூலம் வைரஸைப் பெற்றுக்கொள்கின்றது.

**டெங்கு நோய் யாருக்கு ஏற்படும்?**

தொற்றுக்குள்ளான ஈடிஸ் நுளம்பு கடிக்கும் எவருக்கும் டெங்கு நோய் ஏற்படலாம். எனினும் அவரது வயது, நோயெதிர்ப்புத் தன்மை மற்றும் டெங்கு வைரஸ் ஆகியவற்றை பொறுத்துநோயின் தன்மை வேறுபடலாம்.

**ஒருவருக்கு காய்ச்சல் ஏற்பட்டால் அவருக்கு டெங்கு இருக்கலாம் என நினைப்பது ஏன் முக்கியமாகும்?**

டெங்கானது சாதாரண காய்ச்சல் முதல் டெங்கு குருதிப்போக்குக் காய்ச்சல் போன்ற ஆபத்தான நிலைகளையும் ஏற்படுத்தக்கூடியது. காய்ச்சலின் ஆரம்ப கட்டத்தில் டெங்குக் காய்ச்சலையும் டெங்குக் குருதிப்போக்கு காய்ச்சலையும் வேறுபடுத்துவது கடினம். சாதாரண டெங்குக் காய்ச்சலானது பொதுவாக எவ்விதச் சிக்கல்களும் இன்றி குணமடையும். ஆனால் ஆபத்தான நிலைகள் ஏற்படுமாயின் மருத்துவமனையில் சிகிச்சை பெறவேண்டும்.

**டெங்கு இருப்பதாக எப்போது சந்தேகிக்க வேண்டும்?**

காய்ச்சலுடன் பின்வருவனவற்றுள் ஏதாவது அறிகுறிகள் காணப்படுமாயின் அது டெங்கு காய்ச்சல் எனச் சந்தேகிக் ...ம்.

❖ தலைவலி (கண்களுக்குப் பின்புறம்)

❖ உடல் வலி (தசை மற்றும் மூட்டு வலி)

❖ தோல் கடித்தல் (சிவப்பு நிறம்)

❖ குமட்டல் அல்லது வாந்தி

❖ இரத்தக்கசிவு

மேற்குறிப்பிட்ட நோய் அறிகுறிகள் இருப்பின் வைத்தியரிடம் போக வேண்டும். உங்கள் பகுதி டெங்கு நோய் காணப்படும் பகுதியாகவும் வீட்டுக்கு அண்மையில் டெங்கு நோயாளிகள் இருப்பதும் இச் சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தும்.

**டெங்கு நோயை எவ்வாறு கண்டறிவது?**

டெங்கு நோயின் ஆபத்தான நிலைகளை (டெங்கு குருதிப்போக்கு மற்றும் அசாதாரண டெங்குக் காய்ச்சல்) ஆரம்பத்திலேயே கண்டறிவதானது சிகிச்சையளிப்பதில் மிக முக்கியமாகும். காய்ச்சல் ஏற்பட்டு இரண்டு நாட்களின் பின் செய்யப்படும் குருதி எண்ணிக்கைப் பரிசோதனை (FBC-Full Blood Count) மிகப்பிரயோசனமானதாகும்.

டெங்கு வைரஸ் தொற்று உள்ளதா எனக் கண்டறியச் செய்யப்படும் NS1 மற்றும் டெங்கு அண்டி பொடி (Anti body) பரிசோத னைகள் மூலம் டெங்குக் காய்ச்சலா (DF) அல்லது டெங்கு குருதிப்போக்கு காய்ச்சலா (DHF) என வேறுபடுத்த முடியாது.

**ஒருவருக்கு எத்தனை முறை டெங்குக் காய்ச்சல் ஏற்படலாம்?**

டெங்கு வைரஸில் நான்கு வகைகள் உண்டு. ஒருவருக்கு ஓர் வகை வைரஸ் தொற்று ஏற்படுவதால் அவ் வைரசுக்கு அவரது உடலில் ஏற்படும் நோய் எதிர்ப்புத் தன்மை வாழ்நாள் முழுதும் இருக்கும். ஆனால் ஏனைய டெங்கு வைரஸ் வகைகளால் இவர் தொற்றுக்கு ஆளாகலாம். தொடர்ச்சியாக வெவ்வேறு வகையான வைரஸ்களால் தொற்றுக்குள்ளாகும் போது (முக்கியமாக இரண்டாவது முறை) ஆபத்தான நிலைகள் ஏற்படும் வாய்ப்பு அதிகம்.

**டெங்கு நோய்க்கு வீட்டில் இருந்து வைத்தியம் செய்ய முடியுமா?**

முதல் முறை டெங்கு தொற்றுக்குள்ளாகும் பலருக்கு பாதிப்பு குறைந்த சாதாரண டெங்கு காய்ச்சலே ஏற்படும்.

எனவே போதுமான ஓய்வு எடுப்பதுடன் வைத்தியரின் ஆலோசனைப் படி செயற்படவேண்டும். இரண்டாம் நாளின் பின் (FBC) பரிசோதனைக்கு அமைய வைத்தியசாலையில் அனுமதிக்குமாறு வைத்தியர் ஆலோசனை வழங்கின் அதை பின்பற்ற வேண்டும்.

**டெங்கு குருதிப் போக்குக் காய்ச்சல் (DHF) என்றால் என்ன?**

DHF என்பது டெங்குக் காய்ச்சலின் ஆபத்தான கட்டமாகும். ஆயினும் இதன் நோய் அறிகுறிகளானது ஆரம்பக் கட்டத்தில் சாதாரண டெங்குக் காய்ச்சலைப் போன்றே இருக்கும். DHF இன் போது குருதியின் திரவப் பகுதி (பிளாஸ்மா) குறத்தி குழாய்களில் இருந்து வெளியேறி உடற்குழிகளை அடைவது முக்கிய அம்சமாகும். இது பொதுவாகக் காய்ச்சல் ஏற்பட்டு மூன்றாவது நாள் அல்லது அதற்குப் பின்பு ஏற்படுவதோடு இதை FBC பரிசோதனை மூலம் அறியலாம். இப் பிளாஸ்மா வெளியேற்றத்தை கண்டறிந்து தகுந்த சிகிச்சை வழங்காவிடின் டெங்கு அதிர்ச்சி நிலை ஏற்படலாம். இவ் அதிர்ச்சி நிலையின் அபாய அறிகுறிகள் பின்வருமாறு.

**ஆபத்தான நோய் அறிகுறிகள் எவை? EMERGENCY**

❖ அதிகமான வயிற்றுவலி

❖ தொடர்வாந்தி

❖ குருதிப்போக்கு (முரசில் குருதி வெளியேறல், கருமை



நிற மலம், குருதி கலந்த வாந்தி)

❖ சோர்வு/ களைப்பு/ அதிக தூக்கம்/ பதற்றம்/ தலைசுற்றல்

❖ கை மற்றும் கால் குளிர்தல்

❖ சிறுநீரின் அளவு குறைதல்/ ஆறு மணித்தியாலங்களுக்கு மேல் சிறுநீர் வெளியேறாதிருத்தல்

**மேற்குறிப்பிட்ட ஆபத்துக் காரணிகள் இல்லாவிடினும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட வேண்டியவர்கள் யார்?**

❖ கர்ப்பிணிப் பெண்கள்

❖ உடற்பருமன் கூடியவர்கள்

❖ ஒருவயதிலும் குறைந்த குழந்தைகள்

❖ முதியவர்கள்

**காய்ச்சல் ஏற்பட்டால் என்ன செய்யவேண்டும்?**

❖ கடின வேலைகளைத் தவிர்த்து போதுமான அளவு ஓய்வெடுக்கவும்

❖ காய்ச்சல் மற்றும் உடம்பு வலிக்கு பரசிடமோல் மாத்திரையை சரியான அளவில் ஆகக்கூடியது 60 Mg/Kg/24h எடுக்கவும்.

❖ பரசிடமோல் மாத்திரையை எடுத்த பின்பும் காய்ச்சல் இருப்பின் மிதமான வெந்நீரால் பஞ்சு/ துணி ஒன்றின் மூலம் உடலை நனைக்கவும்.

❖ அஸ்பிரின்/ வலி நிவாரணிகள் (Non Steroidal Anti in Flammtory Drugs- NSAIDs), ஸ்டிரோயிட் (Steroids) போன்ற மருந்துகளைத் தவிர்க்க வேண்டும்.

❖ மிதமான அத்துடன் போசாக்கான உணவை உட்கொள்ளவும்

❖ உங்களை நுளம்பு கடிக்காமல் பார்த்துக் கொள்ளவும்

**டெங்கு ஏற்பட்டிருக்கும் போது உங்களுக்கு எவ் உணவுகளை உட்கொள்ள முடியும்?**

காய்ச்சல் மற்றும் வாந்தி போன்றவற்றால் நீரிழப்பு ஏற்படுவதால் போதுமானளவு நீர் ஆகாரம் உட்கொள்ள வேண்டும். வெறும் நீரை உட்கொள்வதை விட இளநீர், பால், ஜீவனி (ORS) பழங்கள்/ காய்கறிச்சாறு, அரிசிக் கஞ்சி, சூப் போன்றவை சிறந்தது.

சிறு குழந்தைகளுக்கு காய்ச்சல் ஏற்பட்டிருக்கும் போது அடிக்கடி சிறிதளவு குளுக்கோஸ்/ சீனி கொடுக்கவும்.

நோயாளியின் விருப்பத்திற்கு ஏற்ப மெதுவான ஆகாரங்களை வழங்கவும்.

சிறிய இடைவேளைகளில் சிறிய ஆகார வேளைகள் விரும்பத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அதிக கொழுப்பு/ எண்ணெய் உணவுகளைத் தவிர்க்கவும்.

சிவப்பு, கபில மற்றும் கறுப்பு நிற உணவுகளை உட்கொள்வதிலிருந்து தவிர்க்கவும். இவற்றால் உணவுக் கால்வாய்த் தொகுதியில் ஏற்படும் குருதிப்போக்கு (கறுப்பு/ கபில வாந்தி மற்றும் கருமை நிறத்தில் சலம்) இனைக் கண்டறிவது சிரமம்.

**வலி நிவாரணிகள் (NSAIDs) போன்ற மருந் துகளை டெங்கு நோயாளர்கள் ஏன் தவிர்க்க வேண்டும்?**

டைக்லோபினாக் (Diclofenac), மேபனமிக் அமிலம் (Mefenemic Acid) மற்றும் இபியுப் ரோபன் (Ibuprofen) போன்ற வலி நிவாரணி (NSAIDs) மருந்துகள் டெங்குக் காய்ச்சலின் போது ஏற்படும் குருதிப்போக்குத் தன்மையை மேலும் அதிகரிக்கும்.

**டெங்கு நோயின் சிக்கல் நிலைகள் எவை?**

டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட பெரும்பாலானோர் எவ்வித சிக்கல்களும் இன்றி முற்றாகக் குணமடைவர். டெங்கு நோயின் சிக்கல் நிலைகளானது பொதுவாக ஆபத்தான நோய் நிலைகளான குருதிப்போக்குக் காய்ச்சல் மற்றும் அதிர்ச்சி நிலை என்பவற்றுடன் தொடர்புபட்டது. மிக அரிதாக ஏற்படும் ஈரல் பழுதடைதல், நரம்புத்தொகுதி பாதிப்பு (வலிப்பு, மூளைக்காய்ச்சல்) என்பன சில உதாரணங்களாகும்.

**டெங்கு ஏற்பட்டிருக்கும்போது நுளம்பு கடிக்காமல் ஏன் பாதுகாக்க வேண்டும்?**

டெங்கு வைரஸ் உள்ள நுளம்பானது ஒருவரை கடிக்குமாயின் நோயறிகுறிகள் தோன்ற முன் டெங்கு வைரஸ் அவரது உடலினுள் பெருகுகின்றது. இந்நோய் அரும்புக் காலம் பொதுவாக 3-14 நாட்களாகும். இதைத் தொடர்ந்து காய்ச்சல் 2-10 நாட்கள் நீடிக்கும். இக்காலத்தில் டெங்கு வைரஸ் ஆனது மேற்பரப்புக் குருதிக் குழாய்களில் காணப்படுவதோடு இவரை வேறொரு நுளம்பு கடிக்குமாயின் அந்நுளம்பின் உடலினுள் உட்புகுகின்றது. இந்நுளம்பின் மூலம் அண்மையில் உள்ள இன்னும் பலருக்கு டெங்கு பரப்பப்படலாம்.

**எவ்வேளைகளில் டெங்கு நுளம்பு கடிக்கும்?**

பொதுவாக ஈடிஸ் நுளம்பானது காலையில் சில மணித்தியாலங்களும் மாலையில் சூரியன் அஸ்தமிக்கும் முன் சில மணித்தியாலங்களும் சுறுசுறுப்பாக மனிதர்களைக் கடிக்கும். பாதுகாப்பு முறைகளை இவ்வேளைகளில் நாம் கடைப்பிடிப்பது முக்கியமாகும்.

**டெங்கு நுளம்பு எங்கே பெருகுகின்றது?**

இந்நுளம்பு மனிதர்களால் உருவாக்கப்பட்ட நீர் தேங்கும் இடங்களில் (உதாரணம்: பிஸாஸ்டிக், பீங்கான், தகரம் ஆகியவற்றாலான எறியப்பட்ட பாத்திரங்கள், கூரை பீலிகள், நீர்த்தாங்கிகள், தேங்காய்மட்டை, சிரட்டை, பூச்சாடிகள், குருவி தடாகங்கள், எறும்பு தடுப்புகள், டயர்) மற்றும் இயற்கையான (மரப் பொந்துகள், ப்ரோமேலிய மற்றும் அன்னாசி தாவரங்கள்) இடங்களிலும் முட்டையிட்டு பெருகின்றது. இந் நுளம்புகள் வீடுகளில்/கட்டடங்களில் இருண்ட இடங்களில் ஓய்வெடுக்கும். இவை வெளியிடங்களிலும் காணப்படும்.

**நுளம்புக் கடியிலிருந்து தவிர்க்க என்ன செய்ய வேண்டும்?**

❖ உங்கள் கை, கால்களை அதிகமாக மறைக்கும் வண்ணம் ஆடைகளை அணியவும்.

❖ ஓய்வாக உள்ள நேரங்களில் நுளம்பு வலைகளைப் பாவிக்கவும்.

❖ நுளம்பு கடிக்காமல் இருக்க பாவிக்கும் மருந்துகளை (Mosquito repellents) பூசவும்.

**நுளம்பு பெருகாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?**

❖ மீள்சுழற்சி செய்யக்கூடிய போத்தல்கள், பிளாஸ்டிக், கண்ணாடி மற்றும் டயர் போன்றவற்றை மீள் சுழற்சிக்காக வழங்குவதுடன் ஏனையவற்றை பொருத்தமான முறையில் அகற்றவும்/அழிக்கவும்.

❖ கூரைப் பீலிகள் தொடர்ச்சியாக இலை குழைகளை அகற்றி சுத்தம் செய்யவும். நீர் தேங்கும் இடங்களான தாங்கிகள், பரல்கள், பூச்சாடிகள் மற்றும் குளிர்சாதனப் பெட்டியின் நீர் தாங்கி என்பவற்றை நீரை அகற்றி தேய்த்து கழுவவும்.

❖ நீர் தேக்கி வைக்கும் நீர்த்தாங்கிகள், பரல், கிணறு போன்ற வற்றை நுளம்புகள் செல்லாதவாறு வலைகள் கொண்டு மூடவும்.

❖ குடம்பிகளை உட்கொள்ளும் மீன் வகைகளை உதாரணம்: கப்பி நீர் தேங்கியிருக்கும்/ அழகிற்காக அமைத்துள்ள தடாகங்களில் வளர்க்கவும்.

❖ வீட்டின் உட்புறத்தையும் சுற்றுப் புறத்தையும் தொடர்ச்சியாக அவதானித்து நுளம்பு பெருகக்கூடிய இடங்கள் இருப்பின் உடனடியாக அவற்றை அகற்றவும்.

**தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு**
**சுகாதார மற்றும் சுதேச**
**வைத்திய அமைச்சு**

### போராட்டங்களின் மூலம்

# இராணுவம் கையகப்படுத்தியுள்ள தமது காணிகளை மக்கள் மீட்டு வருகின்றனர்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவர் தெரிவிப்பு



(பனிக்கன்குளம்)

அரசாங்கத்துடன் இணைந்து தமிழ்மக்களை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு ஏமாற்றி வருவதாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசியல் யாப்பு தொடர்பில் தெளிவூட்டும் கருத்தரங்கு நேற்றுமுன்தினம் காலை புதுக்குடியிருப்பு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் இடம் பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் எந்தப் பிரச்சினையை இது வரை தீர்த்து வைத்துள்ளார்கள் என இதன்போது மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் முயற்சியை தாண்டி போராட்டங்களின் மூலமே மக்கள் இராணுவம் கையகப்படுத்தியுள்ள தமது காணிகளை மீட்டு வருவதாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

இதுமட்டுமன்றி ஜனாதிபதி அரசியல் கைதிகள் விடயத்தில் தொடர்ச்சியாக தமிழ் மக்களை ஏமாற்றி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதன்போது தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டு அரசியல் யாப்பு தொடர்பிலான விளக்க கருத்துக்களை வழங்கினர்.

இந்த கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளையும் சேர்ந்த மக்களும் இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்தனர்.(2-281)

# தமிழர் தாயகத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும்

## சிறிதரன் எம்.பி. வலியுறுத்து



(பனிக்கன்குளம்)

வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகம் அங்கீகரிக்கப்பட்ட சுயாட்சியை ஏற்றுக் கொண்ட அரசியலமைப்பு இலங்கையில் உருவாக்கப்பட வேண்டும். இதில் தமிழ் பேசும் மக்கள் மிகுந்த அவதானமாக இருக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வலியுறுத்தியுள்ளார்.

புதிய அரசியலமைப்புத் தொடர்பான இடைக்கால அறிக்கை பற்றிய மக்கள் கருத்தறியும், மக்களை விழிப்பூட்டும் கலந்துரையாடல்கள் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனது ஏற்பாட்டில் கிளிநொச்சியில் இடம்பெற்று வருகின்றன, அக்கலந்துரையாடலின் வரிசையில் கிளிநொச்சி நகர் வர்த்தகர்களுடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில்தமிழ்தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்டக் காரியாலயமான அறிவகத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டு இடைக்கால அறிக்கை தொடர்பில் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் மேற்படி கருத்துக் களைத் தெரிவித்திருந்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்.

இந்த நாட்டில் வாழும் மக்களது அமைதிக்கும் நிலைத்திருப்புக்கும் சகல இன மக்களையும் கருத்தில் கொள்ளப்பட்டு அவர்களுக்குரிய உரிமைகளை வழங்கக்கூடிய வகையிலமைந்த அரசியல் யாப்பு உருவாக்கப்பட வேண்டும். ஒரு இனத்தையும் மதத்தையும் முதன்மைப்படுத்தி இன்னொரு இனமக்களை அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்த முற்பட்டதன் விளைவே இந் நாட்டின் இனப்பிரச்சினைக்கான முக்கிய காரணமாக அமைந்தது. இப்படியான பாரிய பிழைகள் இனிவரும் அரசியலமைப்பிலும் இடம்பெறுமாக விருந்தால் அதன் விளைவுகள் இதுவரை நடந்தவற்றையும் விடவும் மிக மோசமானதாகவே அமையும். இதில் இந்த அரசாங்கம் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

இலங்கையின் புதிய அரசியலமைப்புக்கான இடைக்கால அறிக்கையில் பல்வேறுபட்ட குறைபாடுகளும் அதனால் ஏற்பட்ட குழப்ப நிலைகளும் காணப்படுகின்றன. இதனைப் பல்வேறு தரப்பினரும் சுட்டிக் காட்டியுள்ளார்கள். இவ் இடைக்கால அறிக்கை தொடர்பில் தமிழ் மக்கள் இதில் என்ன உள்ளது என்பது பற்றி அறிந்து கொள்ள வேண்டும்

எந்த அரசியலமைப்பு வந்தாலும் வடகிழக்கைக் கூறு போடாத வகையிலான வடகிழக்கு மாகாணங்கள் இணைந்த தான தமிழர் தாயகத்தில் தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆளக்கூடிய சுயாட்சியை ஏற்றுக் கொண்ட தான அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட வரைபு உள்வாங்கப்பட வேண்டும் என்றார்.

இக்கலந்துரையாடலில் கிளிநொச்சி நகர் வர்த்தகர்கள். வடக்குமாகாணசபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு இடைக்கால அறிக்கை தொடர்பான கருத்துக்களை முன்வைத்திருந்தனர். (2-281)




### 51 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில்

# 51 பெண் பயனாளிகளின் தொழில் முயற்சிகளுக்கு உதவி வழங்கப்படும்

## ஒட்டுசுட்டான் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவிப்பு

(மல்லாவி)

தேசிய நல்லிணக்க அமைச்சின் ஊடாக 51 இலட்சம் ரூபா நிதி முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள மகளிர் கமக்கார அமைப்புக்களிற்குட்பட்ட பெண் விவசாயிகளில் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 51 பயனாளிகளின் வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் தொழில் முயற்சிகளுக்கு வழங்கப் படவுள்ளதாக ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மனோகரன் சற்குணநேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட 40 மகளிர் கமக்கார அமைப்புக்களில் 804 பயனாளிகள் விவசாயம், விலங்கு வேளாண்மை உட்பட பல்வேறு சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களின் வாழ்வாதாரத்தை வளம்படுத்துவது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. சாந்தி சிறிஸ்கந்தராஜாவினால் அண்மையில் ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தில் கலந்துரையாடல் ஒன்றை பயனாளிகளுடன் மேற்கொண்டு தகவல்களைத் திரட்டி அது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் எடுத்து விளக்கி கலந்துரையாடியதன் பயனாக தேசிய சமாதானத்திற்கான நல்லிணக்க அமைச்சின் ஊடாக 51. இலட்சம் ரூபா நிதியொதுக் கீடு கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்த நிதியுதவி எதிர் வரும் நாட்களில் பயனாளிகளுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் அவர்களின் வாழ்வாதார தொழில் முயற்சிகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக வழங்கி வைக்கப்படவுள்ளதாக ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மனோகரன் சற்குணநேசன் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

### ஜனாதிபதி மக்கள் சேவைக்காக

# வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் பேருந்துகள் ஒரு நாள் மட்டும் சேவை

(குருமன்காடு)

ஜனாதிபதி மக்கள் சேவைக்காக மீண்டும் நேற்று முன் தினம் வவுனியா புதிய பேருந்து நிலையம் இயங்கியுள்ளது.

ஜனாதிபதி மக்கள் சேவை தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்டுவரும் நடமாடும் சேவையின் மூன்றாவது நடமாடும் சேவை வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் பங் கேற்றலுடன் நடைபெற்றது. இதன் நிமித்தம் ஜனாதிபதி மக்கள் சேவை நடமாடும் சேவைக்காக நேற்று முன்தினம் ஒருநாள் வவுனியா புதிய பேருந்து நிலையம் மீள இயங்கியிருந்தது.

ஜனாதிபதி மக்கள் சேவை தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் நடமாடும் சேவைக்காக வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் இருந்து 78 வரையான தனியார் பேருந்துகள் சேவையில் ஈடுபட்டிருந்தன.

இச்சேவையானது நடமாடும் சேவைக்காக வரும் மக்கள் தமது தேவைகளை இலகுபடுத்துவதற்காக இப் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்துகள் சேவையில் ஈடுபட்டிருந்தன.

195 மில்லியன் ரூபாய் நிதியில் கட்டப்பட்ட புதிய பேருந்து நிலையம் கடந்த பல மாதங்களாக இயங்காத நிலையில் ஜனாதிபதியின் நடமாடும் சேவைக்காக மட்டும் மீண்டும் இயங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.( 2-250)

# த.தே.ம. முன்னணி அலுவலகம் புதுக்குடியிருப்பில் திறந்துவைப்பு



தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் முல்லைத் தீவு மாவட்ட அலுவலக திறப்புவிழா நேற்று முன் தினம் பிற்பகல் 2.30 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் தி கிந்துயன் தலைமையில் 7 ஆம் வட்டாரம் சிவநகர் புதுக்குடியிருப்பில் நடைபெற்றது.

இதன்போது தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அலுவலக பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்துவைத்து கட்டடத்தை நாடா வெட்டி திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளையும் சேர்ந்த மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

# பொது அறிவு, விரைவு கணித போட்டிகளுக்கான முடிவுகள்

(கிளிநொச்சி)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் 12 கல்வி வலயங்களைச்சேர்ந்த ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான பொதுஅறிவு மற்றும் விரைவு கணித செய்கைப் போட்டிகள் கடந்த 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சி. பரந்தன் இந்து வித்தியாலயத்தில் நடைபெற்றன.

இப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகள் மற்றும் மாணவர்களின் விபரம் வருமாறு.

**பொது அறிவுப் போட்டி-2017**

முதலாம் இடம் காரைநகர் வலந்தலை தெற்கு அரசு தமிழ்க்கலவன் பாடசாலை. இரண்டாம் இடம். முல்லைத்தீவு விஸ்வநாதன் ஆரம்பப் பாடசாலை . மூன்றாம் இடம். யாழ்ப்பாணம் சென்.ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்.

**விரைவு கணித செய்கைப் போட்டி**

**தரம்-2**

முதலாம் இடம் சிடிலக்சிகா (யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), இரண்டாம் இடம் யு.கிஷாந் (வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி). மூன்றாம் இடம் கே.விதுசாந் (வேலணை தெற்கு ஐயனார்வித்தியாலயம்)

**தரம்-3**

முதலாம் இடம் கே. மாதுரியன் (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை). இரண்டாம் இடம் ஆர். அகிலாஸ் (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்). மூன்றாம் இடம் என். துவிராகவ் (முல்லைத்தீவு தண்ணீரூற்று இந்து தமிழ்க் கலவன் பாடசாலை

**தரம்-4**

முதலாம்இடம்ஜெ.ரகுராம் (சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை). இரண்டாம் இடம் கே.கதிர்நிலவன் (கிளி/ மத் திய ஆரம்பப் பாடசாலை). மூன்றாம் இடம் என்.ஹரிதர் ஷன் (சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை)

**தரம்-5**

முதலாம் இடம் எஸ். அபிலாஸ் (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்). இரண்டாம்இடம்எஸ். வவித் (அளவெட்டி அருணோதயா கல்லூரி). மூன்றாம் இடம் வி.அபிராஜ் (பரு/ தும்பளை சிவப்பிரகாசம் வித்தியாலயம்) (8-9)

### சிறார்களுக்கு கற்றல் உபகரணங்கள்

பூநகரி. ஜெயபுரம் தெற்கில் உள்ள கதிர் முன்பள்ளி சிறார்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் 2500 ரூபாய் பெறுமதியான ஆடைப் பொதிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் முற்பகல் 11 மணியளவில் கதிர் முன்பள்ளியில் நடைபெற்றது.

வாழ்வியல் அறக் கட்டளை நடத்திய இந் நிகழ்வில் முன்பள்ளியில் பயிலும் 36 சிறார்களுக்கும் ரூபாய் 60 ஆயிரம் பெறுமதியான உதவிகள் வழங்கப்பட்டன. சுவிட்சர்லாந்து நாட்டிலிருந்து வருகைதந்த ஆர். இரவீந்திரன் மற்றும் நிர்மலநாதன் ஆகியோர் இவ்வுதவிகளை சிறார்களுக்கு வழங்கி வைத்தனர்.(2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 111 ஏக்கர் காணி விடுவிப்போடு முடியாது மிகுதி 70 ஏக்கரும் விடுவிக்கப்பட வேண்டும்

## கேப்பாப்பிலவு மக்கள் திட்டவட்டமாகத் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

இராணுவம் கையகப்படுத்தியுள்ள எமது பரம்பரை பூமி கேப்பாப்பிலவு 111 ஏக்கர் காணிகள் விடுவிப்போடு முடியாது. மிகுதியாகவுள்ள 70 ஏக்கர் காணியும் விடுவிக்கப்பட்டால் மட்டுமே எமது பூர்வீக நிலமான கேப்பாப்பிலவு விடுவிக்கப்பட்டதாக நாம் கருதுவோம் என போராட்டத்தில் ஈடுபட்டுவரும் கேப்பாப்பிலவு மக்கள் தெரிவித்தனர்.



இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடல்வளம், நிலவளம், நீர்வளம் நிறைந்த பூமியாக 6 தலைமுறைகளாக மக்கள் வாழ்ந்த பூமியே கேப்பாப்பிலவு. இந்த பூமியில் விவசாயம்,மீன்பிடி தொழில்களை செய்து தமது கிராமத்தில் தன்னிறைவோடு வாழ்ந்த நாம்கடந்த 2008ஆம்ஆண்டு நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக எமது வாழ்விடங்கள்,சொத்துக்கள் அனைத்தையும் இழந்து சொந்த ஊரிலிருந்து அகதிகளாக்கப்பட்டோம்.

இதன்பின்னர் பல்வேறு இடங்களிலும் அகதிவாழ்க்கை வாழ்ந்து மே மாதம் நாட்டில் யுத்தம் நிறைவு செய்யப்பட்டதை தொடர்ந்து வவுனியா செட்டிகுளத்தில் அமைக்கப்பட்டிருந்த இடைத்தங்கல் முகாமில் தஞ்சம் புகுந்தோம்.அத்தோடு எமது சொந்த வாழ்விடம் இராணுவ பூமியானது.இந்நிலையில் தமது பூமியை இழந்த மக்கள் மீள்குடியேற்றப்படாது இடைத்தங்கல் முகாமில் வாழ நேரிட்டது.

இதனை தொடர்ந்து இடைத்தங்கல் முகாம்களை மூடும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து இந்த மக்கள் அங்கிருந்து கொண்டு வரப்பட்டு சூரிபுரம் பகுதியில் மாதிரி கிராமமொன்று அமைக்கப்பட்டு அங்கு மக்களின் விருப்பத்துக்கு மாறாக குடியேற்றப்பட்ட போதே தாம் தமது சொந் தக்காணியையே கோரி போராடத் தொடங்கினோம்.

இதனை தொடர்ந்து மக்களின் போராட்டங்கள் தொடர்ந்த நிலையில் சூரிபுரம் மற்றும் கேப்பாப்பிலவு மக்களின் 138 குடும்பங்களுக்கு சொந்தமான 482 ஏக்கர் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி தொடர் போராட்டத்தை கேப்பாப்பிலவு இராணுவ படை கட்டளை தலைமையக வாயிலில் ஆரம்பித்தோம்.மக்களின் போராட்டம் தொடர்ந்து வந்தநிலையில் மீள்குடியேற்ற அமைச்சிடம் நிதியுதவியை கோரிய இராணுவம் அவர்களது காணிகளை கட்டம் கட்டமாக விடுவிக்க இணங்கியது. அந்தவகையில் 5 மில்லியன் ரூபாய்களை மீள்குடியேற்ற அமைச்சிடம் பெற்ற இராணுவம் சூரிபுரம் பகுதிகளை விடுவித்தது.

கேப்பாப்பிலவு பூர்வீக கிராமம் இதுவரை விடுவிக்கப்படாத நிலையில் தமது பூர்வீக கிராமத்தில் விடுவிக்க இருக்கும் 180 ஏக்கர் காணிகளை விடுவிக்குமாறு கோரியே மக்களின் தொடர் கவனயீர்ப்பு போராட்டம் இன்று (நேற்று) 236 ஆவது நாளாகவும் தீர்வொன்று இல்லாது தொடர்ந்து நடைபெற்று வருகிறது


இருப்பினும் அடுத்த கட்டமாக 111 ஏக்கர் காணிகளை விடுவிப்பதாக இராணுவம் தெரிவித்த நிலையில் இந்த காணிகளை விடுவிப்பது தொடர்பில் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் 132 ஏக்கர் காணியை விடுவிக்க இணங்கியதாக மக்கள் கூறிய போதும் மாவட்ட செயலக தகவல்களின் அடிப்படையில் 111 ஏக்கர் இராணுவம் அடுத்த கட்டமாக விடுவிக்கப்படும் என கூறப்படுகிறது.

மீதமாகவுள்ள 70 ஏக்கரும் விடுவிக்கப்பட்டாலே எமது கேப்பாப்பிலவு என்பது இராணுவத்திடமிருந்து விடுவிக்கப்படுமெனவும் எமது வழிகளையும் எமது வாழ்வாதாரத்தையும் கருதி இராணுவம் எமது முற்றுமுழுதான (180ஏக்கர்) கேப்பாப்பிலவு விடுவிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளோம்.

இந்த காணிகளை மக்களிடம் ைகயளித்து மக்களின் காணிகளை விடுவித்து சொந்த கிராமத்தில் அகதி வாழ்வு வாழும் மக்களின் கண்ணீரை துடைக்க வேண்டியது இந்த நல்லாட்சி அரசின் பொறுப்பாகும் என அவர்கள் தெரிவிக்கின்றனர். (2-281)

# ஒரு கிலோ 125 கிராம் கேரளக் கஞ்சா மீட்பு

## சந்தேகத்தில் இருவர் கைது




(மல்லாவி )

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கி வரும் விசேட முறியடிப்புப் பொலிஸ் படைப் பிரிவின் பொலிஸார் ஏ-9 வீதியிலுள்ள ஆனையிறவுக்கும் தட்டுவன்கொட்டி கிராமத்திற்குச் செல்லும் பிரதான வீதிக்கும் இடையே உள்ள பேருந்து தரிப்பிடத்தில் சந்தேகத்திற்கிடமான வகையில் காணப்பட்ட இரு நபர்களை சோதனையிட்ட போது ஒரு கிலோ 125, கிராம் நிறையுடைய கேரளக் கஞ்சாவை தமது உடைமையில் வைத்திருந தமை கண்டுபிடிக்கப்பட நிலையில் அவர்களை கைது செய்து கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளதாக கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 6.30 மணியளவில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும்தெரிய வருவதாவது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத்திற்கு ஏ-9, வீதி ஊடாக கேரளக் கஞ்சா கடத்திச் செல்லப்படுவதாக கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து. பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் விசேட உத்தரவுக்கு அமைய கிளிநொச்சி,முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான விசேட முறியடிப்பு பொலிஸ் படைப்பிரிவின் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் கருணாரட்னம் ஜெசிந்தன் தலைமையில் பொலிஸ் கொஸ்தாபல்களான பந்துல (15720), குலதீபன் (8640), குமணன் (33961), பொலிஸ் கொஸ்தாபல் (சாரதி ) மதுசங்க (80312) ஆகியோர் அடங்கிய பொலிஸ்அணியினர் ஆனையிறவுக்கும் பரந்தனுக்கும் இடையே விசேட வீதி ரோந்துப் பணியில் ஈடுபட்ட போதே கேரளக் கஞ்சாவுடன் சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

இச்சம்பவத்தில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களுடன் கைதான சந்தேக நபர்களை கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி,முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(2-15)




# தலைமன்னாரில் கைதான இந்திய மீனவர்கள் நான்கு பேருக்கும் விளக்கமறியல்

(மன்னார்)

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில் கடந்த 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் தலை மன்னார் கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தங்கச்சிமடம் பகுதியைச் சேர்ந்த 4 மீனவர்களையும் எதிர்வரும் நவம்பர் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார்பதில் நீதவான் நேற்று முன்தினம் சனிக்கிழமை உத்தரவிட்டார்.

தங்கச்சிமடம் பகுதியைச் சேர்ந்த 4 மீனவர்கள் நாட்டுப் படகு ஒன்றில் கடந்த 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் இராமேஸ்வரத்தில் இருந்து மீன்பிடிக்க கடலுக்குச் சென்றுள்ளனர்.

குறித்த மீனவர்கள் இலங்கை கடற்பரப்பினுள் நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது தலைமன்னார் கடற்பரப்பில்வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தலைமன்னார் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

தலைமன்னார் கடற்படையினர் விசாரணைகளின் பின்னர் குறித்த 4 மீனவர்களையும் நேற்று முன்தினம் சனிக்கிழமை மதியம் மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் குறித்த மீனவர்களை விசாரணைகளின் பின் நேற்று முன்தினம் சனிக்கிழமை மதியம் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் பதில் நீதவான் குறித்த 4 மீனவர்களையும் எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (இ-4)

# பூநகரி-சங்குப்பிட்டி வீதியில் விபத்து;இருவர் படுகாயம்

## வாகனம் தடம்புரள்வு



(மல்லாவி )

பூநகரி பொலிஸ் நிலைய பிரிவில் உள்ள பூநகரி - சங்குப்பிட்டி வீதியில் நேரெதிராக பயணித்த இரண்டு வாகனங்கள் ஒன்றையொன்று விலகிச் செல்ல முற்பட்ட வேளை மோதிக் கொண்டு விபத்துக்குள்ளானதில் பிக்கப் வாகனம் ஒன்று தடம் புரண்டுள்ள நிலையில், 2 பேர் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு பூநகரி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் நடை பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

கிளிநொச்சியிலிருந்து பூநகரி - சங்குப்பிட்டி வீதி ஊடாக யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த பிக்கப் ரக வாகனமும் யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி - சங்குப்பிட்டி வீதி ஊடாக கிளிநொச்சிநோக்கி பயணித்த சொகுசு வாகனமும் ஒன்றை ஒன்று விலகிச்செல்ல முற்பட்ட வேளை மோதி விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த இருவர் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற பூநகரி பொலிஸார் விபத்துக் காரணமாக சிறிது நேரம் தடைப்பட்டிருந்த வீதிப் போக்குவரத்தைச் சீர்படுத்தியதுடன் விபத்துக்குள்ளான வாகனங்களை மீட்டு பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். யாழ். இந்தியத் துணைத் தூது வர் ஆர்.நடராஜனின் மகள் பயணித்த வாகனம் விபத்துக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-312-281-15)

## சிறுவர்,முதியோர் தின விழா


வவுனியா, தரணிக்குளத்தில் சிறுவர், முதியோர் தின விழா வவுனியா, தரணிக்குளம் கணேஷ் வித்தியாலயத்தில் ஈச்சங்குளம் கிராம சேவகர் த.அன்ரனிதாஸ் தலைமையில் நடைபெற்றது. இதன்போது முதியோர் கௌரவிப்பும் சிறுவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தான், ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா, முன்னாள் வடமாகாண சபை சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான செ.மயூரன், எம்.பி. நடராசா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம், சிறீரெலோ கட்சியின் செயலாளர் ப.உதயராசா, தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர் (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் சி.சிவலிங்கராஜாவின்
# மேடையிலே பேசுவோம்

-சிறு அறிமுகம்-




பேச்சு பேச்சு எனும் பெரும் பூனை வந்த கால் கீச்சு கீச்செனும் கிளி எனும் பாடல் அடியை சிறுவயதில் ஏதோ ஒரு நூலில் படித்திருக்கிறேன். அந்தளவுக்கு பேச்சு என்ற சொல்லைக் கேட்டாலே பயந்து நடுங்குபவர்களை பரவலாகக் காணலாம்.

போர்க்களத்தில் ஆயிரம் படையினர் எதிர்த்து நின்ற போதும் அஞ்சாது துணிந்து நிற்பவர்களும் கூட மேடைப்பேச்சு என்று வந்தவுடன் உள்ளுக்குள் நடுங்கிக் கொண்டு பேசுவதை பழைய வரலாறுகள் எடுத்துக் கூறும்.

பேசுவதே இவ்வளவு சிரமம் என்றால் பேச்சை எழுதுவது அல்லது தயாரிப்பது இதைவிடக் கடுமையானது. எந்த விடயமும் இல்லாமலே மணிக்கணக்காகப் பேசக் கூடிய விற்பன்னர்கள் பலர் இருக்கின்ற போதும் பேச்சை ஒழுங்கு படுத்திப் பேசுவதென்பது ஒரு கலைதான். சமய விழாக்களின் போதும் தமிழ்த்தினப் போட்டிகளின் போதும் பேச்சினை எழுதிக் கொள்வதற்காக மாணவர்கள் சமய ஆசிரியர்கள், தமிழ் ஆசிரியர்களின் வீடுகளுக்கு அலைந்து திரிவது வழமையாகும். ஒரு தலைப்பிலேயே ஒன்றுக்கு மேற்பட்ட பேச்சுக்களை எழுதித் தருமாறு மாணவர்கள் பலர் வருகின்ற போது ஆசிரியர்கள் படும் துன்பம் சொல்லில் வடிக்க முடியாது.

ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் துன்பங்களைத் தீர்க்கும் முகமாக பேராசிரியர் சி.சிவலிங்கராஜாவின் ''மேடையிலே பேசுவோம்'' எனும் சிறுவர்களுக்கான முப்பது மேடைப் பேச்சுக்களைக் கொண்ட நூல் வெளி வந்துள்ளது.

நூலாசிரியரான பேராசிரியர் சி.சிவலிங்கராஜா அவர்கள் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறையின் முன்னாள் தலைவர், ஈழத் தமிழ் அறிஞர்களில் முதன்மையான ஒருவர். ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு, ஈழத்து தமிழ் உரை மரபு முதலிய பல நூல்களின் ஆசிரியர். நாடறிந்த நகைச் சுவை பேச்சாளர். பாடசாலைக் காலத்திலேயே பல பேச்சுப் போட்டிகளில் பங்கு பற்றி தங்கப் பதக்கங்கள் பல வென்ற ஒருவர். எனவே தகுதி வாய்ந்த ஒருவரிடமிருந்து "மேடையிலே பேசுவோம்'' எனும் நூல் வெளிவந்துள்ளது வரவேற்கத் தக்கதாகும். தமது நூலாக்க முயற்சி பற்றி "பேச்சு எழுதும் போது எழுதுபவர் பேசிப் பேசித்தான் எழுத வேண்டும். அப்பொழுது தான் அது பேச்சாக அமையும். பேச்சுக்கும் கட்டுரைக்கும் இடையே உள்ள வேறுபாட்டினை பேச்சு எழுதுபவர் விளங்கிக் கொள்ள வேண்டும்.

பேசுபவர்களின் வயது சொற்களஞ்சியம், சூழல், உளவியல் முதலியவற்றை மனம் கொண்டே பேச்சு எழுத வேண்டும்.

ஓரளவுக்கு இவற்றை மனம் கொண்டே இப் பேச்சுக்களை எழுதியுள்ளேன்" என பேராசிரியர் அவர்கள் குறிப்பிடுவது சிறப்பான தாகும்.

என் அம்மா, தாயன்பு, என் ஆசிரியர், காலைக்காட்சி, கடற்கரைக்காட்சி, சுப்பிரமணிய பாரதியார், ஆறுமுகநாவலர், தைப்பொங்கல், நவராத்திரி முதலிய முப்பது தலைப்புக்களில் பேச்சுகள் எழுதப்பட்டுள்ளன. தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரையான மாணவர் களை முக்கியத்துவப்படுத் தியே மிக எளிமையான சிறிய சிறிய சொற்களைக் கொண்ட செந்தமிழ் உரை நடையில் ஆசிரியர் பேச்சுக்களை உருவாக்கியுள்ளார்.

பேராசிரியரின் உரை நடைச் சிறப்பிற்கு "காலைக்காட்சி" எனும் கட்டுரையில் அமைந்த ஒரு பகுதியை உதாரணமாகத் தரலாம்.

"உலகத்தை மூடி மறைத்திருந்த இருள் மெல்ல மெல்ல விலகுகிறது. சேவற்கோழிகள் சிறகடித்து கொக்கரக்கோ கொக்கரக்கோ என்று கூவுகின்றன. பல்வேறு பறவைகளும் கீச்சுக் கீச்சென்று கத்துகின்றன. இரவு முழுவதும் திருடர்கள் போலத் திரிந்த ஆந்தையும் கூகையும் தத்தம் இருப்பிடம் நோக்கிப் பறக்கின்றன. இக்கட்டுரைகளுடன் மாணவர்களைக் கவரக்கூடிய முறையில் தலைப்புடன் தொடர்புடைய படங்களும் இணைக்கப்பட்டுள்ளமை இந்நூலுக்குரிய இன்னொரு சிறப்பம்சமாகும்.

பேச்சின் நேரத்தை கூட்டிக் குறைப்பதற்கு ஏதுவாக குறித்த தலைப்பு பற்றிய நீலாவணன் , கவிமணி, வித்துவான் வேந்தனார், ஆடலிறை முதலிய கவிஞர்களின் பாடல்களும் கவிஞராகிய நூலாசிரியரால் புதிதாக எழுதப்பட்ட கவிதைகளும் கட்டுரைகளின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளன.

எங்கள் வீடு பற்றிய
"வீடு எங்கள் வீடு
விசாலமான வீடு
பாடுபட்டு எங்கள்
பாட்டன் கட்டிய வீடு"
எனத் தொடங்கும் பாடல் பேராசிரியர் அவர்களின் கவித்துவத்திற்கு சிறந்த உதாரணமாகும்.

பிள்ளைகளைப் பேச்சாளராக்க விரும்பும் பெற்றோர் ஆரம் பத்தில் அவர்கள் மனனம் செய்து பேசுவதற்கு பொருத்தமான பேச்சுக்கள் முப்பது இந் நூலில் தரப்பட்டுள்ளன. எனவே பெற்றோரே பேச்சு எழுது வதற்காக அங்குமிங்கும் அலைந்து திரியாமல் வீட்டில் இருந்தபடியே எத்த கைய பேச்சினையும் பிள்ளைகளுக்குக் கொடுப்பதற்கு, "மேடையிலே பேசுவோம்'' எனும் நூல் ஒவ்வொரு இல்லத்திலும் இருக்க வேண்டியது அவசியமானதாகும்.

ம.பா.மகாலிங்கசிவம்

# மனித பப்பிலோமா வைரஸ் தடுப்பூசி
# பெற்றோருக்கான தகவல் குறிப்பு

இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் தேசிய தடுப்பு மருந்தேற்றல் திட்டத்தின் கீழ் கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் வருமுன் காப்பதற்கான மனித பப்பிலோமா வைரஸ் (HPV) தடுப்பூசி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையில் பெண்களில் ஏற்படும் புற்றுநோய்களில் கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் 2ஆவது இடத்தில் உள்ளது. இலங்கையில் வருடாந்தம் 850-950 பெண்கள் கருப்பைக் கழுத்து புற்றுநோய் முற்றிய நிலையில் இனங்காணப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்றனர். இவர்களில் பெரும் பகுதியினர் பாரிய சிக்கல்களுக்கு முகம் கொடுப்பதுடன் மிக குறுகிய காலத்தினுள் இறந்து விடுகின்றார்கள்.

பெரும்பாலான கருப்பைக் கழுத்து புற்று நோய்கள் HPV வைரஸ் தொற்றினால் ஏற்படுத்தப்படுகின்றது. இவ் வைரஸ் ஆனது சாதாரணமாக ஆரம்பத்தில் எவ்வித வெளி அறிகுறிகளையும் ஏற்படுத்தாமல் பெண்ணொருவரின் கருப்பை கழுத்திலுள்ள கலங்களினுள் புகுந்து அக் கலங்களில் இயல்புகளை மாற்றி நீண்ட காலப்போக்கில் அக்கலங்களை புற்றுநோய் கலங்களாக மாற்றிவிடுகின்றது. அப்பெண்ணிற்கு வயதாகும் போது புற்றுநோய்க் கலங்கள் பெருக்கமடைந்து கருப்பைக் கழுத்துப் புற்று நோய் ஏற்படும். கருப்பைக் கழுத்து, யோனி வழி போன்றவற்றில் இருந்து எடுக்கப்படும் கல மாதிரிகளில் பரிசோதனையை நடத்துவதன் மூலம் அவ் வைரஸ் தொற்று இனங் காணப்படலாம். இது ஏற்கனவே உருவாகியுள்ள கருப்பைக் கழுத்து புற்றுநோயை அதன் ஆரம்ப நிலைகளிலே இனங் கண்டு சிகிச்சை அளிப்பதற்காக மட்டுமே பயன்படும் 'ஸ்கிரீனிங்' பரிசோதனையாகும். இதன் மூலம் ஏற்கனவே உருவாகியுள்ள புற்றுநோய் மேலும் பரவுவதையும் முற்றிய நிலைக்குச் செல்வதையும் தவிர்க்க முடியும். ஆனால் மனித பப்பிலோமா வைரஸ் (HPV) தடுப்பூசியினை வைரஸ் தொற்று ஏற்பட முன்னர் வழங்குவதன் மூலம் மட்டுமே இப்புற்றுநோய் உருவாக முன்னர் தடுக்க முடியும். எனவே பெண்களுக்கு இத்தடுப்பூசியினை மிக இளம் வயதில் அதாவது வைரஸ் தொற்று ஏற்பட முன்னர் வழங்குவது அவசியமாகும்.

HPV என்பது 100 இற்கும் மேற்பட்ட வைரஸ் உப வகைகளின் கூட்டமாகும். இவற்றில் சில உப வகைகளே கருப்பைக் கழுத்து புற்று நோயை ஏற்படுத்துகின்றன. 99 வீதமான கருப்பைக் கழுத்துப்புற்று நோய்கள் HPV தொற்றினால் ஏற்படுத்தப்படுகின்ற அதேவேளை அவற்றில் 70 வீதமானவை வகை 16, வகை 18 என்பவற்றினால் ஏற்படுகின்றன. (HPV) தடுப்பூசியானது கருப்பைக் கழுத்து புற்று நோயை ஏற்படுத்தும் பிரதான வகைகளான 16, 18 என்பவற்றை தொற்றுவதை தடுப்பதன் மூலம் எதிர்காலத்தில் பெண்களில் ஏற்படும் கருப்பைக் கழுத்து புற்றுநோயை தடுக்கின்றது.

அத்துடன் இத்தடுப்பூசி கருப்பைக் கழுத்து புற்றுநோயை ஏற்படுத்தும் HPV வைரஸின் ஏனைய உப வகைகளிலிருந்தும் பாதுகாப்பளிக்கின்றது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இத்தடுப்பூசி பாடசாலைப் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டாலும் பெண்கள் வயதாகும் போது கருப்பைக் கழுத்துப் புற்றுநோய்க்கான ஸ்கிரீனிங் பரிசோதனை தொடர்ந்து மேற்கொள்ளப்படும். அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் பூட்டான், பங்களாதேஷ், நேபாளம் போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பாடசாலைப் பெண் பிள்ளைகளுக்கான HPV தடுப்பூசி வழங்கும் திட்டமானது வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டு வருகிக்றது.

இலங்கையின் தேசிய தடுப்பு மருந்தேற்றல் திட்டத்தினுள் 2017 ஆம் ஆண்டு முதல் கருப்பை கழுத்துப் புற்றுநோயைத் தடுப்பதற்கான HPV தடுப்பூசி உள்வாங்கப்படவுள்ளது. அதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படும் கருப்பைக் கழுத்துப் புற்றுநோயைத் தடுப்பதற்கு பெண் பிள்ளைகளுக்கு இத் தடுப்பூசியை வழங்க சுகாதார அமைச்சு தீர்மானித்தள்ளது.

இத் தடுப்பூப்பூசி பாதுகாப்பானதுடன் 2006 ஆம் ஆண்டிலிருந்து உலகளாவிய ரீதியில் பதிவு செய்யப்பட்டுப் பாவனையிலுள்ளது. இலங்கையில் இத் தடுப்பூசி 2012 இல் பதிவு செய்யப்பட்டுப் பாவனையிலிலுள்ள இலங்கையில் இத் தடுப்பூசி 2012 இல் பதிவு செய்யப்பட்டு தனியார் வைத்தியசாலைகளில் கட்டணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

எனினும் 2017 ஆம் ஆண்டிலிருந்து அனைத்து பெண் சிறார்களுக்கும் இலவசமாக கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.10 வயது பூர்த்தியடைந்து தரம் 6 இலுள்ள எல்லாப் பெண் பிள்ளைகளுக்கும் இத் தடுப்பூசி 2 தட்டைவகள் 6 மாத இடைவெளியில் வழங்கப்பட வேண்டும். இதனைப் பாடசாலையில் ஏதாவது காரணங்களால் பெறத்தவறும் பட்சத்தில் குறித்த பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கிளினிக்கில் (MOH கிளினிக்) பெற்றுக் கொள் ளலாம்.

அத் தடுப்பூசி பாடசாலையில் வழமையாக வழங்கப்படும் ஈப்பு வலி ரொக்சைட் (aTd) தடுப்பூசி வழங்கப்படும் அதே நாளில் சேர்த்து வழங்கப்படக்கூடியது. முதலில் தரம் 6 இலும் பின்னர் 6 மாத இடைவெளியில் தரம் 6 அல்லது தரம் 7 இல் வழங்கப்படும்.

தடுப்பூசி பாதுகாப்பான ஊசி ஏற்றப்படும் இடத்தில் வலி, தோலில் மெல்லிய சிவப்புத் தன்மை போன்ற மிகச் சிறிய பாரதூரமற்ற பக்க விளைவுகள் ஏற்படலாம். பாராதூரமான பக்க விளைவுகளுக்கான வாய்ப்பு மிக மிகக் அரிதாக இருப்பதுடன் வேறு நாடுகளில் இதுவரை அவ்வாறான தீயவிளைவுகள் எதுவும் ஏற்படவில்லை என ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

எங்கள் பெண் பிள்ளைகள் கற்கும் பாடசாலை அமைந்துள்ள பிரதேசத்திற்குரிய பொதுச் சுகாதார பரிசோதகர் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோரைப் பிள்ளையின் பாடசாலைக்கு வருகை தந்து உங்கள் பிள்ளைக்கு (HPV) தடுப்பூசியினை இரண்டு தடவைகளும் ஏற்றுமாறு வேண்டுவதன் மூலம் மனித பப்பிலோமா வைரசினால் ஏற்படும் கருப்பைக் கழுத்துப் புற்றுநோயிலிருந்து உங்களது பெண் பிள்ளைகளைப் பாதுகாத்துக் கொள்ளுங்க்ள்.

**தொற்றுநோய் விஞ்ஞான அலகு**
**சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம்-21, அராலி வீதி, 2ஆம் குறுக்குத் தெரு, ஆதன இல. 52 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், அராலிவீதி, புதிய சோனகதெரு, 2ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த அப்துல் ப.கரீம் கைம்பெண் காமிலா குறித்த ஆதனத்திற்கு 1989 ஆம் ஆண்டு பிரசித்த நொத்தாரிசு M.M.மன்சூர் முகதாவில் தனது பெயரில் அறுதி சாதனம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருந்ததென்றும், கடந்த கால (யுத்த) சூழ்நிலை காரணமாகவும் 1990ஆம் ஆண்டு தாங்கள் வெளியேற்றப்பட்டமையினால் எவ்வித ஆவணங்களும் கொண்டு செல்ல முடியவில்லை என்றும், இதன் பதிவிற்கு யாழ். மாவட்ட காணிப் பதிவகத்தில் தேடுதல் மேற்கொண்டும் எந்தப் பலனும் கிடைக்கவில்லையென்றும் இவ் ஆதன உரித்து தொடர்பில் எவ்வித பிசகு தடையுமின்றி ஆட்சி செய்து வருகின்றேன் என வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு சிவலிங்கம் இளங்கீரன் முகதாவில் நிறைவேற்றிய 7686/2017.08.14 இலக்க நன்கொடை உறுதிமூலம் தனது மகன் முஹம்மது ஸரூக்கிற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

ஆதனவிபரம்-வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாண பகுதி, வண்ணார்பண்ணை கோவிற்பற்று, வண்ணார்பண்ணை இறை "உப்புக் குளம் கரையும் பொம்மை வெளியும்" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் மெல்வின் ஞானப்பிரகாசம் அவர்களின் வரைபட இல 2333/2016.02.09 துண்டு-01 எனக் காட்டப்பட்ட நில பர.00, குளி-17.15 ஆகும். இதற்கு எல்லை கிழக்கு-2ம் குறுக்குத்தெரு, வடக்கு-திருமதி.ஷரிவ்வினாதனம், மேற்கு-கத்தோலிக்க மயானம், தெற்கு- கத்தோலிக்க ஆலயம்.

தற்போது இவ்வாதனத்தை முஹம்மது ஷரூக் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது முஹம்மது ஷரூக் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப் பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(சி-127)

ஆணையாளர்,
மாநகரசபை.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



பொன்மனப் பேராளன் கல்விக் கொடையாளர்

## உயர்திரு. இராசையா குவேந்திரநாதன்

(உரிமையாளர் ராஜா பிளாசா)

கோண்டாவில் மேற்கு மக்கள் நலன்பேணும் அமைப்பினால் 08.10.2017 அன்று நடத்தப்பட்ட ஐந்தாம் ஆண்டு நிகழ்வில் கோண்டாவில் வாழ் சமூக சேவையாளர்கள் உயர்திரு. இராசையா குவேந்திரநாதன், குவேந்திரநாதன் றஞ்சினிதேவி தம்பதியினருக்கு "இல்லக ஜோதி" எனும் கௌரவ பட்டத்தினை கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா அவர்களும் பேராசிரியர் க.தேவராஜா அவர்களும் இணைந்து வழங்கி கௌரவித்தமையை பாராட்டி நாமும் வாழ்த்துவதோடு மேலும் பல்லாண்டு காலம் வாழ இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

"நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோருக்கும் பெய்யுமாம் மழை"

*தங்கள் சமூகப்பணி தொடர வாழ்த்துவோர்,*

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்.

(G-137)

# சுகாதாரத்துறை தொழிற்சங்கங்கள் 26ஆம் திகதி வேலை நிறுத்தம்!

(கொழும்பு)

கோரிக்கைகள் சிலவற்றை முன்வைத்து எதிர்வரும் 26ஆம் திகதி சுகாதார த்துறை தொழிற்சங்கங்கள் பல அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட திட்டமிட்டுள்ளன. இதற்கமைய, தாதிமார், நிறை வுகாண் வைத்தியர்கள், இடைப்பட்ட சுகாதார சேவையாளர்கள் உள்ளிட்ட சங்கங்களை சேர்ந்தவர்கள் இந்த வேலை நிறுத்த போராட்டத்தில் குதிக்கவுள்ளனர்.

சுகாதார சேவைக்குள் மேற்கொள்ளப்பட்டுள்ள பதவி மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டே இந்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. பதவி மாற்றங்களால் ஏற்பட்டுள்ள சம்பள முரண்பாட்டுப் பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு கோரியே இந்த போராட்டம் நடத்தப்படவுள்ளது.

இதற்கு முன்னரும் பல தடவைகள் சுகாதார அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற போதிலும், இதுவரை அதற்கு நிரந்தர தீர்வு காணப்படாத நிலையில் இந்தப் போராட்டத்தை நடத்தத் திட்டமிட்டுள்ளதாக தொழிற்சங்க தகவல்கள் தெரிவித்துள்ளன.

(இ-7)

## வைத்தியம்

தலைமுடி உதிர்தல், முள்ளந்தண்டு பிரச்சினை, பாரிசவாதம், சலரோகம், உடல் பருமன் குறைத்தல் அல்லது கூட்டுதல் (வயிறு/ மார்பு/ கை), ஆண்மைக் குறைபாடுகள், குழந்தையின்மை போன்றவற்றிற்கு சிகிச்சை வழங்கப்படும்.

தொடர்பு:Shan's Health Care.
255, K.K.S. Rd, Kokuvil
TP- 077 035 7307

(1041)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 69 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA/அரச தொழில்<br>தொ.இ: B/7128 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 65 செவ் 8 இல்<br>உயரம்: 158 cm<br>தகைமை/தொழில்: BBA<br>தனியார் தொழில்<br>தொ.இ: G/5141 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: AL/பிரான்ஸ் PR<br>எதிர்பார்ப்பு:- வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/7129 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 53<br>உயரம்: 169 cm<br>தகைமை/தொழில்: BA/அரச தொழில்<br>தொ.இ: G/5143 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ பிரான்ஸ் NOT PR<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/7130 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 53 செவ். 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/5164 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில் Diploma / ஆசிரியர்<br>தொ.இ: B/7132 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 33 உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L<br>லண்டன் NOT PR<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/5172 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



கேட்க வாருங்கள்! கேட்க வாருங்கள்!

**இன்று (23.10.2017) சுழிபுரம் பறாளாய் ஈசுர விநாயகர் தேவஸ்தானத்தில்...**

08.11.1991 ஈசுர விநாயகரிடம் சமர்ப்பித்த மனுவான *கொழும்பு அரசியற் சூறாவளி *இடைக்கால அரசியற் சமாதான தீர்வு *இடம்பெயர்ந்து அலைந்து திரியும் மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்குச் செல்லல் போன்ற கோரிக்கைகளுக்கான

## ஆன்மீகப்போராட்ட 26ஆம்ஆண்டுப்பூர்த்தி வழிபாடு

பிற்பகல் 3.00 மணியளவில் சதுர்த்தி விசேட அபிஷேகம், பூஜை வழிபாடு, சுவாமி வீதியுலா நடைபெறும்.
எமது கோரிக்கைகள் அனைத்தும் விரைவாக நிறைவேறிட இரவு 7.00 மணியளவில் 108 விடிவிளக்குகள் ஏற்றி வைக்கப்படும்.
'ஆன்மீகத்தின் உச்ச நிலையை அனைத்து மக்களும் உணரவேண்டும்'. (முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க)

சோழியூரான்-பிறைசூடிக்குரு (மனுதாரன்).

(1093)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## குணமடைந்து வருகிறார் நடராஜன்

### வைத்தியர்கள் தகவல்

(சென்னை)

தீவிர சிகிச்சை பிரிவில் இருக்கும்நடராஜனுக்கு பொருத்தப்பட்ட கல்லீரல் மற்றும் சிறுநீரகம் நன்றாக செயற்படுவதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

அவருடைய உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதால் விரைவாக குணமடைந்து வருகிறார்.

அவருக்கு, 'டிரக்கியாஸ்டமி' என்ற செயற்கை சுவாசக்கருவி பொருத்தப்பட்டு அதன் மூலம் சுவாசித்து வருகிறார்.



நடராஜனுக்கு கடந்த 4. ஆம் திகதி உறுப்பு மாற்று அறுவைச்சிகிச்சை செய்யப்பட்டு கல்லீரலும், சிறுநீரகமும் வெற்றிகரமாக பொருத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அவருக்கு 'டிரக்கியாஸ்டமி' கருவி பொருத்தப்பட்டு, தீவிர கல்லீரல் சிகிச்சை பிரிவில் அனுமதித்தனர். நடராஜனின் உடல்நிலை குறித்து அவருக்கு சிகிச்சை அளித்து வரும் வைத்தியர்கள் கூறியதாவது,

கல்லீரல் மற்றும் சிறுநீரகம் அறுவைச்சிகிச்சை முடிந்து நேற்றுடன் 19 நாட்கள் நிறைவடைந்த நிலையில் நடராஜனுக்கு பொருத்தப்பட்டுள்ள கல்லீரல் மற்றும் சிறுநீரகம் நல்ல முறையில் இயங்குகிறது. அறுவைச் சிகிச்சைக்கு பிறகு அவருடைய உடல்நிலையில்...

இருந்தாலும் அவர் தகவல்களை நல்ல முறையில் பகிர்ந்து கொள்கிறார். தொடர்ந்து அவர் தீவிர கல்லீரல் சிகிச்சை பிரிவில் வைத்தியர்களின் தீவிர கண்காணிப்பில் உள்ளார். அவருடைய உடல்நிலை குறித்த மருத்துவ தகவல்கள் அவ்வப்போது அவருடைய குடும்பத்தினருக்கு தெரிவிக்கப்பட்டு வருகிறது.

தற்போதும் தீவிர கல்லீரல் சிகிச்சை பிரிவில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளதால், நோய்த் தொற்று ஏற்பட்டு விடாமல் தடுப்பதற்காக யாரையும் பார்க்க அனுமதிப்பதில்லை.

ஆனால் குடும்பத்தினருக்கு அவ்வப்போது 5 நிமிடம் மட்டும் பார்க்க அனுமதி வழங்கப்படுகிறது எனத் தெரிவித்தனர். (8)

## இழுபறிபடும் இரட்டை இலை

### விசாரணை இன்று

(சென்னை)

இழுபறிபடும் இரட்டை இலைச் சின்னம் தொடர்பான விசாரணையில் இன்று தீர்ப்பு வெளியாக வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இரட்டை இலைச் சின்னம் யாருக்கு என்பதை அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்குள் முடிவு செய்யும்படி தேர்தல் ஆணையத்துக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதையடுத்து தேர்தல் ஆணையம் பழனிச்சாமி அணியிடமும், தினகரன் அணியிடமும் ஏற்கனவே இரண்டு கட்ட விசாரணை நடத்தி இருக்கின்றன. இரு அணியினரும் ஏராளமான ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளார்கள்.



கடந்த 16ஆம் திகதி இருதரப்பு சட்டத்தரணிகளின் வாதம் நடந்து முடிந்தது. இதையடுத்து வழக்கு விசாரணை 23 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

விசாரணை முடிந்து விட்டதால் இன்று தீர்ப்பு வழங்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

முதலமைச்சர் பழனிச் சாமி அணியினர் இரட்டை இலை தங்களுக்கே கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருக்கிறார்கள். இரட்டை இலை கிடைத்ததும் தன் ஆதரவாளர்களுக்கு கட்சியில் பதவிகள் வாங்கிக் கொடுக்க ஓ.பி.எஸ். திட்ட மிட்டுள்ளார்.

அதிக எம்.பி.க்கள், எம். எல்.ஏக்கள் பொதுக்குழு உறுப்பினர்கள் முதலமைச்சர் பழனிச்சாமி பக்கம் இருப்பதால் இரட்டை இலை அவர்களுக்கு வழங்கவே வாய்ப்பு அதிகம் என்ற கருத்து நிலவுகிறது. (8)

## பட்டுக்கோட்டைக்கு வரும் முதல்வருக்கு கறுப்புக்கொடி

### விவசாயிகள் அறிவிப்பு

(சென்னை)

ஒக்டோபர் 26ஆம் திகதி பட்டுக்கோட்டைக்கு வரும் முதல்வர் பழனிச்சாமிக்கு கறுப்புக்கொடி காட்டுவோம் என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.



பயிர்க் காப்பீடு பெற்றுதரவில்லை என்று முதல்வர் பழனிச்சாமி மீது விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

முதல்வர் பழனிச்சாமி ஒக்டோபர் 26 ஆம் திகதி பட்டுக்கோட்டையில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்கிறார்.

பழனிச்சாமிக்கு கறுப்புக் கொடி காட்ட தஞ்சை மாவட்டம் திருவோணம் ஒன்றிய விவசாயிகள் சங்கம் முடிவு செய்துள்ளன. (8)

## எல்லையில் அத்துமீறும் பாகிஸ்தான்



(ஸ்ரீநகர்)

ஜம்மு-காஷ்மீர் எல்லைப்பகுதியில் பாகிஸ்தான் படைகள் தொடர்ந்து நேற்று இரண்டாவது நாளாக அத்துமீறி துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்டு வருகின்றன.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறியவகையில் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் உள்ள சர்வதேச எல்லைகோட்டுப் பகுதியில் உள்ள இந்திய நிலைகளின்மீதும், இந்திய எல்லையோர கிராமங்களில் உள்ள குடியிருப்பு பகுதிகளிலும் பாகிஸ்தான் இராணுவத்தினர் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இங்குள்ள பாரமுல்லா மாவட்டத்திற்குட்பட்ட உரி எல்லைக்கோட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் பாகிஸ்தான் இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இந்திய படையினருக்கு தேவையான பொருட்களை கொண்டுசெல்லும் இராணுவ போர்ட்டர் பரிதாபமாக உயிரிழந்தார். இரு பெண்கள் காயம் அடைந்தனர்.

இந்நிலையில், தொடர்ந்து இரண்டாவது நாளாக கமல்கோட் பகுதியில் நேற்றுக் காலையில் இருந்து பாகிஸ்தான் இராணுவத்தினர் அத்துமீறி துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்டு வருவதாகவும், இந்திய வீரர்கள் பதிலடி கொடுத்து வருவதாகவும் முதல்கட்ட தகவல் வெளியாகியுள்ளன.(8)

## உயிருடன் மீட்கப்பட்டார் கடத்தப்பட்ட பத்திரிகையாளர்

(லாகூர்)

இந்தியருக்கு உதவியதால் பாகிஸ்தானில் கடத்தப்பட்ட பத்திரிகையாளர் இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு மீட்கப்பட்டுள்ளார்.

இந்திய பொறியாளர் ஒருவருக்கு எதிரான வழக்கை பின்பற்றியதை தொடர்ந்து கடத்தப்பட்ட பாகிஸ்தான் பெண் பத்திரிகையாளர் இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு மீட்கப்பட்டுள்ளார்.



மும்பையை சேர்ந்த ஹமித் அன்சாரி என்பவர், ஒன்லைன் மூலம் நட்பான ஒரு பெண்ணை தேடி, 2012 ஆம் ஆண்டு பாகிஸ்தான் சென்றார்.

அவர், சட்டவிரோதமாக பாகிஸ்தானில் நுழைந்ததாக கூறியும், உளவு பார்த்ததாகக் கூறியும், அந்நாட்டு பொலிஸார் கைது செய்தனர்.

அவருக்கு, மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து அந்நாட்டு இராணுவ நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

அவர் இன்னும் பாகிஸ்தான் சிறையில்தான் உள்ளார்.

பாகிஸ்தானில் உள்ள லாகூரில் பத்திரிகையாளராக வேலை பார்த்து வரும் இளம் பெண், ஜீனத்ஷாஷாதி, (வயது 26) ஹமித் அன்சாரி சிறையில் அடைக்கப்பட்டாலும், அவர் குறித்த தகவல் இரகசியமாகவே வைக்கப்பட்டது. எனவே, மும்பையில் இருக்கும் அவரது தாய், மகனை மீட்க பல முயற்சிகள் மேற்கொண்டார். அவருக்கு ஜீனத் ஷாஷாதி உதவி செய்தார். பாகிஸ்தான் உச்ச நீதிமன்றத்தில் ஹமீத் அன்சாரி தாயார் சார்பில் மனுத் தாக்கல் செய்யவும் செய்தார். அப்போதே ஜீனத் ஷாஷாதிக்கு பல மிரட்டல்கள் வந்தன.

இந்நிலையில் 2015 ஆம் ஆண்டு லாகூரில் தனது இல்லத்தில் இருந்து அலுவலகத்திற்கு ஆட்டோவில் சென்று கொண்டிருந்த போது, லாகூரில் வைத்து அடையாளம் தெரியாத நபர்களால் கடத்திச்செல்லப்பட்டார்.

இதையடுத்து அவரை மீட்க பாகிஸ்தானில் செயற்படும் கடத்தப்பட்டவர்கள் குறித்த விசாரணை அமைப்பு கடும் முயற்சிகள் மேற்கொண்டு வந்தது. இந்த நிலையில் 2 ஆண்டுகளுக்கு பிறகு ஜீனத் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார். (8)

## அரசை கலைக்க முடிவா?

### ஸ்பெயினுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் காட்டாலோனியா தலைவர்

(பார்சிலோனா)

தனிநாடு விவகாரத்தில் காட்டாலோனியா பாராளுமன்றத்தை கலைத்து தேர்தல் நடத்த ஸ்பெயின் அரசு முடிவு செய்துள்ளதற்கு காட்டாலோனியா தலைவர் பூஜ்டிய மோண்ட் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.



ஸ்பெயினின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் மாகாணமான காட்டலோனியா தனி நாடக பிரிவது தொடர்பான வாக்கெடுப்பை கடந்த மாதம் முதலாம் திகதி நடத்தியது. இந்த வாக்கெடுப்பில் பங்கேற்ற 2.3 மில்லியன் மக்களில் 90வீதம் பேர் தனிநாடாக காட்டலோனியா பிரிவதற்கு ஆதரவு தெரிவித்தனர்.

இதனையடுத்து, காட்டலோனியா பாராளுமன்றத்தில் பேசிய கார்லஸ் பூஜ்டிய மோண்ட், தனிநாடு வாக்கெடுப்பு முடிவுகளை ஏற்றுக் கொள்வதாக அறிவித்தார். இருப்பினும் தனிநாடு குறித்த அறிவிப்பை அவர் வெளியிடவில்லை. ஸ்பெயின் அரசு உடன் பேசி முடிவெடுக்கப்படும் என அவர் கூறியிருந்தார்.

இது காட்டலோனியா மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது. இதன் பின்னர், தனிநாடாக பிரிவது குறித்து பரிசீலனை செய்து ஐந்து நாட்களுக்குள் முடிவை அறிவிக்குமாறு ஸ்பெயின் பிரதமர் மரியானோ ரஜாய் கூறியிருந்தார். பிரிந்து செல்வதென்றால் அந்த முடிவை பரிசீலிக்க மேலும் மூன்று நாட்கள் அவகாசம் வழங்கப்படும். அதன் பின்னரும் அவர்கள் உறுதியாக இருந்தால் 19 ஆம் திகதி காட்டலோனியா அரசு கலைக்கப்படும் என மரியானோ ரஜாய் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

ஸ்பெயின் அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 155இன் படி ஸ்பெயின் அரசுக்கு காட்டலோனியா பாராளுமன்றத்தை கலைக்கவும், ஸ்பெயினின் நேரடி ஆளுமையின் கீழ் காட்டலோனியாவை கொண்டு வர முடியும் என தெரி விக்கப்பட்டது.

கார்லஸ் பூஜ்டியமோண்ட் உறுதியான முடிவுகள் எதுவும் எடுக்காத சூழ்நிலையில், ஸ்பெயின் அரசின் அவசர அமைச்சரவைக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற் றது. காட்டாலோனியா அரசை சஸ்பெண்ட் செய்து விட்டு அங்கு மறுதேர்தல் நடத்த இக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகின.

எனினும், காட்டாலோனியா அரசை சஸ்பெண்ட் செய்யும் மசோதா செனட்

## நைஜரில் பெ... தீவிரவாதிகள்

## 13 பேர் பலி!

(நையாமே)

ஆபிரிக்க நாடான நைஜரில் தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 13 பொலிஸார் பலியானதாகவும், 5 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.


மேற்கு ஆபிரிக்க நாடான நைஜர் - மாலி எல்லையோரம் உள்ள அயோரோவ் என்ற கிராமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இத்தாக்குதல் நடைபெற்றுள்ளதாக நைஜர் அரசு தெரிவித்துள்ளது.

மாலி நாட்டில் இருந்து சிறிய ரக டிரக் மற்றும் மோட்டார் சைக்கிளில் வந்த தீவிரவாதிகள் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரிவிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ஆப்கானிஸ்தானில் மசூதிகள் தாக்குதல்



### 72 பேர் பலி!

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் இரு மசூதிகளை குறிவைத்து நடத்தப்பட்ட தற்கொலைப்படை தாக்குதலில் 72 பேர் பலியாகியுள்ளனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டின் தலைநகர் காபூலில் தாஷ்தி பார்ச் பகுதியில் அமைந்துள்ள ஷியா பிரிவினரின் இமாம் ஜமான் மசூதியில் கடந்த வெள்ளிக்கிழமை தொழுகையின் போது, பயங்கரவாதி ஒருவன் உடலில் வெடிகுண்டுகளை கட்டிச்சென்று வெடிக்க வைத்ததில் 30 பேர் உடல் சிதறி பலியானதாக முதல் கட்ட தகவல்கள் கூறின.

இத்தாக்குதலில் மொத்தம் 39 பேர் பலியானதாக நேற்று முன்தினம் உள்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் நஜிப் டேனிஷ் உறுதி செய்தார்.

இத்தாக்குதலுக்கு ஐ.எஸ். பயங்கரவாத இயக்கம் பொறுப்பேற்றது. ஆனால் அதை உறுதிப்படுத்துவதற்கான ஆதாரம் எதையும் அந்த இயக்கம் வெளியிடவில்லை.

ஆப்கானிஸ்தானில் தொடர்ந்து ஷியா முஸ்லிம் பிரிவினர் குறிவைத்து கொல்லப்படுவது அதிகரித்து வருகிறது. இவற்றில் பெரும்பாலான தாக்குதலுக்கு சன்னி பிரிவை சேர்ந்த ஐ.எஸ். இயக்கம்தான் பொறுப்பேற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று அங்குள்ள கோர் மாகாணத்தில் உள்ள மசூதியிலும் கடந்த வெள்ளிக்கிழமை தற்கொலைப் படை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த தாக்குதலில் 33 பேர் பலியாகினர்.

உள்ளூர் ஜாமியாத் அரசியல் கட்சித் தலைவர் ஒருவரை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அந்த கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரும், பால்க் மாகாண ஆளுநருமான அட்டா முகமது நூர் தெரிவித்தார். இத் தாக்குதலுக்கு எந்தவொரு பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. (8)

## தலாய் லாமாவை சந்திப்பது மிகப்பெரும் குற்றம் - சீனா



(பீஜிங்)

தலாய் லாமாவை சந்திப்பது மிகப்பெரும் குற்றம் என்று உலக தலைவர்களுக்கு சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

திபெத்தை தங்கள் நாட்டின் ஒரு மாநிலம் என்று கூறி கட்டுப்பாட்டில் வைத்துள்ள சீனா, அருணாசலப் பிரதேசத்தை தெற்கு திபெத் என்று கூறி உரிமை கொண்டாடி வருகிறது. திபெத்தை சீனா ஆக்கிரமித்ததை அடுத்து கடந்த 1959ஆம் ஆண்டு தலாய் லாமா இந்தியாவுக்கு வந்து விட்டார்.

இதையடுத்து, அவரை தங்களிடம் ஒப்படைக்குமாறு இந்தியா மீது அப்போது போர் தொடுத்து எல்லையில் சில பகுதிகளைக் கைப்பற்றியது. இப்போது வரை தலாய் லாமாவை தங்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்றே சீனா வலியுறுத்தி வருகிறது. அதேபோல், தலாய்லாமாவை உலக தலைவர்கள் சந்திப்பதற்கும் சீனா தொடர்ந்து எதிர்ப்பு குரல் கொடுத்து வருகிறது.

இந்நிலையில், சீன அமைச்சர் ஜாங் ஜிஜோங் கூறியதாவது.

"எந்த நாட்டின் தலைவர்களும் தலாய் லாமாவை சந்திப்பது என்பது எங்களின் பார்வையில், சீன மக்களின் உணர்வுகளுக்கு செய்யும் குற்றம்ஆகும்.தலாய்லாமாவை ஒரு மதத்தலைவர் என எந்த நாடு வாதிட்டாலும் அதனை சீனா ஏற்காது. தலாய் லாமா வரலாற்றால் புறக்கணிக்கப்பட்டவர். மதத்தை மேல் அங்கியாக அணிந்த அரசியல் பிரமுகர். 1959இல் வேறொரு நாட்டிற்கு தப்பிச்சென்ற தலாய்லாமா, தாய்நாட்டிற்கு துரோகம் செய்தவர்" இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தலாய் லாமாவை உலகத் தலைவர்கள் சந்திப்பதற்கு தொடர்ந்து சீனா எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. திபெத்தை சீன நாட்டின் ஒரு அங்கமாக அங்கீகரிக்க வேண்டும் என்று உலக நாடுகளிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. (8)

## வடகொரியாவில் கின்னஸ் சாதனை


(சியோல்)

வடகொரியாவில் 1069 ரோபோக்கள் தொடர்ந்து ஒலிபரப்பான பாடல்களுக்கு ஒரே மாதிரி நடனம் ஆடி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. இதன் மூலம் வடகொரியா கின்னஸ் சாதனை படைத்துள்ளது.

உலகின் எதிர்காலம் 'ரோபோ'க்கள் கைகளில் தான் உள்ளது என அறிவியலாளர்கள் தெரிவித்து வருகின்றனர். இந்த 'ரோபோ' க்கள் 'செயற்கை அறிவு' தொழில்நுட்பத்தில் உருவாக்கப்படுகின்றன.

இத் தொழில்நுட்பத்தை வைத்து பல வித்தியாசமான செயல்களை செய்ய முடியும். இந்த நிலையில் வடகொரியாவில் மேற்கண்ட தொழில்நுட்பம் மூலம் உருவாக்கப்பட்ட 1069 'ரோபோ'க்கள் ஒரே நேரத்தில் நடனமாடின.

தொடர்ந்து ஒலிபரப்பான பாடல்களுக்கு ஒரே மாதிரி நடனம் ஆடி இந்த 'ரோபோ'க்கள் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.



இவை தங்களுக்குள் தகவல்களை பரிமாறிக் கொண்டு புதுபுது ஸ்டைலில் நடனம் ஆடின.

எந்திரன்' சினிமா படத்தில் நிறைய சிட்டி 'ரோபோ'க்கள் ஒன்றாக சேர்ந்தும், பிரிந்தும் பிரமிப்பை ஏற்படுத்தியது. அது தற்போது உண்மையாகவே நடந்துள்ளது.

இதன் மூலம் வடகொரியா கின்னஸ் சாதனை படைத்துள்ளது. இச்சாதனையை ஒருங்கிணைந்த அறிவியலாளர் இவான் முஸ்க் நிகழ்த்தியுள்ளார். (8)

சபையில் நிறை வேற வேண்டும் என்பதால், அந்த சபைக்கு ஸ்பெயின் அ[illegible] கோரிக்கை விடுத்தது.

இந்நிலையில், ஸ்பெயின் பிரதமர் ரஜாயின் முடிவுக்கு கார்லஸ் பூஜ்டிய மோண்ட் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். காட்டாலோனியா என்றும் ஸ்பெயினின் நேரடி நிர்வாகத்தை ஏற்றுக் கொள்ளாது என்று அவர் கூறினார்.

மேலும், ரஜாயின் இந்த முடிவு சர்வாதிகாரத்திற்கு ஒப்பானது என்றும் அவர் விமர்சித்துள்ளார். (8)

## ...ாலிஸார் மீது துப்பாக்கிச்சூடு

கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் 15 பொலிஸார் பலியானதாகவும், 5 பேர் காயமடைந்துள்ளதாகவும் அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதல் நடைபெற்ற கிராமத்திலிருந்து சில கிலோ மீற்றர் தொலைவில் தான் கடந்த 4 ஆம் திகதி அமெரிக்க வீரர்கள் மீது தீவிரவாதிகள் குண்டு வீச்சு தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலுக்கு இதுவரை எந்த தீவிரவாத இயக்கமும் பொறுப்பேற்கவில்லை.

இருப்பினும், ஐ.எஸ் ஆதரவு இயக்கங்களின் சதிவேலையாக இருக்கலாம் என பாதுகாப்பு துறை அமைச்சர் கூறியுள்ளார். (8)

## உலகின் இளம் தலைவராகிறார் 31 வயது செபாஸ்டியன் குர்ஸ்

(சிட்னி)

அவுஸ்திரேலிய நாட்டின் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற 31 வயதான செபாஸ்டியன் குர்ஸ், உலகின் இளம் தலைவர் என்ற பெருமையைப் பெறுகிறார்.

இவர் சுதந்திரக் கட்சியுடன் இணைந்து ஆட்சிக்கான கூட்டணிப் பேச்சுவார்த்தையை நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் குர்ஸின் மக்கள் கட்சி 31.5 சதவீத இடங்களைக் கைப்பற்றி முதலிடத்தைப் பெற்றது. அடுத்ததாக சமூக ஜனநாயகக் கட்சி 26.9 சதவீத இடங்களைப் பிடித்துள்ளது. ஐரோப்பிய யூனியனைக் கடுமையாக விமர்சித்து வரும் சுதந்திரக் கட்சி 26 சதவீத இடங்களைப் பெற்றது.

தற்போது செபாஸ்டியன் குர்ஸ் சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கூட்டணிப் பேச்சுவார்த்தை நடத்தி, அரசை அமைக்கவுள்ளார். இதுகுறித்துப் பேசிய செபாஸ்டியன், நான் புதிய அரசியல் கலாசாரத்தை விரும்புகிறேன்.

அதன் மூலம் தைரியமும் உறுதியும் மிக்க அவுஸ்திரேலிய அரசாங்கத்தை அமைக்க ஆசைப்படுகிறேன் என்றார். (8)

ஐ.எஸ்ஸிக்கு எதிரான போரில் திருப்புமுனை

## முக்கிய பெற்றோல் வயலை அரச படைகள் கைப்பற்றின



(டமாஸ்கஸ்)

சிரியா நாட்டில் ஐ.எஸ். தீவிரவாதிகள் பிடியில் சிக்கி இருந்த மிகப்பெரிய பெற்றோல் வயலை அமரிக்க படைகள் துணையுடன்சிரிய இராணுவம் கைப்பற்றியது.

சிரியா நாட்டின் கிழக்கே ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடியில் இருக்கும் சில பகுதிகளை கைப்பற்ற அந் நாட்டின் அரசுப் படைகள் உச்சகட்ட தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன.

அவர்களுக்கு துணையாக அமெரிக்கா மற்றும் ரஷ்யா நாட்டின் போர் விமானங்களும் வான் வழி தாக்குதலை நடத்து கின்றது. இந்நிலையில், யூப் ரட்டஸ் ஆற்றுப்பகுதியில் டெய்ர்-அல்-ஸோர் மாகா ணத்தில் உள்ள முக்கிய நகரமான அல்-மயாடின் நகரை ஐ.எஸ். தீவிரவா திகள் பிடியில் இருந்து அர சுப் படைகள் கடந்த மாதம் மீட்டன. இங்கிருந்து சுமார் 10 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள அல்-ஓமர் பெற்றோல் வயலை அமரிக்க படைகள் துணையுடன் சிரிய இராணுவம் கைப்பற்றியுள்ளது.

சிரியாவின் மிகப்பெரிய அல்-ஓமர் பெற்றோல் வயலை அரசுப் படைகள் கைப்பற்றியுள்ளது ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான உச்ச கட்டப் போரில் [illegible] முனை யாக [illegible]. (8)

## குர்து படையினர் மீது ஈராக் இராணுவம் தாக்குதல்

(அல்டன் குப்ரி)

ஈராக் இராணுவம், குர்து படைகள் இடையே நேற்று முன்தினம் கடும் சண்டை நடைபெற்றது. இதனால் அந்த நாட்டில் மீண்டும் உள் நாட்டுப் போர் வெடித்துள்ளதாக அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

ஈராக்கின் வடபகுதியில் குர்து இன மக்கள் பெரும் பான்மையாக வசிக்கின்றனர். இந்தப் பகுதி ஈராக் ஆட்சியின் கீழ் தன்னாட்சி அதிகாரத்துடன் செயற்படுகிறது. இந்நிலையில் தனிநாடு கோரி குர்து இன மக்கள் பல்வேறு போரா[illegible] நடத்தி வருகின்றனர். கடந்த ஒக்டோபர் 25 ஆம் திகதி நடந்த பொது வாக்கெடுப்பில் பெரும்பான்மை குர்து இன மக்கள் தனிநாட்டுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இதைத் தொடர்ந்து குர்து பகுதிகளில் ஈராக் இராணுவம் குவிக்கப்பட்டு வருகிறது. குர்து இன மக்களுக்கு தனி யாக படைப்பிரிவு உள்ளது. அந்த படையின் வீரர்கள் குர்து நகரங்களை பாதுகாத்து வருகின்றனர்.

இந்தப் பின்னணியில் குர்துகளின் அல்டன் குப்ரி நகரை நோக்கி ஈராக் இராணுவம் நேற்று முன்தினம் முன்னேறியது. அவர்களை குர்து படை வீரர்கள் தடுத்து நிறுத்தினர். இருதரப்புக்கும் இடையே பல மணி நேரம் கடும் சண்டை நடைபெற்றது. இதில் ஈராக் இராணுவத்தின் 10 கவச வாகனங்களும் ஒரு டாங்கியும் அழிக்கப்பட்டதாக குர்து படை தெரிவித்துள்ளது. இந்த சண்டையில் இருதரப்பிலும் உயி ரிழப்புகள் ஏற்பட்டிருப்பதாக தெரிகிறது.

ஈராக்கின் பெரும் பகுதியை ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றியதால் அங்கு கடந்த சில ஆண்டுகளாக கடுமையான உள்நாட்டுப் போர் நடைபெற்றது. அமெரிக்க கூட்டுப் படையின் உதவியுடன் ஐ.எஸ். தீவிரவாதிகளின் வசம் இருந்த நகரங்களை ஈராக் இராணுவம் அண்மையில் முழுமையாக மீட்டது. (8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகாநாயக்கர்களிடையே பிரிவினையை ஏற்படுத்த சதி!

## அரசு மீது டளஸ் குற்றச்சாட்டு



(கொழும்பு)

**அரசாங்கம் மகா சங்கத்தினரிடையே பேதங்களை உருவாக்க திட்டமிட்ட அடிப்படையில் செயற்படுவதாக முன்னாள் அமைச்சர் டளஸ் அழகப்பெரும குற்றம் சாட்டியுள்ளார்.**

அம்பாந்தோட்ட துறைமுகத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்த போது பொலிஸாரினால் கைது செய்யப்பட்டவர்களின் வீடுகளுக்கு நேற்று சென்று சுகதுக்கம் விசாரித்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இன்றைய அரசாங்கத்தில் மும்மூர்த்திகள் உள்ளனர். இவர்களே அரசாங்கத்தினால் மூன்று பீடங்களின் மகாநாயக்கர்களாக கருதப்படுகின்றனர். சமன் ரத்னப்பிரிய, காமினி வியங்கொட மற்றும் நெவில் பிரணாந்து என்போரே அவர்களாவர் எனவும் டளஸ் எம்.பி. மேலும் தெரிவித்தார். (இ-7)

# இந்தியா வழங்கிய ரோந்துக் கப்பல் இலங். கடலோரக் காவல் படையில்







(கொழும்பு)

இலங்கைக்கு இந்தியா அன்பளிப்பாக வழங்கிய ஆழ்கடல் கண்காணிப்புக் கப்பல் நேற்று முன்தினம் இலங்கை கடலோரக் காவல் படையில் அதிகாரபூர்வமாக இணைத்துக் கொள்ளப்பட்டது.

இந்திய கடலோரக் காவல் படையின் பயன்பாட்டில் இருந்த, "ஐசிஜி வருணே" என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பல், கடந்த செப்டெம்பர் மாதம் இலங்கை கடலோரக் காவல்படையின் பயன்பாட்டுக்காக இந்தியாவினால் வழங்கப்பட்டது.

இந்தக் கப்பல், நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தில், இலங்கை கடலோரக் காவல் படையில் அதிகாரபூர்வமாக இணைத்துக் கொள்ளப்பட்டது.

எஸ்எல்சிஜிஎஸ் சுரக்சா என்று பெயரிடப்பட்டுள்ள இந்த ஆழ்கடல் ரோந்துக் கப்பலை, இலங்கை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன இயக்கி வைத்தார்.

கொழும்பு துறைமுகத்தில் நேற்று முன்தினம் மாலை நடந்த இந்த நிகழ்வில் இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து, பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்ன, இலங்கையின் கடற்படை மற்றும் விமானப் படைத் தளபதிகள் மற்றும் முப்படை அதிகாரிகள், அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

ரோந்துக் கப்பலின் கட்டளை அதிகாரியாக கப்டன் நெவில் உபயசிறி நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் கப்பல் இலங்கை கடல்பரப்பில், கண்காணிப்பு, ரோந்துப் பணிகளிலும், மனிதாபிமான உதவி மற்றும் அனர்த்த மீட்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தப்படவுள்ளது.

1,160 தொன் எடை கொண்ட இந்தக் கப்பல், 74.10 மீற்றர் நீளமுடையது. மணிக்கு 22 கடல் மைல் வேகத்தில் பயணம் செய்யக் கூடிய இந்தக் கப்பலில், 14 அதிகாரிகள் மற்றும் 86 மாலுமிகள் பணியாற்றுவர். (இ-7)

# உண்மையை கண்டறியும் செயல்முறைகள் மெதுவாகவே முன்னெடுக்கப்படுகின்றன

## ஐ.நா.சிறப்பு அறிக்கையாளர் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

இலங்கையில் உண்மையைக் கண்டறியும் செயல்முறைகள் மிகவும் மெதுவாகவே முன்னெடுக்கப்படுவதாக. உண்மையை ஊக்குவித்தல், நீதி, இழப்பீடு மற்றும் மீள நிகழாமையை உத்தர வாதப்படுத்துவதற்கான, ஐ.நா சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிரெய்ப் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைச்சர் மனோகணேசனைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே திட்ட மிடப்பட்ட அட்டவணைக்குப் அமைவாகவே இந்த செயல் முறைகள் இருக்கின்றன என்றும், மிக மெதுவாகவே இந்த செயல்முறைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் இந்தச் சந்திப்பின் போது ஐ.நா சிறப்பு அறிக்கையாளர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஐ.நா.சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிரெய்ப்பின் இரண்டு வாரகால இலங்கைப் பயணம் இன்றுடன் நிறைவடையவுள்ளது.

அவர் இலங்கையிலிருந்து புறப்பட முன்னர், கொழும்பில் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### எதிராளி பேசட்டும்

நான் என்ன சொல்றேன்னா என்கிறார் ஒருவர். நீ ஒண்ணும் சொல்ல வேணாம் என்கிறார் மற்றவர்.

சும்மா நாமே பேசிக் கொண்டிராமல் எதிராளியையும் கொஞ்சமாவது பேசவிட வேண்டும்.

எதிராளியைப் பேச விடுவதில் பல நன்மைகள் உண்டு. நிறையச் செய்திகளைத் தெரிந்து கொள்ளலாம். பல வாழ்க்கைப் பாடங்களைப் புரிந்து கொள்ளலாம். மனங்களைப் படிக்கலாம். பல சந்தர்ப்பங்களில் நாம் அவரசப்பட்டுப் பேசிப் பல நன்மைகளையும் வாய்ப்புக்களையும் இழந்திருக்கின்றோம்.

ஒருவர் கடன் வசூல் செய்யப் போனார். கடனாளி மறுநாள் அந்தப் பணத்தைத் தருவதாக இருந்தார். கடன் கொடுத்தவரோ அவரைப் பேசவிடாமல் செய்து காச்மூச் என்று கத்திக் காரியத்தைக் கெடுத்துவிட்டார். கடனாளி மறுநாள் மட்டுமல்ல என்றுமே தரப் போவதில்லை என்கிற முடிவுக்கு வந்து விட்டார்.

ஒருவர் ஒரு பொருளுக்குநல்ல விலை தருவதாக இருந்தார். விற்பவர் அவசரப்பட்டு உங்களால் நிறையக் கொடுக்க முடியாது என்று நினைக்கிறேன் என்று கூறி மிகச் சாதாரண தொகையைச் சொன்னார். பொருளை வாங்க இருந்தவருக்கு இனிய அதிர்ச்சி. காரணம் அவருக்குப் பேசவே வாய்ப்பு அளிக்கப்படவில்லை. அது இவருக்கு நல்லதாய் போயிற்று.

பெண்ணின் தந்தை பையனின் தந்தையுடன் பேசினார். என்ன எதிர்பார்க்கிறீங்க? என்று கேட்டு நாடி பிடித்துப் பார்த்து அதன் பிறகு என்ன செய்யப் போகிறேன் என்பதைச் சொல்லியிருக்கலாம். அதைச் செய்யாமல் அவசரப்பட்டு நான் இதைப் போடுகிறேன் , அதைச் செய்கிறேன் என்று அள்ளி விட்டு விட்டார்.

பையனின் தந்தை திருமணத்தை ரொம்பப் பெரிய மண்டபத்தில் நடத்தணும், நல்லா சாப்பாடு போனணும், நல்ல மியூசிக் பார்ட்டி வைக்கணும் வேறு எதையும் நாங்க எதிர் பார்க்கலை. என்று தான் சொல்வதாக இருந்தார். சம்பந்தி திகைத்துப் போய் விட்டார். எதிராளியை முதலில் பேசவிடாததால் வந்த பயங்கரக் கோளாறு இது.

ஒரு விவகாரம் என்றாலும் சரி ஒரு சமரசப் பேச்சு என்றாலும் சரி சம்பந்தப்பட்டவர்களை நன்கு பேச அனுமதிக்க வேண்டும். அவர்களது எல்லாக் கண்ணோட்டங்களையும் தெரிந்து கொள்வ வேண்டும். அப்போது தான் முடிவுக்கு வருவதற்கும் விவகாரத்தைத் தீர்த்து வைப்பதற்கும் சமரசம் செய்து வைப்பதற்கும் சௌகரியமாக இருக்கும்.

நாமே சுவ ஒரு காரியத்தைச் செய்து விட்டு நான் செஞ்சது சரிதானே? என்று கேட்காமல் நான் செய்த செயலைப் பற்றி உங்களுடைய மனம் திறந்த அபிப்பிராயம் என்ன? என்று கேட்க வேண்டும். நான் செஞ்சது சரிதானே ! என்று நாமே விடையைத் திணித்தால் எதிராளிகள் வாயடைத்துப் போவார்கள். எதிராளியைப் பேசவிடுவது முக்கியம். அப்போது தான் சரியான அபிப்பிராயம் கிடைக்கும்.

எதிராளி என்ன நினைக்கிறார் என்றே தெரிந்து கொள்ளாமல் அனுமானங்களின் அடிப்படையில் நாம் எடுக்கும் முடிவுகள் ஆளைக் கவிழ்த்துவிடும். எதிராளியைப் பேசவே விடாமல் நாமாகச் செயற்படுவது என்பது நோயாளியைப் பார்த்த மாத்திரத்தில் மாத்திரையை நீட்டும் ஒரு டாக்டரின் செயலைவிட மோசமான ஒன்று.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.ஆர், பிரேமதாஸ நடத்தியதை விட அடக்குமுறை ஆட்சி நடக்கிறது

## மகிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு

(கொழும்பு)

**ஜே.ஆர். மற்றும் பிரேமதாஸ நடத்திய ஆட்சியை விடவும் மோசமான ஒரு அடக்குமுறை ஆட்சியையே இந்த நல்லாட்சி அரசாங்கம் நடத்துகின்றது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம்சாட்டியுள்ளார்.**


ஜே.ஆர்.ஜயவர்த்தனவோ, பிரேமதாஸவோ, பாராளுமன்ற உறுப்பினர்களை சிறையில் அடைத்ததில்லை. நான் எத்தனையோ ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள், மனிதச் சங்கிலிப் போராட்டங்கள் நடத்தியிருக்கிறேன். அப்போதெல்லாம் அவற்றை மேற்கொள்வதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள் எனவும் மகிந்த தெரிவித்தார்.



அம்பாந்தோட்டை ஆர்ப்பாட்டத்தின்போது கைது செய்யப்பட்டவர்களை பார்வையிடுவதற்கு நேற்று முன்தினம் தங்காலை சிறைக்குச் சென்ற வேளை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

வாக்குரிமையைப் பறித்துக் கொண்டு, இதுபோன்ற அடிப்படை உரிமைகளைக் கூடப் பறித்துக்கொண்டு கல்வீசுவது யார் என்பது இப்போது தெளிவாகத் தெரிகிறது எனவும் மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (இ-7)

# பிணைமுறி சாட்சிகள் பட்டியலில் பிரதமரும்



(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி விவகாரத்தில் சாட்சிகளாக இருபது பேரின் பெயர்கள் அடங்கிய பட்டியலை, ஜனாதிபதி ஆணைக் குழுவில் சட்டமா அதிபர் அளித்துள்ளார். அந்தப் பட்டியலில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பெயரும் உள்ளடங்கப்பட்டுள்ளது.

பிணைமுறி முறைகேடுகள் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை நடத்தி வருகிறது. இதுவரை பொதுமக்களிடம் சாட்சியங்கள் பெறப்பட்டுவிட்டன.

எனினும், ஆணைக் குழுவின் முன்வைக்கப்பட்ட சில கூற்றுக்கள் மற்றும் சர்ச்சைகளையடுத்தே இருபது பேரின் பெயர்கள் அடங்கிய பட்டியலை சட்டமா அதிபர் சமர்ப்பித்துள்ளார்.

முன்னதாக, சில கேள்விகள் அடங்கிய கேள்விப் பட்டியல் ஒன்றை ஜனாதிபதி ஆணைக்குழு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்திருந்தது. அதற்கான பதில்கள் கடந்த 20ஆம் திகதி ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டன.

இந்நிலையில், பிணைமுறி குறித்து ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் கால எல்லை எதிர்வரும் 27ஆம் திகதியுடன் முடிவடைகிறது. இதையடுத்து, ஆணைக்குழுவின் ஆயுளை நீட்டிக்க அனுமதி வழங்குமாறு ஆணைக்குழு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இக்கோரிக்கை தொடர்பில் நாளை ஜனாதிபதியுடன் பரிசீலிக்கப்பட்ட பின் முடிவு அறிவிக்கப்படும் என ஜனாதிபதி செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ தெரிவித்தார். ஏற்கனவே இரண்டு முறை ஆணைக்குழுவின் காலம் நீட்டிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு பாதிப்பு ஏற்படவிடமாட்டேன்

## ஜனாதிபதி மைத்திரி உறுதி

(கொழும்பு)

நாட்டின் ஒருமைப்பாட்டிற்கோ அல்லது பௌத்த மதத்துக்கோ பாதிப்பு ஏற்படும் வகையில் எந்தவொரு மாற்றத்தையும் அரசியல் யாப்பில் கொண்டுவர இடமளிக்கமாட்டேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத்தெரிவிக்கையில்ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசியல் நோக்கங்களுக்காக உத்தேச அரசியல் யாப்பு குறித்து பொய்யான பிரசாரங்களை அடிப்படைவாதிகள் முன்னெடுத்து வருவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டுக்காக ஒன்றிணையுமாறு அனைத்து படித்தவர்கள் மற்றும் புத்திஜீவிகளிடமும் வேண்டுகோள் விடுக்கின்றேன் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார். காணப்படுகின்ற பிரச்சினைகளை



தீர்த்துக் கொண்டு நாடு எதிர்நோக்கியுள்ள சவால்களை வெற்றிகொள்வதற்காக தமது அறிவையும் அனுபவத்தையும் பயன்படுத்திக் கொள்ள முடியும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ-7)

# சைட்டம் கல்லூரி குறித்து இறுதிப் பேச்சு இன்று

(கொழும்பு)

சைட்டம் கல்லூரி தொடர்பாக அரசாங்கத்தின் இறுதித் தீர்வு குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக தனியார் மருத்துவக்கல்லூரியுடன் தொடர்புடைய சகல தரப்புகளும் இன்று 23 ஆம் திகதி திங்கட்கிழமை ஜனாதிபதியால் ஜனாதிபதி அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டுள்ளதாகவும் அங்கு சைட்டம் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் தெரியவருகிறது.

சைட்டம் நிறுவனம் தொடர்பாக அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தலைமையில் நியமிக்கப்பட்ட குழு இப்பேச்சுவார்த்தையின்போது ஜனாதிபதியிடம் தமது கருத்துகளை தெரிவிக்கவுள்ளதுடன், அங்கு ஜனாதிபதியின் இணக்கப்பாட்டுடன் இறுதி முடிவும் எடுக்கப்படவுள்ளது.

சைட்டம் நிறுவனத்தின் முகாமைத்துவம் தொடர்பாக பிரச்சினைகள் இருப்பதால் அந்த நிறுவனத்தின் தற்போதைய முகாமைத்துவத்திடமிருந்து பொறுப்பேற்று அரச சார்பின்றி இலாபநோக்கற்ற பங்குதாரர்களைக் கொண்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட உயர்கல்வி நிறுவனமொன்றிடம் ஒன்றிணைக்க சிபாரிசு செய்யவுள்ளதாக அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கும் மேலதிகமாக இந்த கல்வி நிறுவனத்தில் தரம் பேணப்படும்.

ஜனாதிபதி தலைமையிலான இப்பேச்சுவார்த்தையில் அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தலைமையிலான குழுவின் உறுப்பினர்களான சட்டமா அதிபர், உயர்கல்வி அமைச்சின் செயலாளர், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர், சுகாதார அமைச்சின் செயலாளர் ஆகியோர் கலந்து கொள்வர்.

மற்றும் சுகாதார அமைச்சர் மற்றும் உயர்கல்வி அமைச்சர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

# மக்களின் பிரச்சினையைத் தீர்க்க புதிய அரசியலமைப்பு வேண்டுமாம்

## கோத்தபாய ராஜபக்ஷ கூறுகிறார்


(கொழும்பு)

சாதாரண மக்களின்தேவை ஒன்றாகவும் அரசியல்வாதிகளின் தேவை வேறொன்றாகவும் இருப்பதுவே பிரச்சினைகள் தீர்க்கப்படாமைக்கான காரணம் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முடிக்க முடியாது என கூறப்பட்ட யுத்தத்தை நாம் முடிவுக்கு கொண்டுவந்தோம். இன்று பொது மக்களின் பிரச்சினைவேறு. அரசியல்வாதிகளின் பிரச்சினை வேறாகவுள்ளது.

பொது மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு புதிய அரசியல் அமைப்பொன்று உருவாக வேண்டியுள்ளது எனவும் தெரிவித்தார்.

கம்பஹா பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில், அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தபாய உடன் கைது!

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ உடனடியாக கைது செய்யப் படவுள்ளார் என்று கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்து விளக்கமறியலில் வைப்பது தொடர்பாக, கடந்த வாரம் அரசாங்கத்துக்கும், சட்ட மற்றும் பாதுகாப்புத்துறை அதிகாரிகளுக்கும், இடையிலான கலந்துரையாடல் இடம் பெற்றுள்ளதாகவும் அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்கா சென்றிருந்த கோத்தபாய ராஜபக்ஷ கடந்த வாரம் நாடு திரும்பியிருந்தார். அப்போது, கட்டுநாயக்க விமான நிலையத்தில், அவரைக் கைது செய்யத் திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும் சில அதிகாரிகளின் ஆலோசனையின் பேரில் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

சர்ச்சைக்குரிய மிக் போர் விமானக்கொள்வனவுமோசடி தொடர்பான வழக்கிலேயே கோத்தபாய ராஜபக்ஷ கைது செய்யப்படவுள்ளார்.

அதேவேளை, தம்மை விரைவில் கைது செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நகர்வுகள் குறித்து கோத்தபாய ராஜபக்ஷவும் அறிந்திருப்பதாக, அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-7)

# இராதாகிருஷ்ணன் லண்டன் பயணம்

(கொழும்பு)

கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் லண்டனிற்கான 5 நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை இன்று மேற்கொள்ளவுள்ளார்.

லண்டனில் நடைபெறவுள்ள உலக தமிழர்கள் ஒன்றுகூடலில் கலந்து கொள்வதற்காகவே குறித்த விஜயத்தை அவர் மேற்கொள்ளவுள்ளார்.

ஒன்றுகூடல் ஏற்பாட்டாளர்களின் அழைப்பிற்கு அமைய கல்வி இராஜாங்க அமைச்சர் லண்டன் செல்லவுள்ளதுடன், இதன்போது பல்வேறுபட்ட தமிழ் அமைப்புகளையும் இராஜாங்க அமைச்சர் சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின் போது லண்டனில் தொடர்ந்தும் 5 நாட்கள் தங்கி இருக்கும் கல்வி இராஜாங்க அமைச்சர் அங்கு பல்வேறு நிகழ்வுகளிலும் பங்கேற்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# இலங்கையால் விடுவிக்கப்பட்ட ஆறு படகுகள் தமிழகத்தில்



இலங்கை அரசால் விடுவிக்கப்பட்ட ஆறு விசைப் படகுகள் காரைக்கால் மீன்பிடி துறைமுகத்துக்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை கொண்டு செல்லப்பட்டுள்ளன.

காரைக்கால் பகுதியைச் சேர்ந்த கோட்டுச்சேரி மேடு சிவராமனுக்கு சொந்தமான ஒரு விசைப்படகு, கிளிஞ்சல் மேடு செல்வமணிக்கு சொந்தமான 2, மதியழகன் 1, காரைக்கால்மேடு தங்க துரை, குணசேகரன் ஆகியோரின் தலா 1 விசைப்படகுகள் என மொத்தம் 6 விசைப்படகுகள் கடந்த 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டில் எல்லை தாண்டியதாகக் கூறி, இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டன.

இவற்றை மீட்டுத்தருமாறு மீனவர்கள் இந்திய மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி வந்தனர்.

இந்நிலையில், இலங்கை வசமிருந்த 42 படகுகள் அண்மையில் விடுவிக்கப்பட்டன.

இதில், காரைக்கால் பகுதியைச் சேர்ந்த படகுகளும் அடங்கும்.

இவற்றை மீட்டுவருவதற்காக காரைக்காலில் இருந்து ஆறு படகுகளில் 36 மீனவர்கள் இலங்கை வந்தனர். அவர்கள், இலங்கை கடற்படையினரின் வழிகாட்டுதலில் விடுவிக்கப்பட்ட 6 படகுகளுடன் கடந்த வெள்ளிக்கிழமை சர்வதேச கடல் பகுதிக்கு வந்து சேர்ந்தனர்.

பின்னர், இந்திய கடலோரக் காவற்படையினரின் உதவியுடன் படகுகளை காரைக்கால் மீன்பிடித் துறைமுகத்துக்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை 3 மணியளவில் கொண்டு சென்றனர்.

காரைக்கால் மீன்வளத்துறை துணை இயக்குநர் நடேசப்பிள்ளை உள்ளிட்ட அதிகாரிகள் மீனவர்களை வரவேற்றனர். இது குறித்து படகு உரிமையாளர்கள் கூறுகையில்.

சுமார் 3 ஆண்டுகளாகப் பராமரிப்பின்றி இலங்கையில் நிறுத்தப்பட்டிருந்ததால் படகை இயக்க முடியவில்லை.

குறிப்பாக என்ஜின் சேதமாகியிருக்கிறது. வலை உள்ளிட்ட மீன்பிடி உபகரணங்கள் எதுவும் படகில் இல்லை. 50 இலட்சம் இந்திய ரூபாய் மதிப்புள்ள படகு தற்போது 10 இலட்சம் இந்திய ரூபாய்க்குக்கூட விலை போகாத நிலையிலுள்ளது.

மீண்டும் படகை கடலுக்கு மீன்பிடிக்க கொண்டு செல்ல வேண்டும் என்றால் பல இலட்சம் ரூபாய் செலவு செய்ய வேண்டும். புதுச்சேரி அரசு பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-7)

# மகா சங்கத்தினரைப் பிரித்தாவது ஆட்சிக்கு வர மகிந்த குழு முயற்சி

## அமைச்சர் சஜித் கடும் விசனம்



(கொழும்பு)

மகா சங்கத்தினருக்கிடையில் பேதங்களை உருவாக்கியாவது ஆட்சிக்கு வர வேண்டும் என கூட்டு எதிர்க் கட்சி முயற்சிக்கின்றது என அமைச்சர் சஜித் பிரேமதாச குற்றம்சாட்டியுள்ளார்.

திஸ்ஸமஹாராம, நெதிகம்வில்லில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

மக்களின் வாழும் உரிமையைப் பெற்றுக் கொடுப்பதற்கு இந்த நல்லாட்சி அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கம் அம்பாந்தோட்டையில் தோல்வியடைந்த வேலைத்திட்டங்களை முன்னெடுத்தது அல்லாமல், அப்பிரதேசங்களிலுள்ள மக்களின் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு வழங்க முன்வரவில்லையெனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)

# அரசியலமைப்பிற்கு அனைத்து மக்களின் ஆதரவும் அவசியம்

## அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டின் புதிய அரசியலமைப்பை வரையும் போது அனைத்து இன மக்களின் ஆதரவும் அவசியம் என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதற்கு முன்னர் வரையப்பட்ட இரண்டு அரசியல் யாப்புக்களுக்கும் அனைத்து இன மக்களின் ஆதரவை பெறுவதற்கு முன்னைய தலைவர்கள் தவறியிருந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகளாவிய ரீதியிலுள்ள நாடுகளில் பல்வேறு இன பிரஜைகளுக்கு இடையிலான பிரச்சினைக்கு அந்தந்த நாடுகளின் தேசிய அரசியலமைப்பு மூலம் தீர்வு வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் புதிய அரசியலமைப்பை வரைவதற்கோ தற்போதுள்ள அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொள்வதற்கோ பௌத்தர்களின் மதிப்பை பெற்ற அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இழுபடும் சீனாவின் நிதியுதவி

(கொழும்பு)

இலங்கைக்கு வழங்கப்படவேண்டியகடன்தொகையை சீன வங்கியொன்று குறித்த நேரத்தில் செலுத்தாமல் வைத்திருப்பதால், மீரிகமையில் அமைக்கப்பட்டுவரும் அதிவேக பாதையின் வேலைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

மீரிகமையில் இருந்து குருநாகலை வரை விஸ்தரிக்கப்படவுள்ள அதிவேக நெடுஞ்சாலையின் முதற்கட்டப்பணிகள்கடந்தஜூன்மாதம் ஆரம்பிக்கப்பட்டன. இத் திட்டத்துக்கு சீனாவின் எக்ஸிம் வங்கி கடனுதவி அளிப்பதாகத் தெரிவித்திருந்தது.

எனினும், குறித்த நேரத்தில் அந்தக் கடனுதவி வழங்கப்படாமல் இழுபடுவதால் வீதி நிர்மாணப் பணிகள் முடங்கியுள்ளன.

கடனுதவி வழங்கப்பட வேண்டிய காலம் கடந்து சுமார் இரண்டு மாதங்கள் ஆகிவிட்ட நிலையில், இந்த விவகாரத்தை கொழும்புக்கான சீன உயர்தானிகர் மூலம் சரிசெய்வதற்கு அரசு முயற்சி செய்யவுள்ளது.

மேலும், குறித்த நேரத்தில் நிதி கிடைக்காமல் விட்டால், உரிய நேரத்தில் நிர்மாணப் பணிகளை முடிக்க முடியாது என்பதுடன், காலம் செல்லச் செல்ல பொருட்களின் விலையுயரும் சாத்தியக் கூறுகள் இருப்பதால் திட்டமிட்ட பெறுமதியை விட அதிக நிதியைச் செலவிட வேண்டிய சூழல் ஏற்படும் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# இந்தியா, பாகிஸ்தானுக்கு இலங்கை மத்தியஸ்தம்

(கொழும்பு)

இந்தியா-பாகிஸ்தான் இடையேயான முறுகல்நிலை அதிகரித்து வரும் நிலையில், இரு நாடுகளுக்குமான மத்தியஸ்தம் வகிக்கவும், இதன் மூலம் விளிம்பு நிலையில் இருக்கும் 'சார்க்' கட்டமைப்பின் சரிவைத் தடுத்து நிறுத்தவும்இலங்கை தயார்என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்துள்ளார்.

பாகிஸ்தானிய வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் தேமினா ஜஞ்ஜுவா வுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

2016ஆம் ஆண்டு பாகிஸ்தானில் நடைபெறவிருந்த சார்க் நாடுகளின் 19ஆவது அமர்வு இரத்துச் செய்யப்பட்டது. இந்தியா-பாகிஸ்தான் ஆகிய நாடுகள் பரஸ்பரம் குற்றச்சாட்டுக்களைப் பரிமாறிக் கொண்டதையடுத்து, சார்க் நாடுகள் அமைப்பில் பிளவும் உண்டானது.

இதையடுத்து, சார்க் அமைப்பு கலைந்துவிடலாம் என்ற அச்ச நிலை தோன்றியது.

இந்நிலையில், இந்தியா-பாகிஸ்தான் ஆகிய இரண்டு நாடுகளுடனும்பேச்சுவார்த்தை நடத்தி, சார்க் அமைப்பை மீண்டும் வலுப்பெறச் செய்வதற்கு இலங்கை நேர்மையான மத்தியஸ்தம் வகிக்கத் தயார் என்று பாகிஸ்தான் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரிடம் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி தீக்கிரை



(கொழும்பு)

வெலிமடை - திமுத்து கம பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்று தீப்பற்றி எரிந்துள்ளது.

இதனை விஷமிகள் தீயிட்டு கொளுத்தியிருக்கலாம் என சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்றுள்ளது.

தனது வீட்டின் முன் லொறி எரியும் வெளிச்சத்தைக் கண்ட நபர், அயல்வர்களின் உதவியுடன் தீயை அணைக்க முற்பட்டுள்ளார்.

எனினும், லொறி முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

இதேவேளை, குறித்த சம்பவம் தொடர்பில் வெலிமடை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (இ-7)

# சுதந்திரக் கட்சியிலிருந்து நீக்கப்படுகிறார் மகிந்த?



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து, நீக்கப்படலாம் என்று கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலர் துமிந்த திஸாநாயக்கவை மேற்கோள்காட்டி இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

தேர்தல்கள் தொடர்பான கலந்துரையாடல்களில் பங்கேற்காத எந்தவொரு கட்சி உறுப்பினரும், கட்சியின் பதவிகளை இழப்பார்கள் என்று துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்காக பணியாற்றாத கூட்டு எதிரணியின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் அண்மையில், நீக்கப்பட்டு, அவர்களுக்குப் பதிலாக புதிய அமைப்பாளர்கள் அண்மையில் நியமிக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சிறு கல் துண்டுக்கு பொலிஸ் பாதுகாப்பா?



(கொழும்பு)

திக்வெல்லையில், விண்கல் துகள் எனக் கருதப்படும் ஒரு சிறு கல் துண்டுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

மாத்தறை கடற்பகுதியில் கடந்த புதனன்று விண்கல் என்று சந்தேகிக்கப்படும் ஒரு பொருள் விழுந்து வெடித்தது.

இந்நிலையில், மாத்தறை மாவட்டம், திக்வெல்லையின் வீடொன்றின் கூரையில் கல் துண்டு ஒன்று இருக்கக் கண்ட வீட்டு உரிமையாளர், அது குறித்து பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தார்.

"கல் துண்டு ஒன்று வீட்டுக் கூரையில் விழுந்து உருளும் சத்தம் கேட்டது. அது பற்றி நாங்கள் ஒன்றும் பெரிதாக நினைக்கவில்லை. மறுநாள் காலையில் கூரையில் ஏறிப் பார்த்தபோது, எரிந்து போன கல் துண்டு ஒன்று விழுந்திருந்ததைக் கண்டேன். இதையடுத்தே பொலிஸாருக்குத் தகவல் அளித்தேன்" என வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

இது பற்றி ஆராய்ந்த பொலிஸார், ஆர்தர் சி.கிளார்க் நிலையத்துக்கும் சுரங்கத் துறையினருக்கும் தகவல் அனுப்பியுள்ளனர். தற்போது அந்தக் கற்துண்டு பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கிறது. (இ-7)

# வாகன விபத்தில் சிக்கிய முன்னாள் பிரதி அமைச்சர் வைத்தியசாலையில்

(கொழும்பு)

முன்னாள் பிரதி அமைச்சர் கீதாஞ்ஜன குணவர்தன பயணித்த வாகனம் அவிஸாவெல - கொழும்பு பிரதான வீதியிலுள்ள கொஸ்கம பிரதேசத்தில் விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இவ்விபத்தில் காயமடைந்த கீதாஞ்ஜன குணவர்தன காயமடைந்த நிலையில் அவிஸாவெல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவருடைய வாகனத்தில் மோதிய வாகனத்தில் இருந்து நான்கு கிலோ கஞ்சாவை பொலிஸார் மீட்டுள்ளனர். இந்த வாகனத்தில் பயணித்த இரு இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-7)

# சிவனொளிபாதமலை விஷேட வலயமாகிறது

(கொழும்பு)

சிவனொளிபாதமலைப் பிரதேசத்தை எந்தவொரு உள்ளூராட்சி சபைகளுக்கும் உட்படாத விஷேட வலயமாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தும் படி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுவதற்கு பாராளுமன்ற கட்சித்தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் கடந்தவாரம் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.


தற்போது சிவனொளி பாதமலை அம்பகமுவ பிரதேச சபையின் கீழ் வருகிறது. அம்பகமுவ பிரதேச சபை பிரிக்கப்பட்டால், சிவனொளிபாதமலை மஸ்கெலியா பிரதேச சபைக்குள் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1225

Search for people, places and things  Nagendram Home

**தேவ்**

அப்பா நீ எகிப்து போனியா? இல்லையே!




அப்ப இந்த மம்மியை எங்கேயிருந்து கொண்டு வந்தே?

**சாருகேசி**

பாக்கெட்ல பத்து பைசா கூட இல்லாம திரியும் போது வாழ்க்கை நமக்கு கற்றுத் தருமே ஒரு பாடம்...




அது சாகும் வரைக்கும் மறக்காது!

**தர்மி**

புருஷன் சரியில்லைன்னா கூட அட்ஜஸ்ட் பண்ணிப்பாங்க...




ஆனா புதுசா தைத்த ஜாக்கெட் சரியில்லைன்னா ரெய்லர் மேல கொலவெறி ஆயிருவாங்க...

**சேகர்**

பையனா? புள்ளையா? எனக் கேட்டறிந்த பிரசவத்தை...



நார்மலா? சிசேரியனா? என மாறிக் கேட்க வைத்தது நவீன மருத்துவம்...!

**காருண்யன்**

குருவியை அழிக்க முடிந்த விஞ்ஞானத்தால்,




கொசுவை அழிக்க முடியவில்லை!

**சரணா**

வாத்தியார்: கரண்ட் போகும் போது முதல்ல எதை எடுப்பீங்க? டார்ச் லைட், எமர்ஜன்சி லைட்?




இரண்டுமில்லை சார், அப்பா பாக்கெட்ல இருக்குற பணத்தை எடுப்பேன் சார்.

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐப்பசி மாதக இராசி பலன்கள்

## 18.10.2017-16.11.2017

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



### மனதில் பட்டதை மறைக்காமல் எடுத்துரைக்கும் கும்ப இராசி வாசகர்களே!

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி, தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். 9 இல் சஞ்சரிக்கும் குருவின் பார்வை பரி பூரணமாக உங்கள் இராசியில் பதிகின்றது. எனவே வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வசதிகள் பெருகும். உத்தியோகம், தொழிலில் நீங்கள் எடுத்த முயற்சிக்கு உன்னத பலன் கிடைக்கும். குடும்பத்தில் மங்கல ஓசை கேட்க்வில்லையே என்று இதுவரை கவலைப்பட்டிருப்பீர்கள். ஆனால் வரும் மாதத்தில் மகிழ்ச்சியடையும் விதத்தில் சுபகாரியங்கள் இல்லத்தில் நடைபெறப் போகின்றது.

பழைய தொழிலில் சேர்த்த பங்குதாரர்களை விலக்கிவிட்டுப், புதிய பங்குதாரர்களை சேர்த்துக்கொண்டு பொருளாதார நிலை உயர வழிவகுத்துக் கொள்ளலாமா? என்று சிந்திப்பீர்கள். நண்பர்கள் உங்கள் கருத்துகளை புரிந்து கொண்டு உதவி செய்ய முன்வருவார்கள். உங்கள் இராசியைப் பார்க்கும் குரு, கொஞ்சம் வலிமையிழந்திருப்பதால் ஒரு சில காரியங்கள் உடனடியாக நிறை வேறாவிட்டாலும், 2 ஆம் முறையாகச் செய்யும் முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

அதே நேரத்தில் அஷ்டமத்தில் 3 கிரகங்கள் இருக்கின்றன. 6 இற்கு அதிபதியான சந்திரன், 4,9 இற்கு அதிபதியான சுக்ரன், 3,10 இற்கு அதிபதியான செவ்வாய் ஆகிய மூன்றும் மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 8இல் சஞ்சரிக்கிறார்கள்.

அஷ்டமத்தில் செவ்வாய் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. ஆரோக்கியத் தொல்லைகள் உருவாகும். எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட வகையில் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். நோய்க்கான அறிகுறிகள் தென்படும் பொழுதே மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. வாகனப் பழுதுகளால் மனவாட்டம் ஏற்படும். புதிய வாகனம் வாங்கப் போட்ட திட்டத்திற்கு குடும்ப உறுப்பினர்கள் தடை சொல்லக்கூடும். உடன்பிறப்புகளின் பகை மேலோங்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் எவ்வளவு சிறப்பாகப் பணி புரிந்தாலும் மேலிடத்தில் இருந்து பாராட்டுக் கிடைப்பது அரிது.

செவ்வாய்க்கிழமை தோறும் விரதமிருந்து முருகப்பெருமானை வழிபட்டு வாருங்கள். கந்த சஷ்டி விரதமிருந்து கந்தப்பெருமானை வழிபடுவதன் மூலம் காரியங்களில் வெற்றி கிடைக்கும். குரு பகவான் கொஞ்சம் வலிமை இழந்திருப்பதால் வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து குருவை வழிபடுவது நல்லது. சிறப்பு வழிபாடாக குருவிற்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்கு சென்று வழிபட்டு வந்தால், குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைக்கும்.

விருச்சிக புதனின் சஞ்சாரம்!

உங்கள் இராசிக்கு 5,8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். இதுவரை துலாம் இராசியில் சஞ்சரித்து வந்த அவர், ஒக்டோபர் 28 ஆம் திகதி விருச்சிக இராசிக்குச் செல்கிறார். பஞ்சமாதிபதி 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் போது, பஞ்சாயத்துகள் நல்ல முடிவிற்கு வரும். பூர்வீகச் சொத்துத் தகராறுகள் அகலும். பிள்ளைகளின்




## பெண் வழிப் பிரச்சினைகள் அகலும்!

வேலைக்காக எடுத்த முயற்சி கைகூடும். பிள்ளைகளின் வாயிலாகவும் உதிரி வருமானங்கள் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வரவேண்டிய சம்பளப் பாக்கிகள் வந்து சேரும். உடன் பணிபுரியும் சக ஊழியர்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். ஆலயத் திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

சுக்ர பெயர்ச்சிக் கால்ம்!

உங்கள் இராசிக்கு 4,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்ரன். அவர் தற்சமயம் நீச்சத்தில் இருக்கிறார். அவர் நவம்பர் 3 ஆம் திகதி துலாம் இராசிக்கு வருகிறார்.

சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் சுக்ரன், உங்கள் சிந்தனைகள் அனைத்தையும் வெற்றி பெறச் செய்வார். வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பெண் வழிப் பிரச்சினைகள் அகலும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சி கைகூடும். தொழில் வளர்ச்சி சீராகும். வீடு வாங்க வேண்டுமென்ற ஆசை நிறை வேறும்.

இம்மாதம் இராகு-கேதுக்களுக்குப் பிரீதி செய்வது நல்லது. செவ்வாய்க்கிழமை தோறும் துர்க்கையை வழிபட்டு வருவது நல்லது. உங்கள் செயற்பாடுகளில் உள்ள தடை அகலும்.

பெண்களுக்கான பலன்கள்!

கும்ப இராசியில் பிறந்த பெண்களுக்கு, குருவின் பார்வை பலத்தால் குழப்பங்கள் மாறும் மாதம் இது. கொடிகட்டிப் பறந்த குடும்பப் பிரச்சினைகள் அகலும். அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள். அடுத்தவர்களுக்கு பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகைக்கு வந்து சேரும். மனை கட்டிக் குடியேறும் வாய்ப்புக் கிடைத்து மகிழ்ச்சியை உருவாக்கும். உடன்பிறப்புகளால் மனம் மகிழும் சம்பவம் ஒன்று நடைபெறும். தாய் வழி ஆதரவு உண்டு. அனுமன் வழிபாடும், பெருமாள் - இலட்சுமி வழிபாடும் ஆனந்த வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும்.



### நேரம் காலம் பார்த்துச் செய்தால் வெற்றி நிச்சயம் என்று சொல்லும் மீன இராசி வாசகர்களே!

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு அஷ்டம ஸ்தானத்தில் வலிமையிழந்து சஞ்சரிக்கிறார். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வலிமையிழந்த பொழுது நன்மையைச் செய்யும் என்பார்கள். அந்த அடிப்படையில் இம்மாதம் தொழில் முன்னேற்றமும், பொருளாதாரத்தில் நிறைவும் ஏற்படும்.

உத்தியோகத்தில் உடனிருக்கும் சகப் பணியாளர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும். ஊதிய உயர்வு எதிர்பார்த்தபடி கிடைக்கும். குருவின் பார்வை 2,4,12 ஆகிய இடங்களில் பதிவதால் அந்த இடங்கள் புனிதமடைகின்றன. எனவே குடும்ப பிரச்சினைகள் படிப்படியாக நிவர்த்தியாகும். ஒரு சிலர் உத்தியோகம் சம்பந்தமாக வெளியூர், வெளி மாநிலம், வெளிநாடு போன்றவற்றில் ஏதேனும் ஒன்றிற்குச் செல்ல முயற்சி செய்திருந்தால் அதில் அனுகூலம் கிடைக்கும்.

சப்தம ஸ்தானத்தில் சந்திரன், செவ்வாய், சுக்ரன் ஆகிய மூன்று கிரகங்களும் மாதத் தொடக்கத்தில் வீற்றிருக்கிறார்கள். சுக்ரன் நீச்சம் பெற்றிருப்பது ஒரு வகைக்கு நன்மைதான். கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம் என்பதற்கு ஏற்ப, விபரீத ராஜயோக அடிப்படையில் திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட உங்களுக்கு வெற்றி கிடைக்கப் போகின்றது. குறிப்பாக வழக்குகள் சாதகமாகும். பெண்வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். இடம், பூமி வாங்குவதில், பத்திரப் பதிவில் இருந்த தடை அகலும். திடீரென பகையான உறவினர்கள் இப்பொழுது நட்பாவார்கள்.

பூர்வீகச் சொத்துகளை விற்றதன் மூலம் நிலுவையில் இருந்த தொகை கைக்கு வந்து சேரும். இராகு-கேதுக்களின் ஆதிக்கத்தைப் பார்க்கும்பொழுது, பஞ்சம ஸ்தானத்தில் இராகுபகவான் பலம் பெற்றிருக்கிறார். லாப ஸ்தானத்தில் கேது நிற்கிறார். இராகு, சந்திரன் வீட்டில் சஞ்சரிப்பதால் ஒருசில சமயங்களில் இனம்புரியாத கவலை மேலோங்கும். திட்டமிட்ட காரியங்களில் திசை மாற்றமும் ஏற்படலாம். எனவே சர்ப்ப பிரீதி செய்து கொள்வது நல்லது. மேலும் செவ்வாய்க்கிழமை தோறும் முருகப்பெருமான் வழிபாட்டையும், துர்க்கை வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். சஷ்டி நாளில் கந்தனைக் கை கூப்பித் தொழுது கவலைகளைப் போக்கிக் கொள்ளுங்கள்.

விருச்சிக புதனின் சஞ்சாரம்!

மாதத் தொடக்கத்தில் 8 ஆம் இடத்தில் புதன் சஞ்சரிக்கிறார். ஒக்டோபர் 28 ஆம் திகதி அவர், 9 ஆம் இடமான விருச்சிகத்திற்கு வருகிறார். 4,7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், விருச்சிகத்திற்கு வரும் பொழுது உன்னதமான பலனைக் கொடுக்கும். குறிப்பாக ஆரோக்கியத் தொல்லை அகலும். ஆதாயம் தரும் தகவல்கள் அதிக மாகவே வந்து சேரும். வாகன யோகம் உண்டு. பயணங்கள் பலன் தருவதாக அமையும். பங்காளிப் பகை மாறும். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து இணைவர். தொழிலில் எதிர்பார்த்த படியே இலாபம் கிடைக்கும்.




## உதிரி வருமானங்கள் பெருகும்

சுக்ரப் பெயர்ச்சிக் காலம்!

மாதத்தொடக்கத்தில் நீச்சம்பெற்றுச் சஞ்சரித்து வந்த சுக்ரன், நவம்பர் 3 ஆம் திகதி துலாம் இராசிக்கு வரப்போகிறார். துலாம் இராசி சுக்ரனுக்கு சொந்த வீடாகும். உங்கள் இராசிக்கு அஷ்டமாதிபதியான சுக்ரன், அஷ்டமத்திலேயே சஞ்சரிக்கும் பொழுது உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். உதிரி வருமானங்கள் பெருகும். இழப்புகளை ஈடுசெய்ய ஏதேனும்ஒரு வழி பிறக்கும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். போட்டிகளில் வெற்றி கிடைக்கும். புதிய பாதை புலப்படும். கூட்டாளிகள் விலகினா லும், கூடுதல் நன்மை கிடைக்க புதிய கூட்டாளிகள் வந்திணைவர். ஆரோக்கியத் தொல்லை மட் டும் உருவாகலாம். சிறு சிறு தொல்லைகளால் அவதிப்பட நேரிடலாம். அலைச்சலைக் குறைத்துக் கொள்வதன் மூலம் ஆரோக்கியத்தை சீராக்கிக் கொள்ள இயலும்.

இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குரு வழிபாட்டை மேற்கொள்வதோடு, பௌர்ணமி விரதமிருப்பது உகந்தது.

பெண்களுக்கான பலன்கள்!


மீன இராசியில் பிறந்த பெண்களுக்கு, நம்பிய காரியங்கள் தவறாது நடைபெறும் மாதம் இது. வீடு மாற்றங்கள் விரும்பிய படி நடைபெறும். அரசாங்கத் தேவைக்காக விண்ணப்பித்து இருந்தவர்களுக்கு அது கைகூடுதவற்கான அறிகுறி தென்படும். கணவன்-மனைவிக்குள் இருந்து வந்த கருத்துவேறுபாடுகள் விலகும். பிள்ளைகள் பிரியமாக நடந்துகொள்வர். தாய்வழி ஆதரவு உண்டு. உடன்பிறப்புகள் உங்கள் தொழிலுக்கு உறுதுணை புரிவர். உத்தி யோக வாய்ப்புகள் கைகூடிவரும்.

வீடு வாங் கும் முயற்சி யில்வெற்றி கிட்டும். வியாழக்கிழமை தோறும் விரதமும், தட்சிணா மூர்த்தி வழிபாடும் வேண்டிய வரங்களைக் கொடுக்கும். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஏகிய இராஜ்ய' வை எதிர்ப்பது ஏன்?

## வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் செவ்வி



வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் சிலோன் ருடே ஊடகத்திற்கு வழங்கிய நேர்காணல்

**கேள்வி:** புதிய அரசியல் யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏகிய இராஜ்ய "Ekiya Rata" என்கின்ற சொற்றொடரை மாற்றுமாறு தாங்கள் குறிப்பிட்டிருந்தீர்கள். இதற்கான காரணம் என்ன?

**பதில்:** இந்த நாட்டின் ஒருமைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளதைக் குறிப்பதற்கான பிறிதொரு வழியாக இச்சொற்றொரடர் மாற்றம் அமையும் என நான் குறிப்பிட்டுள்ளேன். இந்த வார்த்தையானது 'Eksath' (ஐக்கிய) எனப் பிரயோகிக்கப்பட்டிருந்தால் சிங்களத் தலைவர்களின் மனோநிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை என்னால் விளங்கிக் கொள்ள முடிந்திருக்கும். ஆனால் சிங்களத் தலைவர்கள்"Eksath Rata" என்பதை விட "Ekiya Rata" என்கின்ற சொற்றொடரைப் பிரயோகிப்பதையே விரும்பினர்.

உயர் நீதிமன்றம் "Ekiya Rata" என்பதை ஒற்றையாட்சி நாடு என்றே மொழிபெயர்க்கும். இந்த நாடானது ஒருபோதும் ஒற்றையாட்சி நாடாக இருந்ததில்லை. பல்வேறு இனக்குழுமங்களாகத் தனித்தனியாக வாழ்ந்த மக்கள் பிரித்தானியர்களால் ஒன்றிணைக்கப்பட்டனர். இதன் பின்னர் ஒற்றையாட்சி நிலையானது பெரும்பான்மை சமூகத்தால் அமுல்படுத்தப்பட்டது.

1919 மற்றும் அதன் பின்னரான காலப்பகுதியில் செயற்பட்ட சிங்களத் தலைவர்களான சேர் ஜேம்ஸ் பீரிஸ், ஈ.ஏ.சமரவிக்ரம போன்றோர் நெடுங்காலமாக வடக்கு- கிழக்கில் தமிழ் மக்களே பெரும்பான்மை சமூகமாக வாழ்ந்து வருகின்றனர் என்கின்ற உண்மையை ஏற்றுக்கொண்டனர்.

நாட்டில் வாழும் அனைத்து சமூகத்தவர்களாலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியலமைப்பை உருவாக்கும் போது பிரித்தானியர்கள் சிதறிக்கிடந்த பல்வேறு சமூகத்தவர்களை 'ஒன்றிணைத்தனர்' என்கின்ற உண்மையையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இதன் காரணமாகவே நாங்கள் என்கின்ற "Eksath" (ஐக்கிய) வார்த்தை பயன்படுத்தப்பட வேண்டும் என விரும்புகிறோம்.

**கேள்வி:** தாங்கள் புலிகளின் குரலாகச் செயற்படுவதாக யாழ்ப்பாணத்தில் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க விமர்சித்திருந்தார். ஆனால் தற்போது தாங்கள் புலம்பெயர் சமூகத்திற்கு ஆதரவாகச் செயற்படுகிறீர்கள். இது தொடர்பான தங்களின் கருத்து என்ன?

**பதில்:** நான் பிறருக்காகச் செயற்படுகிறேன் என்பது சரியான கருத்தாகும். அதாவது நான்எனது வடமாகாண மக்கள் சார்பாகச் செயற்படுகிறேன். எமது மக்களின் பிரச்சினைகளை சிங்கள சகோதரர்களிடமும் அனைத்துலக சமூகத்தின் முன்னும் சமர்ப்பிக்கின்ற ஒரு சட்ட வாளராகவே நான் செயற்படுகிறேன்.

சட்டவாளர் ஒருவர் தனது கட்சிக்காரின் வழக்கில் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும். எமது தமிழ் மக்களின் கோரிக்கை மீது நான் நம்பிக்கை கொண்டுள்ளேன். மதம் மீது அதிக நம்பிக்கை கொண்டவன் என்ற வகையில் நான் மனிதாபிமானத்தை முழுமையாக நேசித்தேன். தற்போதும் நேசிக்கிறேன். இதன் காரணமாகவே எனக்கு எதிராகச் சதி செய்பவர்கள் மற்றும் எனக்குத் தீங்கு விளைவிக்க வேண்டும் எனக் கருதுபவர்கள் எனக்கு முன்னால் அமைதியாக இருந்து விடுகிறார்கள்.

நான் எவர் மீதும் வசைபாடவில்லை. ஆனால் விமர்சிக்க வேண்டியவர்களை விமர்சிப்பதுடன் ஆதரவு தேவைப்படுபவர்களுக்கு ஆதரவையும் நான் வழங்கு வேன். அதனை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது. நான் பிழை செய்பவர்களை விமர்சிப்பதை விட பிழையான செயற்பாடுகளையே விமர்சிக்கிறேன். தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்னெடுக்கப்பட்ட 'பிரிவினைவாதத்திற்கு' நான் ஆதரவளிப்பதாக அமைச்சர் கூறமுற்படுகிறார்.

நான் 133,000 இற்கும் மேற்பட்ட மக்களின் ஆதரவுடன் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டே முதலமைச்சராகினேன் என்பதை அமைச்சர் மறந்து விட்டார். மாறாக நான் பிரிவினைவாதத்தை தூண்டியதன் மூலம் பதவிக்கு வரவில்லை. அத்துடன் சுயநிர்ணயம், வடக்கு- கிழக்கு இணைப்பு, கூட்டாட்சி போன்றவை எமது 2013 தேர்தல் விளக்கவுரையில் காணப்படுகிறது.

அமைச்சர் திஸாநாயக்க ஒரு பட்டதாரி ஆவார். இவர் உயர்கல்வி அமைச்சராகப் பதவி வகித்திருந்தார். இந்நிலையில் இவருக்கு பிரிவினைவாதம் மற்றும் கூட்டாட்சி போன்றவற்றுக்கு இடையிலான வேறுபாடு தெரியாதா? இந்த அடிப்படையில் கூட்டாட்சி என்பது பிரிவினைவாதத்திற்கு எதிரானதாகும். கூட்டாட்சி என்பது தனித்தனியாக உள்ள சமூகங்களை ஒன்றிணைக்கின்றது.

என்னை புலிகளின்குரல்எனக் கூறும் அமைச்சர், அவர் கூறிய தமிழீழ விடுதலைப் புலிகள் என்கின்ற பிரிவையும் அடையாளங் கண்டுகொள்ள வேண்டும். புலிகள் அமைப்பு அழிக்கப்பட்டு விட்டதாக அரசாங்கம் பெருமை பேசியது. இந்நிலையில் அமைச்சர் தற்போது எந்த அமைப்பைப் பற்றிப் பேசுகிறார்?

2013 தேர்தலில் போட்டியிடும் போது நாங்கள் முன்வைத்த தேர்தல் விளக்கவுரையின் அடிப்படையில் நான் முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டேன். இந்த அடிப்படையிலேயே நான் செயற்படுகிறேன். இது எனது கடமையாகும்.

**கேள்வி:** அரசியல் திருத்தச் சட்டம் தொடர்பாக அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட இடைக்கால அறிக்கையானது தமிழ் மக்களுக்கு அதிருப்தியளிப்பதாகவும் நாட்டில் நிலவும் பிரச்சினைக்கான அடிப்படைக் காரணம் என்ன என்பது தொடர்பான புரிந்துணர்வு இல்லாமலேயே இடைக்கால அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தாங்கள் தெரிவித்திருந்தீர்கள். இது தொடர்பான தங்களின் கருத்து என்ன?

**பதில்:** 1919-1921 வரையான காலப்பகுதியில் செயற்பட்ட சிங்களத் தலைவர்கள் அரசியற் தலைமையைத் தம்மகத்தே வைத்திருந்தமையே இந்தப் பிரச்சினைக்கான அடிப்படைக் காரணமாகும். சிறுபான்மை மக்களை சிறந்த முறையில் நடத்துவதாக சிங்களத் தலைவர்கள் பிரித்தானியாவிடம் வாக்குறுதி வழங்கிய போதிலும் படிப்படியாக இவர்களின் கைகளில் நாட்டின் அரசியல் அதிகாரம் வரத் தொடங்கிய பின்னர் சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பறிக்கத் தொடங்கினர்.

இதன் முதற்கட்டமாக 1949 இல் இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. இதன் பின்னர் 29ஆவது சரத்திற்கு எதிர்மாறாக, 1956இல் சிங்கள மட்டும் சட்டம் அமுல்படுத்தப்பட்டது. இது வடக்கு- கிழக்கில் வாழ்ந்த தமிழ் மக்களின் மொழி உரிமையைப் பறித்தது. 1971இல் தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குச் செல்வதைத் தடுக்கும் முகமாக தரப்படுத்தல் சட்டம் கொண்டுவரப்பட்டது.

இயற்கைச் சட்டத்திற்கு எதிராக தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த இடங்களில் சிங்கள மொழி பேசும் மக்கள் குடியமர்த்தப்பட்டனர். வடக்கு- கிழக்கு மக்களின் கட்டமைப்பில் மாற்றத்தைக் கொண்டு வரும் நோக்கில் திட்டமிட்ட சிங்களக்குடி யேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

1919-1921 வரையான காலப்பகுதியில் சிங்களத் தலைவர்கள் பெற்றுக் கொண்ட பிராந்திய விகிதாசாரப் பிரதிநிதித்துவம் மூலம் நாடாளுமன்றில் சிங்களவர்கள் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றுக் கொண்டனர். இதன் மூலம் இவர்கள் தமக்குச் சார்பான சட்டங்களை இயற்றிக் கொள்வதற்கான வாய்ப்பைப் பெற்றுக் கொண்டனர்.

பிராந்திய விகிதாசாரப் பிரதிநிதித்துவத்திற்காக இனவிகிதாசாரப் பிரதி நிதித்துவத்தைக் கைவிடுமாறு சிங்களத் தலைவர்கள், தமிழ்த் தலைவர்களான சேர் பொன்னம்பலம் அருணாச்சலம் போன்றவர்களிடம் பேச்சு நடத்தினர். திட்டமிட்ட சட்டங்களை அமுல்படுத்துவதற்காக சிங்களத் தலைவர்கள் பாதிக்கப்பட்ட மக்களிடம் பேரம் பேசத் தொடங்கினர்.

இவ்வாறான பேரம் பேசல்களின் விளைவாக பண்டாரநாயக்க-செல்வநாயகம் உடன்படிக்கை, டட்லி-செல்வநாயகம் உடன்படிக்கை போன்ற பல்வேறு உடன்படிக்கைகள் நடைமுறைக்கு வந்தன.

தற்போது அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கையில் கடந்த காலங்களில் சிறுபான்மை மக்கள் என அழைக்கப்பட்டவர்களுக்கு எதிராக இடம் பெற்ற பாரபட்சங்கள் நீக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறான சம்பவம் இடம் பெறவில்லை.

சிறுபான்மை மக்கள் தொடர்பில் 1919-1921இல் சிங்களத் தலைவர்களும் 1948 இல் பிரித்தானியர்களும் நீதி, நேர்மை மற்றும் மதிப்புடன் நடப்பார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இந்த எதிர்பார்ப்புக்கள் வெற்றியளிக்கவில்லை. இவர்கள் பௌத்த சிங்களவர்களுக்கே முன்னுரிமை அளித்தனர். வடக்கு- கிழக்கைப் பொறுத்தளவில் கூட்டாட்சி நிர்வாக அலகுடன் இணைந்த அரசியல்யாப்பானது அங்கு வாழும் மக்களின் சுயநிர்ணய உரிமைகளைப் பாதுகாக்கும்.

அத்துடன் சிங்களத் தலைவர்களால் தமிழ் பேசும் மக்களுக்கு இதுவரை இழைக்கப்பட்ட பல்வேறு அநீதிகளும் கூட்டாட்சி அரசியல் யாப்பின் மூலம் திருத்தியமைக்கப்படும் என நாங்கள் கருதுகிறோம். ஏன் கூட்டாட்சியை வழங்க முடியாது என்பது தொடர்பாகக்கூட இடைக்கால அறிக்கையில் கலந்துரையாடப்படவில்லை. இந்நிலையில் இந்த அறிக்கையைத் தமிழ் மக்கள் எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்?

வழிமூலம் -Ceylon today
ஆங்கிலத்தில் - Sulochana Ramiah Mohan
மொழியாக்கம் - நித்தியபாரதி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

21.10.2017 தொடர்ச்சி...

## பொறாமை கொள்ளாதே!

இதையறிந்த கடன்காரர்கள் அவர்களின் வீட்டைப் பறித்துக் கொண்டு தருமன் மனை வியையும்மகனையும்வீட்டை விட்டு வெளியே அனுப்பி விட் டனர். தேவராஜ்தன் தாயுடன் எங்கே செல்வது எனது தெரி யாமல் நண்பர் ஒருவரின் இல்லத்தை அடைந்தனர். நல்ல நண்பர் அடைக்கலம் கொடுத்தார்.

கப்பலேறிக் கடற்பயணம் சென்ற தருமன் முதலானோர் புயலால் அலைக்கழிக்கப்பட்டு எங்கெங்கோ சென்று கரைய ருகே ஒரு கட்டு மரத்தைப் பிடித்துக் கரையேறினர். உயிர் பிழைத்ததே பெரும் புண்ணி யம் என்று சொல்லுமளவுக்குத் துன்பத்தை அடைந்தனர்.

ஒரு வழியாகத் தன் வீட்டை அடைந்த தருமன் தன் மனைவி மகன் இருக்கும் இடம் அடை ந்து நடந்ததை எல்லாம் அறி ந்து மிகுந்த துன்பமும் துயர மும் அடைந்தான். தன் மனைவி மகனுக்கு அடைக்கலமளித்த நண்பருக்கு நன்றி சொல்லி இன்று நிற்கவும் நிழலின்றி இருக்கும் தன் நிலையைச் சொல்லி அழுதான். அப்போது



அந்த நண்பர், அன்றொரு நாள் ஒரு ஏழை உன்னிடம் எவ்வளவு கெஞ்சினான். நீ கூட என்னை எதுவும் உதவி செய் யாதே என்றாயே, இப்போது பார். உன் நிலையும் அதே போல ஆயிற்று. இனியாவது யாருக்குமில்லையென்று சொல் லாதே அதுமட்டுமல்ல. கொடு ப்பதையும் தடுக்காதே. உன் னால் முடிந்தால் கொடுப்பவர் இருக்குமிடத்தையாவது காட்டு.

ஒரு ஏழைக்கு சாப்பாடு கிடைக்கும் என்று விதுரன் வீட்டைக் காட்டிக் கொடுத்தத னால் தன் விரலை வாயில் வைத்ததும் கர்ணனின் பசி அடங்கியது என்று மகாபாரதக் கதை கேட்டதில்லையா?" என்று கூறக் கேட்ட தருமன் கண்ணீருடன் தலையசை த்து ஒப்புக் கொண்டான்.

அதன் பின் மனைவி மக னுடன் மீண்டும் வியாபாரத் தைத் தொடங்கினான். ஆனால் எந்த ஏழைக்கும் இல்லையென்று சொல்வது மில்லை, யாருக்கேனும் யாரேனும் தானம் செய்தால் அதைப் பார்த்து இனி பொறா மைப்படுவதும் இல்லை என முடிவு செய்து கொண்டான் தருமன்.

அவன் மனம் அடிக்கடி வள்ளுவரின் திருக்குறளை நினைத்துக் கொண்டு அவனை எச்சரித்துக் கொண்டே இருந்தது.

"கொடுப்பது அழுக் கறுப்பான் சுற்றம் உடுப் பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும்."

நமக்கும் இது ஒரு பாடம்தான்.

முற்றும்.




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 425- மூன்றாம் வலன்ரினியன் ஆறாவது அக வையில் ரோமப் பேரரசன் ஆனான்.
- 1707- பெரிய பிரித்தானியாவின் முதல் நாடாளு மன்றம் கூடியது.
- 1739-பிரித்தானியப் பிரதமர் றொபேர்ட் வால் போல் ஸ்பெயின் மீது போரை அறிவித்தார்.
- 1870-பிரான்சின் மெட்ஸ் என்ற இடத்தில் இடம் பெற்ற இறுதிப் போரில் பிரஷ்யா வெற்றி யடைந்தது.
- 1911-முதற்தடவையாக வானூர்தி ஒன்று போரில் பாவிக்கப்பட்டது. இத்தாலிய வானோடி லிபியாவில் இருந்து புறப்பட்டு துருக்கிய இராணுவ நிலைகளை அவ தானித்தான்.
- 1912-முதலாம் பால்கன் போர்: சேர்பியா வுக்கும் ஓட்டோமான் பேரரசுக்கும் இடையில் போர் ஆரம்பமானது.
- 1915-நியூயோர்க் நகரில் 25,000-33,000 பெண்கள் வாக்குரிமைகோரி போராட்டத் தில் ஈடுபட்டனர்.
- 1917- லெனின் அக்டோபர் புரட்சிக்கு அழைப்பு விடுத்தார்.
- 1942-ஐக்கிய அமெரிக்க வான்படையின் தாக்கு தலுக்கு அமெரிக்கப் பயணிகள் விமா னம் ஒன்று இலக்கானதில் அதில் பய ணம் செய்த 12 பேரும் கொல்லப்பட்ட னர். இறந்தவர்களில் ரால்ஃப் ரைஞ்சர் என்ற பிரபலமான இசை மேதையும் அடங்குவார்.
- 1944- இரண்டாம் உலகப்போர்: மிகப்பெருங்கடற் படைப் போர் பிலிப்பீன்சில் ஆரம்பமாயிற்று.
- 1944-இரண்டாம் உலகப் போர்: சோவியத்தின் செம்படைகள் ஹங்கேரியை அடைந்தன.
- 1946-ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் முத லாவது கூட்டத்தொடர் நியூயோர்க் நகரில் ஆரம்பமாயிற்று.
- 1966-ஐக்கிய நாடுகள் சபை மைய மண்டபத் தில் எம். எஸ். சுப்புலட்சுமியின் இசை நிகழ்ச்சி இடம்பெற்றது.
- 1991-ஈழப்போர்: தமிழீழப் போரில் அநா தைகளான பெண் பிள்ளைகளின் மறு வாழ்வுக்காக செஞ்சோலை சிறுவர் இல் லம் ஆரம்பிக்கப்பட்டது.
- 2001-வட அயர்லாந்தில் இடம்பெற்ற அமைதிப் பேச்சுக்களின் பின்னர் ஐரிஷ் குடியரசு இராணுவம் ஆயுதக்களைவில் ஈடுபட்டது.
- 2001-ஆப்பிள் நிறுவனத்தின் ஐபொட் வெளி யிடப்பட்டது.
- 2006-இலங்கை சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் புரிந்துணர்வு ஒப்பந் தத்தில் கைச்சாத்திட்டன.

பிறப்புகள்

- 1873- வில்லியம் டி. கூலிட்ச், அமெரிக்க இயற் பியலாளர் (இ. 1975)
- 1920-புச்சியித்தா தெத்துசுயா, ஜப்பானிய- அமெரிக்க அறிவியலாளர் (இ. 1998)
- 1939-சி.வி.விக்னேஸ்வரன், இலங்கை நீதிபதி, 1ஆவது வட மாகாண முதலமைச்சர்
- 1940-பெலே, பிரேசில் கால்பந்து வீரர்
- 1942-மைக்கேல் கிரைட்டன், அமெரிக்க இயக்குநர் (இ. 2008)
- 1948-எம். எச். எம். அஷ்ரப், இலங்கை அரசி யல்வாதி (இ. 2000)
- 1954-ஆங் லீ, தாய்வான்-அமெரிக்க இயக் குநர்
- 1960-ராண்டி பௌஷ், அமெரிக்க எழுத்தா ளர் (இ. 2008)

இறப்புகள்

- 1921-ஜான் பாய்டு டன்லப், இசுக்கொட்டிய தொழிலதிபர் (பி. 1840)
- 1986-டபிள்யூ. எம். எஸ். தம்பு, இலங்கைத் தமிழ் திரைப்படத் தயாரிப்பாளர் (பி. 1902)
- 2012-சுனில் கங்கோபாத்யாயா, வங்காளக் கவிஞர் (பி. 1934)

சிறப்பு நாள்

- தேசிய நாள் (ஹங்கேரி)
- மோல் நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 100 | 120 | 120 | 100 | 140 |
| உருளைக்கிழங்கு | 80 | 95 | 100 | 120 | 110 | 110 |
| பச்சைமிளகாய் | 400 | 320 | 400 | 500 | 350 | 50 |
| தக்காளி | 200 | 140 | 200 | 200 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 80 | 60 | 50 | 50 |
| கோவா | 120 | 80 | 140 | 120 | 120 | 100 |
| கரட் | 100 | 80 | 100 | 200 | 90 | 160 |
| பூசணி | 50 | 40 | 40 | 60 | 50 | 60 |
| புடோல் | 120 | 60 | 80 | 120 | 90 | 100 |
| வாழைக்காய் | 100 | 70 | 80 | 120 | 90 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 220 | 250 | 300 | 250 | 240 |
| பெரிய வெங்காயம் | 100 | 140 | 120 | 160 | 130 | 120 |
| பாகற்காய் | 400 | 300 | 400 | 300 | 400 | 80 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 80 | 120 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 80 | 100 | 60 | 80 |
| பயற்றங்காய் | 100 | 100 | 170 | 200 | 150 | 200 |
| லீக்ஸ் | 140 | 170 | 200 | 240 | 200 | 200 |
| பீற்றூட் | 100 | 60 | 100 | 120 | 100 | 100 |
| கறிமிளகாய் | 200 | 200 | 260 | 280 | 280 | 200 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 240 | 300 | 400 | 200 |
| போஞ்சி | 80 | 120 | 140 | 200 | 140 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 140 | 120 | 80 | 120 |
| கீரை - 1பிடி | 50 | 30 | 30 | 40 | 30 | 40 |
| தேசிக்காய் | 250 | 150 | 240 | 400 | 300 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 70 | 85 | 60-100 | 75 | 90 |
| இராசவள்ளி | 300 | 250 | — | - | 400 | — |
| வெங்காயப்பூ | 200 | 200 | — | — | 340 | 200 |
| முள்ளங்கி | 80 | 30 | → | 120 | 90 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 15 | 08 | 20 | 20 | 35 | 20 |
| ஈரப்பலா | 80 | 30 | — | 60 | 80 | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தின் அறப்பண்புகள், குணச்சிறப்புகள் ஆகிய அனைத்திலும் தலையாயது நல்லவராய் இருப்பது. அது தெய்வீகத் தன்மை. ~யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்கள் பேரவை என்ன செய்யப் போகிறது?

தமிழ் மக்கள் பேரவை உதயமாகி இரண்டு ஆண்டுகள் நிறைவடையப் போகிறது. இரண்டு ஆண்டுகளுக்குள் பேரவையின் சாதனைகள் மகத்தானவை.

அதில் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றுக் கொண்டமைதான் தமிழ் மக்கள் பேரவையின் எழுச்சிக்கும் சாதனைக்கும் மூலகாரணம் எனலாம்.

மக்கள் இயக்கமாக மலர்ந்த தமிழ் மக்கள் பேரவை தமிழ் மக்களின் உரிமை – நலன் – அபிவிருத்தி என்ற வகையில் தனது வகிபங்கை விரிவுபடுத்தி வருகின்றது.

எழுக தமிழ் எழுச்சிப் பேரணியை வடக்கிலும் கிழக்கிலும் நடத்தியதன் ஊடாகவும் கிழக்கில் மாபெரும் முத்தமிழ் விழாவை எழுச்சியுடன் செய்து முடித்ததாலும் வடக்கு கிழக்கு உறவு பலப்பட்டதுடன் இரண்டு மாகாணங்களும் இணைந்து தமது பலத்தைப் பன்மடங்காக்கியுள்ளன.

அதிலும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களே கிழக்கு மாகாணத்தினதும் தலைவர் என்று கிழக்கு மாகாணத்தின் தமிழ் உறவுகள் கூறிக்கொள்ளுமளவில், வடக்கு கிழக்கு மாகாணம் தமிழ் உறவுகளால் இணைந்து கொண்டது என்றால் அதற்கு வித்திட்ட சாதனை தமிழ் மக்கள் பேரவையையே சாரும்.

நிலைமை இதுவாக இருக்கையில், அரசியலில் ஈடுபடுவதில்லை என்ற கொள்கை தமிழ் மக்கள் பேரவையிடம் இருப்பது தமிழ் மக்களுக்குச் சாதகமானதல்ல என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

எனினும் அரசியலில் ஈடுபடுவதில்லை என்று தமிழ் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழியைக் காப்பாற்றுவதென்பதும் கட்டாயமானதாகும்.

அரசியலில் ஈடுபட்டால் மட்டுமே தமிழ் மக்களுக்கு நன்மை செய்ய முடியும் என்ற கருத்துக்கு நாம் உடன்பாடல்ல. அரசியலில் ஈடுபடாமல் மக்கள் நலனை முன்னிறுத்தி எத்தனையோ பணிகள் நம் மண்ணில் நடந்தாகின்றது.

இதற்கு தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் உள்ள எங்கள் தமிழ் உறவுகள் பேருதவி புரிந்து வருகின்றனர்.

எனினும் அரசியலால் நிர்ணயிக்கப்படுகின்ற முக்கியமான விடயங்கள் உண்டு என்பதையும் நாம் இவ்விடத்தில் அடியோடு நிராகரித்துவிட முடியாது.

தமிழ் அரசியல் களத்தை; அரசியல் தலைமையை பொருத்தமற்றவர்கள் கைப்பற்றி வைத்திருக்கும்போது நிலைமை மோசமாகி விடும் என்பது மறுக்க முடியாத உண்மை.

தமிழ் மக்கள் எவ்வளவுதான் உணர்வுபூர்வமாக இருந்தாலும் அரசியல் ரீதியில் நாங்கள் ஏமாற்றப்பட்டு விடுவோம்.

எனவே அரசியல் என்ற விடயத்தை தமிழ் மக்கள் கவனிக்காமல் விடுவதென்பது மிகப் பெரும் வரலாற்றுத் தவறாகும்.

அரசியலில் ஈடுபடாமல் இருப்பதென்பது வேறு. அரசியலை வழிப்படுத்து; நெறிப்படுத்துவதென்பது வேறு.

தமிழகத்தில் தந்தை பெரியார் அரசியலில் ஈடுபடவில்லை. ஆனால் தமிழகத்தின் ஆட்சியை யார் செய்ய வேண்டும் என்பதைப் பெரியாரே தீர்மானித்தார்.

இதுபோலத்தான் தமிழ் மக்கள் பேரவை அரசியலில் ஈடுபடாமல் விட்டாலும் தமிழ் மக்களுக்காக; தூய்மையான, நேர்மையான, விசுவாசமான அரசியலை நிர்ணயிக்கின்ற பெரும் பணியை தமிழ் மக்கள் பேரவை செய்ய வேண்டும்.

அதற்கான வழிமுறைகள் பற்றி எங்கள் தமிழ் மக்களுடன் கூடி ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும்.

# அரசியல் கைதிகள் விடுதலை தாமதித்தால் தமது போராட்ட வடிவம் மாறும்!

## வட மாகாண பொது அமைப்புக்கள் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய கூட்டமைபபின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் கைதிகள் விடயத்தில் ஒத்திவைப்புப் பிரேரணையுடன் மட்டும் நின்று விடாமல் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்தோ அல்லது வேறு காத்திரமான போராட்டங்களினூடாகவோ அரசியல் கைதிகளின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை பெற்றுத்தர வேண்டும் என வடக்கு மாகாணபொதுஅமைபபுக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் வலியுறுத்தியுள்ள நிலையில், இனியும் அரசியல் கைதிகளின் விடுதலை தாமதிக்குமானால் தமது போராட்ட வடிவங்கள் மாறும் எனவும் எச்சரிக்கை செய்துள்ளனர். இது தொடர்பில் அந்த அமைப்புக்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது.

அரசியல் கைதிகளினுடைய விடுதலை தொடர்பாகவும் - வவுனியாவிலிருந்து அநுராதபுரத்துக்கு மாற்றப்பட்ட வழக்குகளை மீண்டும் வவுனியாவுக்கு மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தும் அரசியல் கைதிகள் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றனர். இதற்கு ஆதரவாக- பொது அமைப்புக்கள் கூடி வடமாகாணம் தழுவிய ரீதியில் கதவடைப்புப் போராட்டத்தையும் - வடமாகாண ஆளுநர் அலுவலகம் முன் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தையும் - மறுநாள் ஜனாதிபதியின் யாழ்ப்பாண வருகைக்கு எதிராக கறுப்புக் கொடிப் போராட்டத்தையும் முன்னெடுத்திருந்தோம்.

இத்தகைய போராட்டங்களே - எதிர்க்கட்சித் தலைவருக்கு பாராளுமன்றத்தில் ஒரு ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொண்டு வரும் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருந்தது. இவ்வளவும் நடைபெற்றும் கூட - அரசியல் கைதிகளின் நியாயமான கோரிக்கைகள் தொடர்பாக - எவ்வித சாதகமான பதில்களும் அரசு தரப்பால் வழங்கப்படவில்லை. ஆனால் - இதேசமயம் தமிழ் மக்களை ஏமாற்றுவதை நோக்கமாகக் கொண்டு பல்கலைக்கழக மாணவர்களுடனும் - அரசியல் கைதிகளின் உறவினர்களுடனும் - ஜனாதிபதி இரு சந்திப்புக்களை நடத்தியிருந்தார். இச் சந்திப்புக்கள் திருப்திகரமானதாக அமைந்திருக்கவில்லை எனக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தனர்.

அரசியல் கைதிகளுடைய விடுதலை தொடர்பாக - வடமாகாணத்தைச் சேர்ந்த 35ற்கும் மேற்பட்ட பொது அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் இணைந்து பாரிய போராட்டங்களை முன்னெடுத்திருந்தும் கூட - அவர்கள் சார்ந்த பிரதிநிதிகளை சந்திப்பதற்கு மாறாக - ஏனைய சிலரை அழைத்துப் பேசியதானது அரசியல் கைதிகளின் பிரச்சினையை திசை திருப்பும் மற்றும் நீர்த்துப்போகச்செய்யும் முயற்சியேயாகும். ஜனாதிபதி பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பாகவும் - ஏற்கெனவே பல வாக்குறுதிகளை அளித்திருந்தாலும் - எந்த வாக்குறுதிகளும் இதுவரை நிறைவேற்றப்பட்டதாக இல்லை. அதே நிலைமைதான் அரசியல் கைதிகள் தொடர்பாகவும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணம் வருகை தரும்போது - அங்கு போராட்டத்தில் ஈடுபட்டிருந்த எங்களை "வாருங்கள் பேசித் தீர்க்கலாம்" என அழைத்த ஜனாதிபதி - பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அரசியல் கைதிகளின் உறவினர்களுடன் பேசியும் ஆக்கபூர்வமான பதிலெதனையும் வழங்கவில்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும். ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் நிலைப்பாடுகளைப் பார்க்கின்றபோது - அரசியல் கைதிகளின் விடயமாயினும் சரி - ஏனைய விடயங்களாயினும சரி தொடர்ச்சியான போராட்டங்களும் அதனூடாக ஏற்படுத்தப்படும் அழுத்தமும் தான் தமிழ் மக்களின் கோரிக்கைகள் தொடர்பாக இவர்களை சிந்திக்க வைக்கும் என நம்புகின்றோம் என்றுள்ளது. (மு)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**சாந்தி முகூர்த்தம் என்றால் என்ன?**

அன்னையின் வயிற்றில் இருந்து வெளிவந்த ஒரு சிசுவானது பூவுலகில் தனக்கென்று ஒரு இடத்தைப் பிடிக்க உடலாலும் உள்ளத்தாலும் பலவித பிரச்சினைகளுக்கு உட்படுகிறது. ஊழ்வினையில் செய்த புண்ணியத்தால் நல்ல பெற்றோரைப் பெற்ற குழந்தைகள் நல்லமுறையில் திருமணமாகி உள்ளத்திற்கும் உடலுக்கும் சாந்தியைத் தேடிக்கொள்கிறார்கள். உடல் சாந்தி நிலையை அடைய குறிக்கப்படும் நேரமே சாந்தி முகூர்த்தமாகும். (தொடரும்)




## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

உன்னவன் நாராயணனோ, அங்கே சேஷாத்ரியில் இன்னொரு பெண்ணை இல்லத்தரசியாக்கி சிருங்கார வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறான். உன்னைப் பார்த்து அழுவதா, சிரிப்பதா என்றே தெரியவில்லை என்று கள்ளச் சிரிப்புடன் கலகமூட்டினார்.

திருமகள் திகைத்தாள். சீற்றத்துடன் சேஷாத்ரி வந்து சேர்ந்தாள்.

நாராயணனுக்கு அருகில் ஒரு நங்கையைப் பார்த்தாள். அவள் எதிர்சென்று நின்றான் வார்த்தைக் கனல்களைக் கக்கினாள் ஸ்ரீநிவாசனையும் சீற்றத்துடன் ஏசினாள். நாராயணன் மதுரமான குரலில் மறுமொழி கூறினான். (தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ். பிரதேசத்தில் வாதரவத்தை, பெரிய பொக்கணை, வவுனியா பிரதேசத்தில் சாளம்பைக் குளம் பிரதேசம மன்னார் பிரதேசத்தில் தாராபுரம், துருக்கி நகர், திருக்கேதீஸ்வரம் பிரதேசம் ஆகிய பிரதேசங்களில் மின் தடைப்படும். (இ-9)

## உலக மார்பக புற்றுநோய் விழிப்பூட்டல் மாதம் - ஐப்பசி 2017

மார்பகத்தின் வெளித்தோற்றத்தில் தோன்றும் அசாதாரண மாற்றங்களை அறிந்து கொள்ளுங்கள். அம்மாற்றங்கள் உங்களில் தென்பட்டால் உடன் வைத்திய ஆலோசனை பெற்றுக் கொள்ளுங்கள்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை,
யாழ்ப்பாணம் மாநகர சபை

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## உணவும் மருந்தும்



நீ சீரணிக்கும் அளவிற்குள்ளாக உணவு உட்கொண்டால் உணவை நீ சீரணிக்கிறாய். அதிகமாக உட்கொண்டால் உணவு உன்னைச் சீரணிக்கும்".

எனவே, சுத்தமானதும், எளிமையானதும், சத்து நிறைந்ததுமான உணவு வகை அன்றாடம் நமது உடலுக்குத் தேவை. காரம், புளிப்பு, உப்பு, சர்க்கரை இவற்றையும் மிதமாகக் கொள்ளவேண்டும்.

உணவில் அளவும் த்ரமும், முறையும் தவறினால், நோய்கள் உண்டாகும். அவ்வப்போது தக்கபடி மருந்து எடுத்துக் கொண்டால் சரியாகி விடும் என்று இலேசாக நினைப்பதும் சரியன்று.

மருந்து என்றால் என்ன? மனிதன் ஆற்றும் தவறான செயல்களால் நோய் உண்டாகிறது. அந்நோய்களைச் சமன் செய்ய, ஏற்ற ஆற்றல் உடலிலேயே இயற்கை அமைத்திருக்கிறது. ஒரு சமயம் உடலில் நோய் தீர்க்கும் ஆற்றல் வலுவற்றதாக இருந்தால், அந்த ஆற்றலை ஊக்கி விட ஏற்ற பொருட்களே மருந்து ஆகும். உயிர் ஆற்றலுக்கு உந்து சக்தி என்பது வழக்கு.

அவ்வாறான உந்து ஆற்றலுக்குத் துணையாய் உந்தும் ஆற்றலைத் தான் மருந்து என்று கூறுகிறோம். மருவி வந்த மகளை மருமகள் என்பது போல, மருவி வந்த மகனை மருமகன் என்பது போல, மருவி உந்து ஆற்றலை மருந்து என்று வழங்குகிறோம். மருந்தின் உபயோகம் வேறு வழியின்றி ஒரு குறுகிய காலத்தில் சிறு அளவில் மட்டும் தான் பொருத்தமானது. ஏனெனில் சில மருந்து வகை, ஒரு நோயைக் குணப்படுத்தி வேறொரு நோயை உண்டுபண்ணக் கூடியதே. இதைத் தவிர்க்க இயற்கையான அறிவின் வழி முன் உண்ட உணவு முற்றிலும் செரிமானமான பின்னரே அடுத்த உணவு கொள்ளலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைலோ கிண்ண கால்பந்தாட்டம்

# இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகிய அணிகள்





நெஸ்லே லங்கா நிறுவனத்தின் மைலோ குழுமமும், யாழ் மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலகங்கள் இணைந்து யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள கால்பந்தாட்ட கழகங்கள் மற்றும் பாடசாலை அணிகளுக்கிடையில் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டி யொன்றை நடத்தி வருகின்றன.

2013*ஆம் ஆண்டு ஆரம்பிக் கப்பட்ட இந்தத் தொடர் இந்த வருடம் 4 ஆவது வருடமாக நடை பெறு கின்றது.

கிளிநொச்சி - யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் 11 இடங்களில் இந்தச் சுற்றுப்போட்டியின் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. ஒவ் வொரு பிரதேசங்களில் நடைபெறும். போட்டிகளிலிருந்து. யாழ்ப்பாணம் -, கிளிநொச்சி மாவட்டங்களை உள் ளடக்கிய வகையில் நடை பெற வுள்ள இறுதிச் சுற்றுக்கு அணிகள் தெரிவாகவுள்ளன. கழகங்களுக் கிடையிலான இறுதிச் சுற்றில் 20 அணிகளும். பாடசாலைகளுக்கான இறுதிச் சுற்றில் ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் 10 அணிகளும் பங்கு பற்றியுள்ளன. அந்தவகையில் இதுவரையில் நடைபெற்று முடிந்த போட்டிகளின் அடிப்படையில் இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகிய அணிகளின் விபரங்கள் வருமாறு.

**மருதங்கேணி பிரதேச அணிக ளில்" பாரதி-சென்.மேரிஸ் அணிகள் சுப்பர்-20 அணிகளுக்குள் நுழைவு**

மருதங்கேணிப் பிரதேசத்தி லுள்ள கழகங்களுக்கிடையிலான போட்டிகள் உதயசூரியன் விளை யாட்டுக் கழக மைதானத்தில் நடை பெற்றது.

முதற்சுற்று ஆட்டங்களில், கணேசானந்தா விளையாட்டுக் கழகம் 4:3 என்ற கோல்கள் கணக் கில் அருணோதயா விளையாட்டுக் கழகத்தையும். சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம் 4:3 என்ற கோல்கள் கணக்கில் சக்திவேல் விளையாட்டுக்கழகத்தையும் வென் றன. செந்தமிழ் விளையாட்டுக் கழகம். எதிரணியான தாளையடி சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் வருகை தராமையால் வெற்றி பெற்றது. பாரதி விளை யாட்டுக்கழ கம். உதயசூரியன விளையாட்டுக்க ழகம். வெள்ளி நிலா. சென். செபஸ் ரியன். சென்.பிலிப்னேரியஸ் அணி கள் நேரடியாக இரண்டாம் சுற்றில் இருந்து பங்குபற்றின. இருந்தும், இவற்றில் சென்.பிலிப்னேரியஸ் அணி வருகை தரவில்லை.

இரண்டாம் சுற்றில், பாரதி விளையாட்டுக்கழகம் 3:1 என்ற கோல்கள் கணக்கில் கணேசா னந்தா விளையாட்டுக்கழகத்தை யும், செந்தமிழ் விளையாட்டுக் கழகம் 2:0 என்ற கோல்கள் கணக் கில் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தையும், சென்.செபஸ்ரியன் விளையாட்டுக்கழகம் 3:0 என்ற கோல்கள் கணக்கில் வெள்ளிநிலா விளையாட்டுக்கழகத்தையும் வென் றன. சென்.பிலிப்னேரியஸ் அணி வருகை தராமையால், சென். மேரிஸ் அணி வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

மூன்றாவது சுற்றில், பாரதி அணி. 1:0 என்ற கோல் கணக்கில செந்தமிழ் அணியையும், சென். மேரிஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் சென்.செபஸ்ரியன் விளையாட்டுக்கழகத்தையும் வென் றன.

பாரதி மற்றும் சென்.மேரிஸ் அணிகள், யாழ்ப்பாணம் - கிளி நொச்சி மாவட்டங்களின் கழக ங்களை உள்ளடக்கிய வகையில் நடைபெறவுள்ள சுப்பர் - 20 அணி களுக்குள் உள்நுழைந்துள்ளன.

**பூநகரிப் பிரதேச அணிகளில், ஜெகமீட்பர்,சென்.ஆன்ஸ், நாச் சிக்குடா சென்.மேரிஸ் மற்றும் சென்.ஜேம்ஸ் அணிகள் சுப்பர் - 20 க்குள் நுழைந்தன.**

பூநகரிப் பிரதேச கழகங்களுக் கிடையிலான போட்டி முழங்காவில் விநாயகர் மைதானத்தில் நடை பெற்றது.

முதற்சுற்று ஆட்டங்களில், அன்பு ஐக்கியம் விளையாட்டுக்கழகம் 3:0 என்ற கோல்கள் கணக்கில் கரடிக் குன்று விளையாட்டுக் கழகத்தை யும். கலைஒளி விளையாட்டுக் கழகம் 2:0 என்ற கோல்கள் கணக் கில் சென்.சிற்றி விளையாட்டுக் கழகத்தையும் வென்றன. செந்த மிழ், இரணைதீவு சென்.மேரிஸ், நாச்சிக்குடா சென்.மேரிஸ், சென். ஜேம்ஸ் அணிகளுக்கான எதிர ணிகள் வருகை தராமையால், அந்த நான்கு அணிகளும் முதற் சுற்றில் வெற்றிபெற்ற அணிகளாக அறிவிக்கப்பட்டன. இதனைவிட ஜெகமீட்பர், ஜின்னா, இளந்தளிர், சென்.ஆன்ஸ், சென்.செபஸ்ரியன், இரணைமாதா நகர் சென்.மேரிஸ், ஜொலிபோய்ஸ், ஐயனார், நாச்சிக் குடா சென்.மேரிஸ், செந்தாரகை, சென்.அன்ரனீஸ், விநாயகர் அணி கள் நேரடியாக இரண்டாம் சுற்றில் இருந்து போட்டிகளில் பங்குபற்றின. அதிலும், சென்.செபஸ்ரியன், சென். அன்ரனீஸ், ஐயனார் அணிகள் வருகை தரவில்லை.

இரண்டாம் சுற்றில், ஜெகமீட்பர் அணி 2:1 என்ற கோல்கள் கணக் கில் அன்பு ஐக்கியம் அணியையும், இளந்தளிர் அணி, 4:2 என்ற கோல் கள் கணக்கில் ஜின்னா அணி யையும், சென்.ஆன்ஸ் அணி, 1:0 என்ற கோல் கணக்கில் செந்தமிழ் அணியையும், கலை ஒளி அணி, 3:2 என்ற பனால்ட்டி உதையின் மூலம் ஜொலிபோய்ஸ் அணியை யும், சென்.ஜேம்ஸ் அணி, 1:0 என்ற கோல் கணக்கில் செந்தாரகை அணியையும் வென்றன.

இரணைமாதாநகர் சென். மேரிஸ், நாச்சிக்குடா சென்.மேரிஸ், விநாயகர் அணிகளுக்கான எதிர ணிகள் வருகை தராமையால் அந்த அணிகள் இரண்டாம் சுற்றில் வெற்றிபெற்ற அணிகளாக அறி விக்கப்பட்டன.

மூன்றாவது சுற்றில், ஜெகமீட்பர் அணி, 3:2 என்ற பனால்ட்டி உதை யின் மூலம் இளந்தளிர் அணி யையும், சென்.ஆன்ஸ் அணி, 1:0 என்ற கோல் மூலம் இரணை மாதா நகர் சென்.மேரிஸ் அணியையும், நாச்சிக்குடா சென்.மேரிஸ் அணி, 1:0 என்ற கோல் கணக்கில் கலைஒளி அணியையும், சென்.ஜேம்ஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் விநாயகர் அணியையும் வென்றன. மூன்றாம் சுற்றில் வெற்றிபெற்ற நான்கு அணிக ளும், கிளிநொச்சி - யாழ்ப்பாணம் மாவட்டக் கழகங்களை உள்ளட க்கிய வகையில் நடைபெறவுள்ள சுப்பர் - 20 அணிகளுக்குள் உள்நுழைந்தன.

**பூநகரிப் பிரதேச பாடசாலை 16 வயதுப்பிரிவு அணிகளில், சிவநகர்- முழங்காவில் அணிகள் சுப்பர்- 10 அணிகளுக்குள் உள்நுழைந்தன.**

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 16 வயதுப்பிரிவு பாடசாலை அணிகளுக்கிடையிலான போட்டி கள் முழங்காவில் மகா வித்தியா லயத்தில் நடைபெற்றது.

முதற்சுற்று ஆட்டங்களில், வேரவில் இந்து மகா வித்தியாலய அணி, 1:0 என்ற கோல் கணக்கில், தர்மபுரம் மத்திய கல்லூரி அணி யையும், ஸ்ரீ விக்னேஸ்வரா கல்லூரி அணி 5:4 என்ற கோல்கள் கண க்கில் பிரமந்தனாறு மகா வித்தி யாலய அணியையும், இர ணை தீவு அரசினர் தமிழ்க்கலவன் பாட சாலை அணியினர், 4:2 என்ற கோல்கள் கணக்கில் வட்டக்கச்சி மத்திய கல்லூரி அணியினரையும், கிளிநொச்சிமகா வித்தியாலய அணி யினர், 2:1 என்ற கோல்கள் கணக் கில் திருவையாறு மத்திய மகா வித்தியாலய அணியையும் வென் றன. முழங்காவில் மகா வித்தியா லய அணி, எதிரணியான கிளிநொ ச்சி இந்துக் கல்லூரி வராமையால் வெற்றிபெற்றதுடன், சிவநகர் அரசி னர் தமிழ் கலவன் பாடசாலை, வலைப்பாடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மற்றும் உருத்திரபுரம் மகா வித்தியாலய ஆகிய அணிகள் நேரடியாக இரண்டாம் சுற்றிலிருந்து போட்டிகளில் பங்குபற்றின.

இரண்டாவது சுற்றில், சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணி, 3:2 என்ற கோல்கள் கண க்கில் வேரவில் அணியையும், இரணைதீவு அரசினர் தமிழ் கல வன் பாடசாலை, 1:0 என்ற கோல் கணக்கில் ஸ்ரீ விக்னேஸ்வரா கல் லூரி அணியையும், முழங்காவில் மகா வித்தியாலய அணி 2:1 என்று, பனால்ட்டி உதையில் உருத்திரபுரம் மகா வித்தியாலய அணியையும், கிளிநொச்சி மகா வித்தியாலய அணி, 4:3 என்ற பனால்ட்டி கோல் கள் மூலம் வலைப்பாடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அணி யையும் வென்றன.

மூன்றாவது சுற்றில் சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணி. பனால்ட்டி உதையில் 3:2 என்ற கோல்கள் கணக்கில் இரணைதீவு அரசினர் தமிழ் கல வன் பாடசாலை அணியை வென் றது. அதேபோல் முழங்காவில் மகா வித்தியாலய அணி. 2:1 என்ற கோல்கள் கணக்கில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணியையும் வென்றன.

இந்த இரண்டு அணிகளும், கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவ ட்டங்களை உள்ளடக்கிய வகையில் நடைபெறும், 16 வயதுப்பிரிவின ருக்கான சுப்பர் 10 அணிகளுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளன.

**கிளிநொச்சி பிரதேச அணிகளில், லக்கிஸ்ரார் - திருநகர் அணிகள் சுப்பர் - 20 அணிகளுக்குள் நுழைந்தன.**

கிளிநொச்சி பிரதேச அணி களுக்கிடையிலான போட்டி கனக புரம் விளையாட்டுக்கழக மைதா னத்தில் நடைபெற்றது.

முதற்சுற்று ஆட்டங்களில், கனக புரம் விளையாட்டுக்கழகம் 2:0 என்ற கோல்கள் கணக்கில் விளை பூமி விளையாட்டுக் கழகத்தையும், உருத்திரபுரம் இளைஞர் விளை யாட்டுக்கழகம் 4:2 என்ற கோல்கள் கணக்கில் குறிஞ்சி விளையாட்டுக் கழகத்தையும், லக்கி ஸ்ரார் விளை யாட்டுக்கழகம் 3:0 என்ற கோல்கள் கணக்கில் நெய்தல் விளையாட்டுக் கழகத்தையும், சந்திரன் விளை யாட்டுக்கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் பளையாடியன் விளை யாட்டுக் கழகத்தையும், திருநகர் விளையாட்டுக்கழகம் 1:0 என்ற கோல்கள் கணக்கில் திருவையாறு விளையாட்டுக் கழகத்தையும், கண்ணன் விளையாட்டுக் கழகம் 3:0 என்ற கோல்கள் கணக்கில் சுடர்ஒளி விளையாட்டுக்கழகத் தையும், ஜெயந்திநகர் விளை யாட்டுக் கழகம் 3:2 என்ற கோல்கள் கணக்கில் கலைமகள் விளை யாட்டுக்கழகத்தையும் வென்றன.

இரண்டாம் சுற்று ஆட்டங்களில், கனகபுரம் விளையாட்டுக்கழகம் 2:0 என்ற கோல்கள் கணக்கில் விடிவெள்ளி விளையாட்டுக் கழகத் தையும், லக்கிஸ்ரார் விளை யாட்டுக்கழகம் 3:0 என்ற கோல்கள் கணக்கில் உருத்திரபுரம் இளைஞர் அணியையும், திருநகர் விளை யாட்டுக்கழகம். 2:0 என்ற கோல்கள் கணக்கில் சந்திரன் விளையாட்டுக் கழகத்தையும், ஜெயந்திநகர் விளை யாட்டுக்கழகம் 3:0 என்ற கோல்கள் கணக்கில் கண்ணன் விளையாட் டுக் கழகத்தையும் வென்றன.

மூன்றாம் சுற்று ஆட்டங்களில், லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழகம் 3:2 என்ற கோல்கள் கணக்கில் கனகபுரம் அணியையும், திருநகர் விளையாட்டுக்கழகம் 4:2 என்ற கோல்கள் கணக்கில் ஜெயந்தி நகர் விளையாட்டுக் கழகத்தையும் வென்றன.

மூன்றாம் சுற்றில் வெற்றிபெற்ற இரண்டு அணிகளும், கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் நடைபெற வுள்ள, சுப்பர் - 20 அணிகளுக்குள் உள்நுழைந்துள்ளன. (க)

## சென்.அன்ரனீஸ் உதைபந்தாட்டம்

# இமையாணன் மத்தி- அன்ரனீஸ்

### இன்று பலப்பரீட்சை





மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 35 வயதுக்கு மேற்பட்டோருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் இன்று (23.10.2017) திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் இமையாணன் மத்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

(க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் கைதிகளுக்காக...

கலைக்கழக மாணவர்களால் மேற்கொள்ளப்படும் மாபெரும் கையெழுத்துவேட்டை போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக யாழ்ப்பாண மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்கள் இணைந்து அறிவிப்பு செய்துள்ளன. இது தொடர்பில் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

**உடனடியாக நிறைவேற்ற வேண்டிய கோரிக்கைகள்**

■ அநுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணா விரதபோராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் அரசியல்கைதிகளின் வழக்குகள் அனுராதபுரநீதி மன்றத்திலிருந்து உடனடியாக வவுனியா நீதி மன்றத்திற்கு அல்லது யாழ்ப்பாண நீதிமன்றத்திற்கு மாற்றப்படல் வேண்டும்.

■ உடனடியாக அனைத்து அரசியல்கைதிகளையும்பாரிய குற்றச்செயல்களுடன் (கொலை, களவு, கற்பழிப்பு, கடத்தல்) தொடர்புடைய குற்றவாளிகளுடன் தடுத்து வைப்பதை நிறுத்தி அவர்களிலிருந்து வேறுபடுத்தி பாதுகாப்பான சிறைகளில் தங்குவதற்கு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**துரிதமாக மேற்கொள்ள வேண்டிய கோரிக்கைகள்**

■ சிறையில் அனைத்து தமிழ் அரசியல் கைதிகளினதும் வழக்குகள் உடனடியாக விசாரணைக்கு கொண்டு வரப்பட வேண்டும்.

■ ஏற்கெனவே இக் கைதிகள் பல வருட காலமாககிட்டத்தட்ட 10-15 வருடங்களுக்கு மேலாக சிறைத் தண்டனையையும், சிறைக்குள் பல சித்திரவதைகளையும் தண்டனையாக அனுபவித்தமை காரணமாக எந்த வித நிபந்தனைகளுமின்றி துரித கதியில் "நிபந்தனைகளுமின்றி விடுதலை" செய்யப்பட்டு சமூகத்துடன் இணைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

■ ஏற்கெனவே வடக்கு கிழக்கு மாகாணங்களில் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு சிறந்த வாழ்வாதாரம் மற்றும் தொழில்வாய்ப்பு என்பவற்றில் அதிக கூடுதலான கவனம் செலுத்தப்பட வேண்டும்.

குறிப்பு

■ புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட போராளிகளில் அங்கவீனராக இனங்காணப்பட்டவர்களுக்கு மிக விசேடமானதொழில் வாய்ப்பு மற்றும் வாழ்வாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(மு-4,9,281)

## உள்ளூராட்சி சபை...

பதில் காணப்படும் தாமதம், நுவரெலியா மாவட்டத்தில் பிரதேச சபைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் விடயம் மற்றும் வேட்புமனு கோரப்பட்டு பின்னர் தேர்தல் ஒத்திவைக்கப்பட்ட புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுரைப்பற்று ஆகிய பிரதேச சபைகள் தொடர்பாக புதிய திருத்தங்களுக்கான நடவடிக்கைகள் ஆகிய விடயங்களை அடிப்படையாக கொண்டே இந்த தேர்தல் தாமதமாகலாம் என அறியமுடிகின்றது.

ஏற்கெனவே, ஜனவரி மாதத்தில் தேர்தலை நடத்த திட்டமிட்டிருந்த போதிலும், கடந்த 19ஆம் திகதிக்குள் உள்ளூராட்சி சபைகளுக்கான உறுப்பினர்களின் எண்ணிக்கை தொடர்பில் அமைச்சர் அறிவித்திருக்க வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் அறிவித்திருந்தார்.

எனினும், இதுவரையில் வர்த்தமானி அறிவித்தல் வெளியாகவில்லை.

அத்துடன், நுவரெலியா மாவட்டத்தில் பிரதேச சபைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் விடயம், புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுரைப்பற்று ஆகிய பிரதேச சபைகள் தொடர்பாக புதிய திருத்தங்களுக்கான நடவடிக்கைகள் ஆகியவற்றை முன்னெடுப்பதற்கு சில காலங்கள் தேவைப்படுவதால் தேர்தல் ஏப்ரல் மாதம் வரை ஒத்தி வைக்கப்படலாம்.

நாடாளுமன்றில் கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன ஜனவரி மாதம் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படுமா என பிரதமரிடம் கேள்வியெழுப்பிய போது, அதற்கு பிரதமர் உறுதியான பதில் வழங்காமையும் குறிப்பிடத்தக்கது. (மு)

## சடலத்தை பார்வை...

அரியாலை கிழக்கு உதயபுரம் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்து, சிகிச்சை பலனின்றி உயிரிழந்த டொன் பொஸ்கோ ரிக்மனின் உடலை யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் எஸ்.சதீஸதரன் யாழ் போதனா வைத்தியசாலை பிரேத அறையில் நேற்று இரவு பார்வையிட்டார்.

மேலும் துப்பாக்கிச்சூடு இடம்பெற்ற இடமான மணியந்தோட்டம் உதயபுரம் முதலாம் குறுக்கு தெருவுக்கும் சென்று சம்பவ இடத்தினை பார்வையிட்டிருந்தார். (மு-9)

## மோ.சைக்கிள்கள்...

கிள்கள் பெற்றோல் ஊற்றி எரிக்கப்பட்டுள்ளதுடன் வாள்கள் மற்றும் கொட்டன்களை கொண்டு அச்சுறுத்திய சம்பவம் ஒன்று நேற்றிரவு இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

நேற்றிரவு 7.30 மணியளவில் கந்தசஷ்டி விரத காலமாகையால் ஆலயத்தில் இளைஞர்கள் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர். அவர்களது மோட்டாார் சைக்கிள்கள் வெளியே நின்றன. இந்நிலையில் அப்பகுதிக்கு வந்த மர்மக் கும்பல் மோட்டார் சைக்கிள்களை எரியூட்டியதுடன் வாள்களால் வெட்டியும் அட்டகாசத்தில் ஈடுபட்ட பின் அக் குழு தப்பிச் சென்றது. இக்குழுவினர் இதற்கு சற்று நேரம் முன் சுதுமலை தலவாச் சந்திப் பகுதியிலும் இளைஞர்களை அச்சுறுத்திவிட்டே வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்று முன்தினம் கொக்குவில் சந்திப்பகுதியிலும் வாள்வெட்டில் மர்மக் கும்பல் ஒன்று ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (மு-1)

## தீய சக்திகளை...

என அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார்.

மாநாயக்க தேரர்களை நல்லாட்சிக்கு எதிராக செயற்பட வைக்கவே ஒருசிலர் முயற்சித்து வருகின்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

புதிய அரசியலமைப்பு குறித்து பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் அடுத்தகட்ட செயற்பாடுகள் குறித்து வினவிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். (மு)

(மேலும் ஒரு செய்தி 16ஆம் பக்கத்தில்...)

## சுன்னாகத்தில்...

பேருந்தும் (768) மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் படுகாயம் அடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை விபத்திற்குள்ளான குறித்த மோட்டார் சைக்கிளில் வயதான முதியவர் ஒருவரும் பயணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த முதியவர் சிறிய காயங்களுக்குள்ளான நிலையில் யாழ் போதானா வைத்தியசாலையில் அனும்திக்கப்பட்டுள்ளார்.

எனினும் விபத்தில் சிக்கிய தனியார் பேருந்தின் முன்பக்க கண்ணாடி உடைந்துள்ளதாகவும், பேருந்தில் பயணித்தவர்களுக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (மு)

## கையூட்டல் பெற்ற பொலிஸார் இருவர் கைது!

(கொழும்பு)

2 ஆயிரம் ரூபா கையூட்டல் பெற்ற பொலிஸ் கான்ஸ்டபில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அநுராதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போக்குவரத்து பிரிவில் பணியாற்றியவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் பணியில் ஈடுபட்டிருந்த வேளை கையூட்டல் பெற்றதாக முறைப்பாடு ஒன்று கிடைத்ததனையடுத்தே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதி வழங்கியுள்ளது.(மு)

# அரசியல் கைதிகளுக்காக கண்டன நடைபவனி

(மட்டக்களப்பு)

தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கோரி நடைபவனி ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த நடைபவனி இன்று காலை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படவுள்ளது.

கவன ஈர்ப்பு நடைபவனி காலை 08 மணிக்கு கிழக்குப்பல்கலைக்கழக முன்றலில் ஆரம்பமாகி செங்கலடி பதுளை சந்திவரை சென்று மீண்டும் பல்கலைக்கழகத்தை வந்தடையவுள்ளது.

இந்த எதிர்ப்பு நடவடிக்கைக்கு மாணவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் ஆசிரிய சங்கங்கள், அரசியல் கைதிகளின் உறவினர்கள், சிவில் அமைப்புக்கள் அனைவரையும் ஒத்துழைப்பு வழங்குமாறு கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீட சங்கத்தின் செயலாளர் என்.பவித்ராஜ் அழைப்பு விடுத்துள்ளார்.

அத்துடன் அரசியல் கைதிகளின் கோரிக்கையை நிறைவேற்றுமாறு வலியுறுத்தி அரசாங்க அதிபர் காரியாலயத்திற்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது.

அநுராதபுரம் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்ட தமது வழக்குகளை மீண்டும் வவுனியா நீதிமன்றத்திற்கு மாற்றுமாறு கோரி அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மூன்று அரசியல் கைதிகள் கடந்த 26 நாட்களாக உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-281)

# நான் ஒப்பமிட மாட்டேன் சபாநாயகர் உறுதியளிப்பு

(கொழும்பு)

நாட்டை பிரிக்கும், நாட்டை துண்டாடும், பௌத்த மதத்துக்கு அல்லது வேறு சமயங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் அமைந்த எந்தவொரு அரசியலமைப்பும் சட்ட மாக்கப்படுவதற்கு தேவையான சபாநாயகர் ஒப்பத்தை தான் ஒரு போதும் இடமாட்டேன் என சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்று மீரிகம தேவமாதா தேவாலயத்தில் இடம்பெற்ற நூற்றாண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் சபாநாயகர் இதனைக் கூறியுள்ளார்.

'நான் பாராளுமன்றத்தில் சபாநாயகராக உள்ளேன். இதுவரை புதிய அரசியல் யாப்பைக் கண்டதில்லை. அப்படியொன்றை அறியவும் இல்லை. எந்தவொருவருக்கும் யோசனைகளை முன்வைக்க முடியும். பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் முடியும். சிலவேளை இந்த யோசனைகள் நாட்டைப் பிரிக்கும், நாட்டைத் துண்டாடும் யோசனைகளாகவும் இருக்கலாம். எதுவாக இருந்தாலும் அது அரசியலமைப்பாக ஏற்றுக் கொள்ளப்படுவது சபாநாயகரின் இறுதி ஒப்பத்தின் பின்னரே யாகும் எனவும் சபாநாயகர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (மு)

# அனுமதிப்பத்திரமின்றி பலகை கொண்டு சென்றவர் கைது!

(யாழ்ப்பாணம்)

அனுமதிப்பத்திரமின்றி மௌவுக்கனி பலகையை கொண்டு சென்ற நபர் இளவாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் அவர் கொண்டு சென்ற பலகைகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இளவாலை பிரதேசத்தில் இருந்து கடந்த 20ஆம் திகதி கரவெட்டியை சேர்ந்த நபர் ஒருவர் வாகனம் ஒன்றில் 6 அடி நீளமும், 12 அடி அகலமும் உடைய 19 மௌவுக்கனி பலகைகளை ஏற்றிக்கொண்டு சென்றுள்ளார். அவரை இடைமறித்து சோதனை மேற்கொண்ட பொலிஸார் இவர் அனுமதிப் பத்திரம் இன்றி பலகைகளை கொண்டு சென்றதை கண்டுபிடித்துள்ளனர்.

உடனடியாக கைது செய்யப்பட்ட அவர் விசாரணைகளின் பின் அன்றைய தினம் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு எதிராக எதிர்வரும் புதன் கிழமை மல்லாகம் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது. (மு-9,104)

# முல்லை உள்ளூராட்சி மன்றங்களுக்கு புதிய வேட்பு மனுக்கள் கோரப்படவுள்ளன

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் தேர்தல் ஒத்திவைக்கப்பட்ட இரண்டு உள்ளூராட்சி மன்றங்களுக்கும் புதிய வேட்பு மனு கோரப்பட்டு தேர்தல் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவின் கரைதுறைப் பற்று மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் மிக நீண்டகாலமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது

இந்நிலையில் புதிய தேர்தல் திருத்தச் சட்டம் மூலமாக உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதாயின் அதற்கு முன்னதாக வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ள புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப் பற்று பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெற வேண்டும்.

எனினும் குறித்த வேட்புமனுவில் கைச்சாத்திட்டுள்ளவர்களில் பலர் தற்போது கட்சி மாறியுள்ளார்கள்.

35 வயதுக்குக்கீழ் வேட்பாளர்களாக உள்வாங்கப்பட்டவர்கள் அந்த வயதெல்லையைக் கடந்து விட்டார்கள்.

இவ்வாறான சிக்கல்களால் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப் பற்று பிரதேச சபைகளுக்கான முன்னைய வேட்பு மனுக்களை ரத்துச் செய்யவும் புதிய திருத்தச் சட்டத்தின் கீழ் மீண்டும் வேட்புமனுக்களை கோரவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கான நாடாளுமன்ற அனுமதியைப பெற்றுக்கொள்வதற்கான பிரேரணை கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. (மு-281)

## கசிப்பு வைத்திருந்தவர்களுக்கு ரூபா.15 ஆயிரம் தண்டம்

கசிப்பை உடைமையில் வைத்திருந்த இரு நபர்களுக்கு 15000 ரூபா தண்டப் பணம் அறவிட மல்லாகம் நீதவான் நீதிமன்றால் கட்டளையிடப்பட்டுள்ளது.

சுழிபுரம் தெற்கை சேர்ந்த நபர் ஒருவர், கடந்த வாரம் மாதகல் ஜம்புகோளப்பட்டினம் விகாரைக்கு அருகில் 750 மில்லிலீற்றர் கசிப்பை தனது உடமையில் வைத்திருந்த படி நின்றுள்ளார். அப்போது அவரை சோதனை செய்த இளவாலை பொலிஸார் அவர் வைத்திருந்த கசிப்பை கைப்பற்றியுள்ளனர், அதே போன்று கடந்த வாரம் பனிப்புலம் அம்மன் ஆலயத்துக்கு அருகில் 750 மில்லி லீற்றர் கசிப்பை உடமையில் வைத்திருந்த நபர் பொலிஸாரால் சோதனைக்குட்படுத்தப்பட்டு அவர் வைத்திருந்த கசிப்பையும் கைப்பற்றியுள்ளனர்.

இருவருக்கும் வெளிவேறு தினங்களில் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதன் அடிப்படையில் ஒருவருக்கு 10000 ஆயிரம் ரூபாவும், மற்ற நபருக்கு 5000 ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (மு-9-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கிச் சூட்டில்...

குறித்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதுடன் அப்பகுதியில் பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக தெரிய வருகையில், அரியாலை கிழக்கு மணியந்தோட்டம் உதயபுரத்தை சேர்ந்த டொன்பொஸ்கோ ரிக்மன் (வயது 24) இவர் கடற்தொழில் செய்து வருகிறார். நேற்று கடற்தொழிலுக்கு சென்று விட்டு வீடு திரும்பிய பின்னர், அவருடைய நண்பர் ஒருவர் குறித்த நபரை வெளியே அழைத்து சென்றுள்ளார்.

நேற்று பிற்பகல் 2.30 க்கும் 2.45 க்கும் இடைப்பட்ட நேரப்பகுதியில் குறித்த நபரும் அவருடைய நண்பரும் கொழும்புத்துறை சந்திக்கு சென்று தமது மோட்டார் சைகிளுக்கு பெற்றோல் நிரப்பி விட்டு அரியாலை கிழக்கு பக்கமாக சென்றுள்ளனர்.

அப்போது மணியந்தோட்டம்உதயபுரம்முதலாம்குறுக்கு கடற்கரை வீதியில் மோட்டார் சைக்கிளில் நின்றிருந்த இருவர் இவர்களுக்கு எதிரே தமது மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்து நிறுத்தியுள்ளனர். அப்போது இவர்கள் அந்த மோட்டார் சைக்கிளை கடந்து வர முயன்ற போது, மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்த நபர் தனது இடுப்பில் இருந்த கைததுப்பாக்கியை எடுத்து இவர்களை நோக்கி துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு அந்த இடத்தை விட்டு தப்பி சென்றுள்ளனர்.

அப்போது பின்னால் இருந்த ரிக்மனின் இடது தோள்பட்டை பக்கமாக துப்பாக்கி சூடு பட்டு முன்பக்கம் நெஞ்சுப்பகுதி ஊடாக துப்பாக்கி சன்னம் வெளியே வந்துள்ளது. அந்த இடத்திலேயே மயக்கமடைந்த ரிக்மனை சற்றுத்தூரம் சென்று இறக்கி விட்டு குறித்த நண்பர் ஏனையவருக்கு தகவல் சொல்லியுள்ளார். பின்னர் அப்பகுதிக்கு வந்த சிலர் காயமடைந்த ரிக்மனை உடனடியாக யாழ்போதனா வைத்தியசாலையில் கொண்டு வந்து சேர்த்தனர்.

**அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதி**

குறித்த இளைஞனின் வலது பக்க தோள் பகுதியில் துப்பாக்கி சன்னம் பட்டு முன்பக்க மார்புப்பகுதியால் வெளியே வந்திருந்ததுடன், நெற்றிப்பகுதியில் உராய்வுக்காயமும் காணப்பட்டது. அதிகளவான இரத்தம் வெளியேறியமையால் அதி தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

**பொலிஸ் புலனாய்வு துறையினரே சுட்டனர். உறவினர்கள் சந்தேகம்.**

குறித்த இளைஞன் எவருடனும் பிரச்சனைக்கு செல்வதில்லை. றோலர் மீன்பிடி தொழிலை செய்து வருகிறார். சம்பவ தினமும் தொழிலுக்கு சென்று வந்து தான் வீட்டில் நின்றார். அவரது நண்பர் வந்து கூட்டிச்சென்றார். யாருடனும் இவருக்கு பகை இல்லை. ஆனால் சம்பவம் இடம்பெற்ற நேரத்துக்கு அண்மையில் ஒரு பொலிஸ் புலனாய்வாளர், அப்பகுதியில் பல தடவை சென்றதை எமது உறவினர்கள் பலர் கண்டுள்ளார்கள். சம்பவ இடத்துக்கு அண்மையிலும் சிலர் கண்டுள்ளார்கள்.

அந்த புலனாய்வாளரை ஏற்றி வந்தவர் சாதாரண நபர் ஒருவர் தான் அவரை விசாரணை செய்யுங்கள்.சாதாரண நபர்கள் இங்கு கைத்துப்பாக்கி வைத்திருப்பதில்லை. பொலிஸ் துறையை சேர்ந்தவர்களே வைத்துள்ளனர். அவர்களுக்கு தெரியாமல் இந்த சம்பவம் இடம்பெற்றிருக்க வாய்ப்பில்லை என தெரிவித்து வைத்திய சாலையினுள் பொலிஸாரிடம் கடும் வாக்குவாதத்திலும் ஈடுபட்டிருந்தனர்.

**துப்பாக்கி ரவைகளை எடுத்துச்சென்ற இனந்தெரியாத நபர்கள்!**

சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு சோக்கோ பொலிஸார் தடயங்களை பெறச் சென்றிருந்தனர். அப்போது குறித்த இடத்துக்கு பொது மக்கள் வருவதற்கு முன்னர் அப்பகுதியில் ஒரு முச்சக்கர வண்டியில் வந்தவர்கள் துப்பாக்கி ரவைகளை எடுத்துக்கொண்டு வேகமாக சென்றதை தாம் அவதானித்ததாக



அப்பகுதி மக்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

**ஆளை கண்டால் அடையாளம் காட்டுவேன்.**

குறித்த படுகாயமடைந்த இளைஞனுடன் சென்ற அவரது நண்பரை பொலிஸார் யாழ் பொலிஸ் நிலையத்துக்கு கூட்டிச்சென்று தீவிர விசாரணை நடத்தியிருந்தனர். அப்போது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டவர்களை யார் என்று எனக்கு தெரியாது, ஆனால் ஆளை யார் என்று அடையாளம் காட்ட முடியும் என பொலிஸ் விசாரணையில் தெரிவித்தார்.

**பொலிஸார், விசேட அதிரடிப்படை சம்பவ இடத்தில் குவிப்பு**

அப்பகுதியில் உள்ள பொதுமக்கள். கடும் ஆக்ரோசமாக காணப்பட்டதுடன் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டவர்களை உடனடியாக கைது செய்து தண்டிக்கப்பட வேண்டும் என கூறி பெரும் குழப்ப நிலையில் காணப்பட்டனர்.

அப்பகுதியில் மேலும் பதற்ற நிலை காணப்பட்டதால் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலபடுத்தப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணையை நடத்திவருவதாகவும் நேற்றிரவுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (மு-9.4.30)

## ஆபத்தான...

அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 28 நாட்களாக உண்ணாவிரதமிருந்து வரும, தமிழ் அரசியல் கைதிகளின் உடல்நிலை மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்கள் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தொடர்பான வழக்கு, வவுனியா நீதிமன்றத்தில் நடைபெற்று வந்ததுடன், வழக்கு முடிவடையும் தருவாயில் உள்ள நிலையில், அது அநுராதபுரத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள குறித்த மூன்று அரசியல் கைதிகளும், கடந்த 28 நாட்களாக உணணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (மு)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

**காணி விற்பனைக்கு**
பருத்தித்துறை பிரதான வீதி, பஸ் நிலையத்திற்கு அருகாமையில் உள்ள காணியொன்று விற்பனைக்கு உள்ளது.
தொடர்புகளுக்கு :
0777 046 623, 077 315 1654
(C-141)

**2019 DV Lottery**
வருடம் தோறும் 55000 பேர் தெரிவு செய்யப்படும் லொற்றி விசா
விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன
விண்ணப்ப முடிவுத் திகதி 22.11.2017
திருமுருகன் கொம்நெற்
இல.216, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
[ஆல்சிலோன் புத்தகசாலை அருகாமை]
0777 554 528
இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல. 18, பிரதான வீதி, நெல்லியடி.
(1103)

**பணியாட்கள் தேவை**
புதுக்குடியிருப்பு நகரில் இயங்கி வரும் முத்துமாரி அம்மன் சைவ உணவகத்திற்கு உணவு பரிமாறுபவர்கள் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
077 344 9621, 0777 353 589
(C-140)

**கடை வாடகைக்கு**
யாழ்.நவீன சந்தைக்கு அருகாமையில் கஸ்தூரியார் வீதியில் 500 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட கடை நீண்ட கால குத்தகைக்கு கொடுக்கப்படும்.
தொடர்பு :
0777 512 648
(1101)

**விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்**
- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு
(C-055)
UK-550/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

**அமெரிக்க லொத்தர் விசா**
நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.
இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறலாம்
இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?
பங்களாதேஸ், இந்தியா,பாகிஸ்தான போன்ற சனத்தொகை கூடிய நாடுகள் இவ்வருடம் விண்ணப்பிக்க தகுதி இல்லாதமையால ஆசியாவில் இலங்கையர்களுக்கான வாய்ப்புகள் அதிகம்
0768226243
கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.
குடும்பத்தினருக்கு இரண்டு விசா சந்தர்ப்பங்கள்
இறுதி சந்தர்ப்பம் உடனே விரையுங்கள்
அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்
2016 ல் எமக்கூடாக 51 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்
இங்கே வேலை தேடிக்கொண்டிருந்த சாதாரண இளைஞர்களில் நானும் ஒருவன் V2 Travels ல் பதிந்தேன் இப்பொழுது நிரந்தர விசாவுடன் அமெரிக்கா வந்து இறங்கியவுடனேயே பெரிய நிறுவனத்தில் வேலை செய்கிறேன். எனது வாழ்க்கையில் திடீர் அதிஸ்டத்தினை ஏற்படுத்திய V2 Travels நிறுவனத்தினருக்கு எனது நன்றிகள்.

மு.பானுதரன் - நெல்லியடி
அமெரிக்க விசா வெற்றியாளர்
(C-055)
யாழ்ப்பாணம் #49A, சப்பல் லேன் 0768226241 | கிளிநொச்சி A9 வீதி, பழைய ஆஸ்பத்திரிக்கு எதிரே 0768226240 | சாவகச்சேரி 10,பேருந்து நிலையம் 0768226242 | நெல்லியடி முடக்காட்டு சந்தி 0776699892 | பருத்தித்துறை 324,யாழ் பிரதான வீதி | வல்வெட்டித்துறை யாழ் வீதி,வல்வெட்டி

**TECHNO WORLD**
A/L தொழில்நுட்பப்பிரிவு, Dayclass வெலிங்டன் சந்தி (புதிய லிங்கம் கூல்பார் அருகாமை), யாழ்ப்பாணம்.
2019, 2018 Dayclass
பொறியியற் தொழினுட்பம் — ஜெகநாதன், சேரலாதன், அருண்குமார், நிரோஜன், சிவஜன், புவிராஜ்
தொழில் நுட்பத்திற்கான விஞ்ஞானம் — சக்தி, ரமணன், ராகவன், ரஜீகரன், மதுசுதன், லவன்
உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் — பிரபல ஆசிரியர் கலைதீபன், திருக்குமரன், சாரங்கன், விஸ்ணுவர்த்தன்
தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் — லவன், உமாகாந்தன்
விவசாய விஞ்ஞானம் — விஸ்ணு, சாரங்கன்
புவியியல் — குமரன் (கொக்குவில் கிளை), தார்த்திகரன் (யாழ் கிளை)
சித்திரம் — ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
ஊடகக்கல்வி — கோபிநாத்
இலகு கணிதம் — துபீபன், கரிகரன்
வணிகக்கல்வி — M.தீசன்
கணக்கீடு — R.சுகிர்தன்
பொருளியல் — K.பிரதீபன்
A/L 2017 மாணவர்களின் செயல்முறைப்பரீட்சையின் வெற்றியைத் தொடர்ந்து :-
Bio-Tec : 45 மாணவர்கள் (95% எதிர்பார்த்த வினா)
E-Tec : 40 மாணவர்கள் (90% எதிர்பார்த்த வினா)
Dayclass பிரிவு I, பிரிவு II
ஆரம்பம் (25.10.2017) (3.30 pm) (28.10.2017) (8.00 am 3.00 pm)
A/L 2019 E-Tec, A/L 2018 Bio-Tec — சனி, ஞாயிறு 8.00 - 12.30
திங்கள், வெள்ளி 3.30 - 5.00 Paperclass
A/L 2018 ஆரம்பத்திலிருந்து Paperclass ஆரம்பம்
குறிப்பு : Dayclass மாணவர்கள் 2019, 2018 மாணவர்களுடன் இணைந்து அனைத்து பாடங்களையும் இலவசமாக கற்கலாம்.
Paperclass அனுமதி இலவசம் 077 017 5346

**கொழும்பு TRANS GULF (PVT) LTD மூலம் சிகரம் தரும்**
அமெரிக்க McDonald's நிறுவன சவுதி கிளை
குவைத், கட்டார் நாடுகளின் Marriott. HOTELS & RESORTS mowasalat
மாதம் Rs. 50-175000/- வரை உழைக்க
525 வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள்!
உணவு பரிமாறுநர் 150பேர் | சுத்திகரிப்பு உதவியாளர் 50பேர் | ஹொட்டேல் பணியாளர்கள் 175பேர் | டக்சி ட்ரைவர் 150பேர்
ஹொட்டேல் பயிற்சி பெற்றவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு முன்னுரிமை
ஏனையோருக்கு விசேட ஹொட்டேல் மற்றும் ஆங்கில மொழிப் பயிற்சி வழங்கப்படும்
உணவு - தங்குமிடம் - விமானச்சீட்டு - மருத்துவ வசதி/வயதெல்லை 21-45
மேலதிக விபரங்களுக்கு 0777 324 004
TGL SINCE 1990 Trans Gulf (Pvt) Ltd., 90, First Floor, Chatham Street, Colombo 1 T.P.: 0114426222 www.tgl.lk
SIKARAM ACADEMY Business - Hospitality - Media FAST TRACK to CAREERS 175, 1ம் குறுக்குத்தெரு, (வேம்படி வீதி), யாழ்ப்பாணம் தொ.பே.: 021 - 222 00 11 www.sikaram.lk
(C-143)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட் யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.10.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.